உ

பரமபதிதுணை.

இம்முடிப்பட்டம்பெற்ற

காங்கேயர்செய்த

# உரிச்சொல்நிகண்டு.

---

இஃது

இன்ஸ்பெக்டிங் இஸ்கூல்மேஸ்டர் பென்சனர்

வீராட்சிமங்கலம்

## வித்துவான்-தி. சிவன்பிள்ளை

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்துவகுத்த வுரையோடும்,

கவனர்மெண்டு நார்மல்பாடசாலைத்தமிழ்ப்புலவராயிருந்த

சோடசாவதானம்

## தி-க. சுப்பராயசெட்டியார்

முன்னிலையிலும் பரிசோதித்து,

## ஷ சிவன்பிள்ளையால்

சென்னை:

ஆதிகலாநிதியச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

---

விகுர்தி௵ ஆவணி௴

இதன் விலை அணா - (அ).

*Registered Copy-right.*

# முகவுரை.

இம்முடிப்பட்டம்பெற்ற காங்கேயராற்செய்த

## உரிச்சொல்நிகண்டு.

பல இடங்களிலுஞ்சிதறி வழங்குகின்றனவற்றைப் பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்துச் சிதறிக்கிடந்தனவற்றை முறைப்படுத்தி, அவற்றோடு வழங்காதொழிந்த ஒலிபற்றிய பெயர்த்தொகுதியையும் பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதியையும் சேர்த்து இந்நிகண்டு உலோகோபகாரமாய் நிலைபெற அச்சிட்டேன். இன்னும் விடுபட்டசெய்யுள்களுளவேல் அவற்றைக் கல்விப்புலமைசான்ற அறிவுடையோர் தெரிவிக்கில், அவர்கள் நாமதேயத்தோடு இரண்டாம் பதிப்பில் அச்சிடப்படும். இவை வேண்டியவர்கள் என்னிடத்திலும், வீராட்சிமங்கலம் எனது மருமகன் க. கந்தசாமிபிள்ளையிடத்திலும், சென்னை எழும்பூர் தி-க. சுப்பராயசெட்டியாரிடத்திலும் தபாற்செலவோடு பெற்றுக்கொள்ளலாம்.

உரிச்சொல்நிகண்டு உரையோடு அணா-அ. தபாற்செலவு அணா-க.

பிங்கலநிகண்டுஉரையோடு ரூ உ - அ. தபாற்செலவு அணா - ௩.

இங்ஙனம்,

வித்துவான்

தி. சிவன்பிள்ளை,

இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மேஸ்டர் பென்சனர்,
கோயமுத்தூர் பொள்ளாச்சி.

## இனிப் பதிப்பிக்கப்படுபவை.

யாப்பருங்கலவிருத்தி.
இசைமரபு.
பரதசூடாமணி.
இசைநுணுக்கம்.
பன்னிருபடலம்.
வளையாபதி.
பன்னிருபாட்டியல்.
கவிசாகரம்.
பிரபந்ததீபம்.
தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடர் உரையோடு.
இரேவணாராத்தியர் சூத்திரவகராதி.

உ

பரமபதிதுணை.

# உரிச்சொல்நிகண்டு.

## கடவுள்வணக்கம்,

வெண்பா.

மதிபாய்சடைமுடித்துமாசுணப்பைம்பூட்டுச்
சதிபாய்குறுந்தாட்டுத்தான—நதிபாய்
இருகவுட்டுமுக்கட்டுநால்வாய்த்தென் னுள்ளம்
உருகவிட்டுநின்றவொளி.

(இதன்பொருள்) என் உள்ளம் - எனது மனம், விட்டு உருக நின்ற ஒளி - நெக்குவிட்டுருகக் காட்சிதந்து பிரணவவடிவாய் நின்ற ஒருபொருள், மதிபாய் சடை முடித்து - இளஞ் சந்திரகிரணம் பாவிய சடாமுடியையுடையது, மாசுணம் பை பூட்டு - பாம்பாகிய பசிய ஆபரணத்தையுடையது, சதிபாய் குறுந்தாட்டு-தாளவடிவோடு மாறுபட்ட சிறிய காலையுடையது, தானம் நதிபாய் இருகவுட்டு - மதமாகிய நதி பெருக்கெடுத்துப்பாயும் இரண்டு கபோலங்களையுமுடையது, முக்கட்டு - மூன்று கண்களையுடையது, நால்வாய்த்து - நான்றசையும் வாயையுடையது.—எ-று. (இப்பொருளை வணங்க இந்நூல் இனிது முடியும்.) என்றபடி.

பலசொல்லும் பொருளும் எஞ்சநிற்றலால் இது இசையெச்சம். வேறுபொருளுடையதாயினும் சொல் முரண்தோன்ற நால்வாய்த்து என்றார். பொருளின் தன்மையை யெடுத்துக்கூறுதலால் பொருட்டன்மையணி.

# உரிச்சொல் நிகண்டு.

## முதலாவது
## தெய்வப்பெயர்த்தொகுதி.

க. திருமாலுஞ் செங்கமல மேயானுங் காணப்
பெருமான் பிறைசூடும் பெம்மா - னருண்மூர்த்தி
நன்னெஞ்சி னன்மறையோன் றில்லை நடம்புரிவே
னென்னெஞ்சின் மேய விறை. (க)

உ. சங்கரன் சூணு சயம்புதிரி யம்பக
னங்கண னாதி யழலேந்தி - பைங்கயிலை
வெற்பன் விடையன் விமலன் விரிசடையன்
நிற்பன் புவன நிறைந்து. (உ)

ங. அரவன் புராரி புராந்தக னண்ணல்
பரமன் பரசுதரன் பித்த - னரனே
கிரியை வளைத்தோன் கிரிசன் கிரீசன்
வரியுழுவைத் தோலோன் வரன். (ங)

ச. ஈச னிருமல னீசான னெஞ்ஞான்று
நாச மிலாதா னடனம்பன் - மாசறுசீர்க்
கங்கை தரித்தோன் கறைக்கண்டன் கண்ணுதலோன்
சங்காரன் கால சமன். (ச)

ரு. ஐந்து முகத்தோ னழற்கரத்தோ னண்டமொலா
முய்ந்திடநஞ் சுண்டோ னுருத்திரன் - றந்தி
யுரிபோர்வை போர்த்தோ னுமாபதி மாதேவன்
பரவரியோன் றேவர் பதி. (ரு)

# பெயர்ப்பிரிவு.

---

௧. (இ-ள்.) சிவன்பெயர்.—திருமாலும் பிரமனுங் காணாப் பெருமான், பிறைசூடும் பெம்மான், அருண்மூர்த்தி, நான்மறையோன், நடம்புரிவோன், இறை. (௬)

௨. சங்கரன், தாணு, சயம்பு, திரியம்பகன், அங்கணன், ஆதி, அழலேந்தி, கயிலைவெற்பன், விடையன், விமலன், சடையன், புவனநிறைந்தோன். (௧௨)

௩. அரவன், புராரி, புராந்தகன், அண்ணல், பரமன், பரசுதரன், பித்தன், அரன், கிரியை வளைத்தோன், கிரிசன், கிரீசன், புலித்தோலோன், வரன். (௧௩)

௪. ஈசன், நிருமலன், ஈசானன், நாசமிலாதான், நடன், நம்பன், கங்கைதரித்தோன், கறைக்கண்டன், கண்ணுதலோன், சங்காரன், காலசமன். (௧௧)

௫. ஐந்துமுகத்தோன், அழற்கரத்தோன், நஞ்சுண்டோன், உருத்திரன், தந்தியுரிபோர்த்தோன், உமாபதி, மாதேவன், துதித்தற்கரியோன், தேவர்பதி. (௯)

௬. நக்கன் பசுபதி நாரிபா கன்சிவன்
அக்கர வார்த்தோ னழலாடி - முக்கண்ணன்
ஈசுர னெண்டோள னேறூர்ந்தோ னந்திவண்ணன்
பாசுபதன் பஞ்சா னனன். (௬)

௭. காலகா லன்காள கண்டன் கபாலிதிரி
சூலபாணி யெண்மூர்த்தி சோமதர - ஞாலதர
னீறாடி மன்றாடி நித்தனத்த னெண்குணன்மின்
கூறாளன் பிஞ்ஞகன் கோன். (௭)

௮. இலகு மதிச்சடையோன் பாகத்தி னேழை
மலையரையன் பெற்ற மகணின் - மலிசாம்
பவியம் பிகைதற் பரைசத்தி யையை
கவுரிசிவை மாதவன்றங் கை. (௮)

௯. தாரகற் காய்ந்தாள் பயிரவி சாமுண்டி
கூரிய மூவிலை வேற்குமரி - பேரெழி
லாளியூர் சூலி யலகைக் கொடியரிவை
காளி யுலகிற்கோர் காப்பு. (௯)

௧௦. இகன்மகிடற் காய்ந்தா ளெழிற்குமரி நீலி
சகநிறத் தந்தரி துர்க்கை - பகவதி
வெய்ய சயமகள் விந்தைவிறற் கொற்றவை
யையை யடலாரி யை. (௧௦)

௧௧. பால்புனை நீற்றோன் மகன்பார் வதிமைந்தன்
மான்மருகன் காமவேண் மைத்துநன் - வேன்முருகன்
மூன்றோன் கணபதி மூவா விநாயக
னொன்னோய்ப் பிணிதணிக்கு மேறு. (௧௧)

௬. நக்கன், பசுபதி, நாரிபாகன், அக்கரவார்த்தோன், அழலாடி, மூக்கண்ணன், ஈசுரன், எண்டோளன், ஏறூர்ந்தோன், அந்திவண்ணன், பாசுபதன், பஞ்சானனன். (௧௨)

௭. காலகாலன், காளகண்டன், கபாலி, திரிசூலபாணி, எண்மூர்த்தி, சோமதரன், ஆலதரன், நீறாடி, மன்றாடி, நித்தன், அத்தன், எண்குணன், பின்கூறுளன், பிஞ்ஞகன், கோன். (எகூ)

௮. பார்வதியின்பெயர்.—மதிச்சடையோன் பாகத்தேழை, மலையரையன்பெற்ற மகள், நின்மலி, சாம்பவி, அம்பிகை, தற்பரை, சத்தி, ஐயை, கவுரி, சிவை, மாதவன்றங்கை. (௧௨)

௯. காளியின்பெயர்.—தாரகற்காய்ந்தாள், பயிரவி, சாமுண்டி, மூவிலைவேற்குமரி, ஆளியூர்சூலி, அலகைக்கொடியரிவை. (௬)

௧௦. துர்க்கையின்பெயர்.—மகிடற்காய்ந்தாள், குமரி, நீலி, அந்தரி, பகவதி, சயமகள், விந்தை, கொற்றவை, ஐயை, ஆரியை. (௧௦)

௧௧. விநாயகன்பெயர்.—வெண்ணீற்றோன்மகன், பார்வதிமைந்தன், மான்மருகன், காமவேண்மைத்துனன், முருகன்முன்னோன், கணபதி. (௬)

௧௨. அங்குச பாச தரனாகு வாகன
னைங்கரத்தோ *னாறு நிகர்மதத்தன் - வெங்கண்
ணிருமருப்பு மாமுகத்தன் மூக்க ணிறைவ
னொருமருப்ப னென்னுள்ளத் தோன். (௧௨).

௧௩. முருகன் விசாகன் முதல்வன்சேய் மாயோன்
மருகன் குகன்குமரன் வானோர்க் - கொருதலைவன்
கங்கை மகன்கந்தன் கார்த்திகே யன்கடம்பன்
மங்கைமக னென்சேம வைப்பு. (௧௩)

௧௪. ஆறிரண்டு தோளா னயிலான் மயிலூர்தி
யாறு முகத்தா னமரர்க்காச் - சீறவுணர்
போர்கடிந்தான் குரகனைக் காய்ந்தான் பொருப்பெறிந்தான்
சூர்தடிந்தான் வேளென் றுணை. (௧௪)

௧௫. நெடியோன் குறளுருவ னேமியோன் புட்சேர்
கொடியோன் கரியோன்கோ விந்தன் - படியிடந்தோ
னாயன் முராரி யரிகேச வன்கண்ணன்
மாய னுலகளந்தோன் மால். (௧௫)

௧௬. ஆயிரம் பேரா னநந்தன் பணிசயன
னேயமுட னெங்குமாய் நின்றபிரான் - றூயவ
னில்லது முள்ளதுமா மெங்கோன் றிருமடர்தை
வல்லவன் பின்னைக்கு மன். (௧௬)

௧௭. தாமரையாள் செய்யாள் கரிய வரிதேவி
மாமலரா ளிந்திரைபொன் செந்திருவி - னாமமா
மன்மதன் மீனுயர்த்தோன் மாரனநங் கன்கருப்பு
வின்மதனன் வீப்பகழி வேள். (௧௭)

---

* ஆறுநிகர்மதத்தன் அறுவகையுட்சமயிகளால் வணங்கப்பட்டவன்.

கஉ. அங்குசபாசதரன், ஆகுவாகனன், ஐங்கரத்தோன், ஆறுநிகர் மதத்தன், யானைமுகத்தன், இறைவன், ஒருமருப்பன். ஆ (கரு)

கங. முருகன்பெயர்.—விசாகன், முதல்வன்சேய், மாயோன்மரு மகன், குகன், குமரன், வானோர்தலைவன், கங்கைமகன், கந்தன், கார்த்திகேயன், கடம்பன், மங்கைமகன். (கக)

கச. பன்னிரண்டுதோளான், அயிலான், மயிலூர்தி, ஆறுமுகத்தான், அவுணர்போர்கடிந்தான், தாரகனைக்காய்ந்தான், பொருப்பெறிந்தான், சூர்தடிந்தான், வேள். ஆ (உ0)

கரு. திருமாலின்பெயர்.—நெடியோன், குறளுருவன், நேமியோன், புட்கொடியோன், கரியோன், கோவிந்தன், படியிடந்தோன், ஆயன், முராரி, அரி, கேசவன், கண்ணன், மாயன், உலகளந்தோன். (கச)

கசு. ஆயிரம்பேரான், அநந்தன், பணிசயனன், எங்குநின்றபிரான், தூயவன், இல்லதுமுள்ளதுமானவன், திருமடந்தைவல்லவன், பின்னைமன். ஆ (உஉ)

கஎ. திருமகள்பெயர்.—தாமரையாள், செய்யாள், அரிதேவி, மா, மலராள், இந்திரை, பொன். (எ)

மன்மதன்பெயர்.—மீனுயர்த்தோன், மாரன், அநங்கன், கருப்புவில்லி, மதனன், புட்பபாணன், வேள். (எ)

௧அ. காமனிரதி பதிசம் பரசூதன்
ேமின் மதுசகன் சித்தசன் - பூமகண்
மைந்தன் மகரக் கொடியோன் மனேபவனம்
பைந்துடையோன் கந்தர்ப்ப ளும். (௧அ)

௧௯. பிரமன் பிதாமக னன்முகன் போத
னிரணியக ருப்பனிறை சூதன் - பரமேட்டி
தாதா விரிஞ்சன் சயம்புசதா நந்தனயன்
வேதா விதாதா விதி. (௧௯)

௨0. நாமகள் பாரதி வாணி கலைமகள்
பூமகன் றேவியாம் பொன்னுலகி - னமஞ்
சுரருலக நாகங்கோ வானஞ் சுவர்க்கம்
விரிதுறக்க மேலுலகம் விண். (௨0)

௨௧. மகவான் புரந்தரன் வச்சிர பாணி
யிகல்வா சவனமரர்க் கீசன - முகிலூர்தி
யந்தர நாத னயிரா வதப்பாக
னிந்திரன் வானோர் க்கிறை. (௨௧)

௨௨. நிறை செல்வன் புட்பகத் தேரோனிதியோ
னுறுதனதன் கூற்றை யுதைத்த - விறைவற்
கபேத சகாய னடலியக்கர் கோமான்
குபேர னளகையார் கோன். (௨௨)

௨௩. சமன்மறலி யந்தகன் றண்டதரன் கூற்று
நமன் றருமன் கால னடுவன் - யமன்பேர்
வலநதி கேள்வன் வருண பகவான்
சலபதி பாச தரன். (௨௩)

கஅ. காமன்பெயர்.—இரதிபதி, சம்பரசூதன், மதுசகன், சித்தசன், பூமகண்மைந்தன், மகரக்கொடியோன், மனோபவன், அம்பைந்துடையோன், கந்தர்ப்பன். ஆடீ (கசு)

கக. பிரமன்பெயர்.—பிதாமகன், நான்முகன், போதன், இரணியகருப்பன், ஈசன்தேர்ப்பாகன், பரமேட்டி, தாதா, விரிஞ்சன், சயம்பு, சதானந்தன், அயன், வேதா, விதாதா, விதி. (கச)

உ0. நாமகளின்பெயர்.—பாரதி, வாணி, கலைமகள், பூமகன்றேவி. (ச)

பொன்னுலகின்பெயர்.—சுரருலகம், நாகம், கோ, வானம், சுவர்க்கம், துறக்கம், மேலுலகம், விண். (அ)

உக. இந்திரன்பெயர்.—மகவான், புரந்தரன், வச்சிரபாணி, வாசவன், அமரர்க்கீசன், முகிலூர்தி, அந்தரநாதன், அயிராவதப்பாகன், இந்திரன், வானோரிறை. (க0)

உஉ. குபேரன் பெயர்.—நிறைசெல்வன், புட்பகத்தேரோன், நிதியோன், தனதன், இறைசகாயன், இயக்கர்கோமான், அளகையார்கோன். (எ)

உங. இயமன்பெயர்.—சமன், மறலி, அந்தகன், தண்டதரன், கூற்று, நமன், தருமன், காலன், நடுவன். (க)

வருணன்பெயர்.—நதிகேள்வன், சலபதி, பாசதரன். (ங)

௨௪. இரவி தபன னினன்பதங்கன் வெய்யோ
னருணன் மார்த் தாண்ட னருக்கன் - றரணி
யுதயனா தித்தன் றினகரன் பானு
கதிரரி சூரியனென் கண். (௨௪)

௨௫. அமுதகதி ரோன்விது வம்புலி யாலோன்
குமுத சகாயன் குபேர - னிமகர
னிந்துமதி திங்க ளிரவோ னுடுபதி
சந்திரன் சோமன் சசி. (௨௫)

௨௬. அங்கார கன்சே யழவக்கி ரன்பௌமன்
றங்கார் குசனே தனாமகன் - பொங்காரல்
செவ்வாய் புதன்புந்தி மேதைநிபு ணன்சௌம்யன்
கைவார் கணக்கன்மால் காண். (௨௬)

௨௭. அரசன்பொ னந்தணன் மந்திரி யாசான்
சுரகுரு நாமம் வியாழ - மருவுபுகர்
சுக்கிரன் பார்க்கவன் சுங்கன் கவிவெள்ளி
* தக்காரி மந்தன் சநி. (௨௭)

௨௮. கூறு மருணங் கொறிமறி மேடமிவை
ஏறு விடைமூரி இடபமாங் - தேறிய
தண்டு மிதுனஞ் சவையிரட்டை யாழ்விழவு
ஞெண்டு நள்ளி கர்க்கடக மாம். (௨௮)

---

* தக்க என்னும் பெயரொச்சத்தின்ஈறு தொக்கது.

உச. சூரியன்பெயர்.—இரவி, தபனன், இனன்,பதங்கன், வெய்யோன், அருணன், மார்த்தாண்டன், அருக்கன், தரணி, உதயன், ஆதித்தன், தினகரன், பானு, கதிர், அரி. (கரு)

உரு. சந்திரன்பெயர்.—அமுதககிரோன், விது, அம்புலி, ஆலோன், குமுதசகாயன், குபேரன், இமகரன், இந்து, மதி, திங்கள், இரவோன், உடுபதி, சோமன், சசி. (கச)

உசு. செவ்வாயின்பெயர்.—அங்காரகன், சேய், அழல், வக்கிரன், பௌமன், குசன், தராமகன், ஆரல். (அ)

புதன்பெயர்.—புந்தி, மேதை, நிபுணன், சௌம்யன், கணக்கன், மால். (சு)

உஎ. வியாழத்தின்பெயர்.—அரசன், பொன், அந்தணன், மந்திரி, ஆசான், சுரகுரு. (சு)

வெள்ளியின்பெயர்.—புகர், சுக்கிரன், பார்க்கவன், சுங்கன், கவி. (ரு)

சனியின்பெயர்.—காரி, மந்தன். (உ)

உஅ. மேடத்தின்பெயர்.—அருணம், கொறி, மறி. (ங)

இடபத்தின்பெயர்.—ஏறு, விடை, மூரி. (ங)

மிதுனத்தின் பெயர்.—தண்டு, சவை, இரட்டை, யாழ், விழவு. (ரு)

கர்க்கடகத்தின்பெயர்.—ஞெண்டு, நள்ளி. (உ)

உகூ. கொலையரி யாளி கொடும்புலி சிங்கம்
முலைமடந்தை கன்னிபெயர் முற்றும் - துலைநிறை
தூக்குத்து லாமாகுஞ் சொல்லுந் தெறுக்காறேள்
தாக்குஞ் சிலைவிற் றனு. (உகூ)

௩௦. வடிவிற் கலைசுறு மானே மகரங்
குடங்கரீ ரஞ்சாடி கும்ப -நெடுமயிலை
வல்ல சலசரமீன் மச்சமிவை மீன
மெல்லோனா ராசியிவை யாம். (௩௦)

௩க. அமுதா சனர்விபுத ராதித்தர் விண்ணோ
ரிமை யோர்புத் தேளி ரிலேக - ரமரர்
வரர்தா னவர்பகைவர் பொன்னுலகில் வாழ்வார்
சுரர்வா னவர்சுவர்க்கத் தோர். (௩க)

௩உ. தானவர் தண்டா ரவுணர் திதிபுதல்வர்
வானவர் மாற்றலர் வல்லசுரர் - மேனி
கரப்போர் நிருதர் நிசாசரர் கார்வண்ண
ரரக்கர் பிசிதா சனர். (௩உ)

௩௩. தாரகை சோதி தயங்குதா ராகணி
மேருடைநன்னு ளுடு மீனின் - பேரா
மிசைபுல மாதிரங்கோ காட்டையரிதந்
திசைகுப மாசைதேந் திக்கு. (௩௩)

௩௪. ஆகாய மந்தரமீ வானம் பரம்விசும்பு
மாகம் வெளிமா திரங்கொண்டன் - மேகமுகில்
கார்கனம்விண் கொண்மூ பயோதரம்வா னம்புதம்
வார்புயன்மை மாரி மழை. (௩௪)

உக. சிங்கத்தின்பெயர்.—அரி, யாளி, கொடும்புலி. (ங)
கன்னியின்பெயர்.—மடந்தைபெயரனைத்துமாம்.
துலாத்தின்பெயர்.—துலை, நிறை, தூக்கு. (ங)
விருச்சிகத்தின்பெயர்.—தெறுக்கால், தேள். (உ)
தனுவின்பெயர்.—சிலை, வில். (உ)

நூ0. மகரத்தின்பெயர்.—கலை, சுறு, மான். (ங)
கும்பத்தின்பெயர்.—குடம், கரீரம், சாடி. (ங)
மீனத்தின்பெயர்.—மயிலை, சலசரம், மீன், மச்சம். (ச)
இராசியின்பெயர்.—ஓரை.

நூக. தேவர்பெயர்.—அமுதாசனர், விபுதர், ஆதித்தர், விண்ணோர், இமையோர், புத்தேளிர், இலேகர், அமரர், வரர், தானவர்பகைவர், பொன்னுலகோர், சுரர், வானவர், சுவர்க்கத்தோர். (கச)

நூஉ. அசுரர்பெயர்.—தானவர், அவுணர், திதிபுதல்வர், வானவர் மாற்றலர். (ச)
இராக்கதர்பெயர்.—மேனிகரப்போர், நிருதர், நிசாசரர், கார்வண்ணர், அரக்கர், பிசிதாசனர். (சு)

நூங. வான்மீனின்பெயர்.—தாரகை, சோதி, தாராகணம், நாள், உடு. (ரு)
திக்கின்பெயர்.—புலம், மாதிரம், கோ, காட்டை, அரிதம், திசை, ககுபம், ஆசை, தேம். (க)

நூச. ஆகாயத்தின்பெயர்.—அந்தரம், மீ, வான், அம்பரம், விசும்பு, மாகம், வெளி, மாதிரம். (அ)
மேகத்தின்பெயர்.—கொண்டல், முகில், கார், கனம், விண், கொண்மூ, பயோதரம், வான், அம்புதம், புயல், மை, மாரி, மழை. (சங)

௩௫. சாதவே தாவே தபனன் றனஞ்சயன்
சோதி யுதாசன னேதூம - கேது
சுசியே சுவலனே சித்திரபானு
வசுவரி வாயு சகன். (௩௫)

௩௬. கனல்தழ நீத்தழல் பாகவன் வன்னி
யனல்சிகி யங்கி யெரியா - மநிலங்கா
லூதை பவன னுயிரொலிவங் கூழ்சலனன்
வர்தம் வளிமா ருதம். (௩௬)

௩௭. கந்த வகனே சமீரன் சதாகதி
கந்தவர் கன்பிர பஞ்சனன் - வந்து
பரிசன னுசுகனே வாயுபவ மான
னரிமா பலனேகாற் றும். (௩௭)

௩௮. வார்வருண மால மலரோ யகிலமுகஞ்
சீவனீ யங்குசம் புட்கரஞ் - சீவனஞ்
சம்பரங் காண்டங் கனவிரதங் கோவற
லம்புனலி னமங்க ளாம். (௩௮)

௩௯. வாரி சலஞ்சலிலந் தோயம் வனம்புவனம்
நீரங்கீ லாலங் கவந்தங்கார் - நாரம்
பயமுதகம் பானீயங் கங் கமலம் பாணி
யமமுத மப்பம்பு வாம். (௩௯)

௪௦. தீப வதிசிந்து வுந்தி துனிதடினி
யாபகை தீர்த்திகை யாறுநதி - தாபந்தீர்
பாகீ ரதிவிமலை கங்கை திரிபதகை
நாகா லயத்தோர் நதி. (௪௦)

௩௫. தீயின்பெயர்.—சாதவேதா, தபனன், தனஞ்சயன், சோதி, உதாசனன், தூமகேது, சுசி, சுவலன், சித்திரபானு, வசு, அரி, வாயுசகன். (௧௨)

௩௬. கனல், அழல், தழல், பாவகன், வன்னி, அனல், சிகி, அங்கி, எரி. ஆ (௨௧)

காற்றின்பெயர்.—அநிலம், கால், ஊதை, பவனன், உயிர், ஒலி, வங்கூழ், சலனன், வாதம், வளி, மாருதம். (௧௧)

௩௭. கந்தவகன், சமீரன், சதாகதி, கந்தவாகன், பிரபஞ்சனன், வந்து, பரிசனன், ஆசுகன்,வாயு, பவமானன், அரி, மாபலன்.—௧௨. ஆ (௨௩)

௩௮. புனலின்பெயர்.—வார், வருணம், ஆலம், அலர், அகிலமுகம், சீவனீயம், குசம், புட்கரம், சீவனம், சம்பரம், காண்டம், கனவிரதம், கோ, அறல், அம். (௧௫)

௩௯. வாரி, சலம், சலிலம், தோயம், வனம், புவனம், நீரம், கீலாலம், கவந்தம், கார், நாரம், பயம், உதகம், பானீயம், கம், கமலம், பாணி, அயம், அமுதம், அப்பு, அம்பு. ஆ (௩௬)

௪௦. ஆற்றின்பெயர்.—தீபவதி, சிந்து, உந்தி, துனி, தடினி, ஆபகை, தீர்த்திகை, நதி. (௮)

கங்கையின்பெயர்.—பாகீரதி, விமலை, திரிபதகை. தேவநதி. (௪)

சக. ஆய்குறள் பாரிடம் பூதங் கடிமண்ணை
பேய்குண பாசி பிசாசலகை - யோய்கழுது
வேதாளங் கூளி யழனே சவங்குணுங்கு
பேதாள் குணபம் பிணம். (சக)

சஉ. எல்லை திவசந் தினந்திவா வாம்பக
லெல்லி விபாவரி யாமினி - யல்லே
யிரசனி கங்கு னிசாநிசி நத்த
மிரவின்பெயரா மிவை. (சஉ)

சங. வெடிய சனி செல்லு விண்ணேறுருமு
இடியின்பேர் மின்ன விலங்கல் - தடிமின்னே
சஞ்சலை சம்பை சபலை கனருசி
மிஞ்சு தடித்து மிவை மின். (சங)

முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

---

## இரண்டாவது
## மக்கட்பெயர்த்தொகுதி.

சச. ஐயர் துறந்தோ ரருந்தவர் பற்றற்றோர்
பொய்யிகந்தோ ரைந்து புலன்வென்றோர் - மெய்யர்
கனிமூல சாகா சனர்கோபங் காய்ந்தோர்
முனிவரற வோர்மோனி கள். (க)

சரு. மறையவர் வேதியர் வையசத் தேவ
ரறுதொழிலோ ரந்தணர் பார்ப்பா - ரிறைவ
னரபதி கொற்றவன் வேந்தன் முதல்வன்
புரவலன் கோபூபதி. (உ)

சக. பூதத்தின்பெயர்.—குறள், பாரிடம். (உ)
பேயின்பெயர்.—கடி, மண்ணை, பிசாசு, குணபாசி, அலகை, கழுது, வேதாளம், கூளி, அழன், சவம், குணுங்கு, குணபம், பிணம். (கரு)

சஉ. நாளின்பெயர்.—எல்லை, திவசம், தினம். (ங)
பகலின்பெயர்.—திவா. (க)
இரவின்பெயர்.—எல்லி, விபாவரி, யாமினி, அல், இரசனி, கங்குல், நிசா, நிசி, நத்தம். (கூ)

சங. இடியின்பெயர்.—வெடி, அசனி, செல், விண்ணேறு, உரும். (ரு)
மின்னின்பெயர்.—மின்னல், இலங்கல், தடிமின், சஞ்சலை, சம்பை, சபலை, கனருசி, தடித்து. (அ)

தெய்வப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

## மக்கட்பெயர்த்தொகுதி.

சச. முனிவர்பெயர்.—ஐயர், துறந்தோர், அருந்தவர், பற்றற்றோர், பொய்யிகந்தோர், ஐம்புலன்வென்றோர், மெய்யர், கனிமூலசாகர்சனர், கோபங்காய்ந்தோர், அறவோர், யோனிகள். (கக)

சரு. பார்ப்பார்பெயர்.—மறையவர், வேதியர், வையகத்தேவர், அறுதொழிலோர், அந்தணர். (ரு)
அரசன்பெயர்.—இறைவன், நரபதி, கொற்றவன், வேந்தன், முதல்வன், புரவலன், கோ, பூபதி. (அ)

சசு. ஒத்தபொருள் செய்வோ ரயனூரு வில்வந்தோர்
முத்தொழி லோர்வணிகர் மொய்தனர்ச-துர்த்தர்
எழின்மலரோன் பாதத்தில் வந்தோ ரிசையேர்த்
தொழிலுடை யோர்சூத்தி ரர். (ரு)

சஎ. நரர்மனிதர் மானிடர் மானவர் மாக்கள்
புருடரா ணுடவ ராடூஉ - வரிவைபெண்
ணங்கனை நாரி வனிதைமக டூஉமாது
மங்கை மடந்தை மகள். (ச)

சஅ. பேடி கிலீபமலிபெண் டகஞ்சண்டம
நீடில் குறள்வா மனஞ்சிந்து - கோடிய
கூன்பெய ராகு முடன்முடங்கல் கொள்கையில்லா
வூன்பிண்ட மில்லா வுறுப்பு. (ங)

சகூ. தாதை பிதாவைய னத்தனப் பன்றந்தை
யேதமி லன்னையீன் றுள்பயந்தாண் - மாதாதாய்
சந்ததி தோன்றல் சிறுவன்சேய் புத்திரன்
மைந்தன் புதல்வன் மகன். (சு)

ருo. கணவன் பதிகாந்தன் காதல னண்பன்
றுணைவன் றலைவன் கொழுநன் - மணவாளன்
றற்பா ரியைதுணைவி தாரமில் லாள்மனைவி
கற்பான்மிக் காள்கா தலி. (எ)

ருக. குடும்பந் துணைநட்புக் கூளிகேள் சுற்றங்
கடும்புதமர் மித்திரர் நட்டா - ரடைந்தவர்
பற்றுயர் பந்தம் விருந்தாந் தொடரொக்க
லுற்றார் கிளைஞ ருறவு. (அ)

௪௬. வைசியர்பெயர்.—பொருள்செய்வோர், அயனூருவில்வந்தோர், முத்தொழிலோர், வணிகர், தனர். (௫)
சூத்திரர்பெயர்.—சதுர்த்தர், மலரோன் பாதத்தில் வந்தோர், ஏர்த்தொழிலுடையோர். (௩)

௪௭. மனிதர்பெயர்.—நரர், மானிடர், மானவர், மாக்கள். (௪)
ஆண்மகன்பெயர்.—புருடர், ஆடவர், ஆடூஉ. (௩)
பெண்மகள்பெயர்.—அரிவை, அங்கனை, நாரி, வனிதை, மகடூஉ, மாது, மங்கை, மடந்தை, மகள். (௯)

௪௮. பேடியின்பெயர்.—கிலீபம், அலி, பெண்டகம், சண்டம் (௪)
குறளின்பெயர்.—வாமனம், சிந்து. (௨)
கூனின்பெயர்.—முடன், முடங்கல். (௨)
பிண்டமில்லாவுறுப்பின்பெயர்.—கொள்கையில்லானூன்.

௪௯. தந்தையின்பெயர்.—தாதை, பிதா, ஐயன், அத்தன், அப்பன். (௫)
தாயின்பெயர்—அன்னை, ஈன்றாள், பயந்தாள், மாதா. (௪)
மகன்பெயர்.—சந்ததி, தோன்றல், சிறுவன், சேய், புத்திரன், மைந்தன், புதல்வன். (௭)

௫௦. மணவாளன்பெயர்.—கணவன், பதி, காந்தன், காதலன், நண்பன், துணைவன், தலைவன், கொழுநன். (௮)
மனைவியின் பெயர்.—பாரியை, துணைவி, தாரம், இல்லாள், கற்பின் மிக்காள், காதலி. (௬)

௫௧. உறவின்பெயர்.—குடும்பம், துணை, நட்பு, கூளி, கேள், சுற்றம், கடும்பு, தமர், மித்திரர், நட்டார், அடைந்தவர், பற்றுயர், பந்து, விருந்து, தொடர், ஒக்கல், உற்றார், கிளைஞர். (க௮)

ருஉ. குறவர் சவரர் புளிஞர் கிராதர்
மறவ ரெயினர் வியாதர் - விறல்வேடர்
கானவர் பேரண்டர் கோவலர் கோபால
ரானிடைய ராயர் பெயராம். (கூ)

ருரு. ஆரியர் நல்லோ ரறிவுடையோர் பண்டிதர்
சீரியர் சான்றோ ருரவோர்பேர் - பூரியர்
நில்லா மனத்தசடர் நீசர் நெறியில்லார்
கல்லார் கயவர் கலர். (கO)

ருச. மன்னுதார் மாற்றார் மருவலர்வேண் டாரடையார்
இன்னுதார் கூடா ரிகலிந - ரொன்னுதார்
செற்ற ரமித்திரர் சேரார்நண் ணார்செறுநர்
பற்றார் பகைவர் பரர். (கக)

ருரு. வீரர் வயவர் மறவர் மிகுமள்ளர்
தீரரபயர் தெறுந் தொழிலோர் - சூரர்
பொருந ரயிலுழவர் போகா விறலோர்
செருநர் செருத்தொழி லோர். (கஉ)

ருகூ. துறுபடைமுன் செல்லவர் தூசியணி நெற்றி
யுறு படைகை யொட்டுண்டை யூகம் - தெறுசேனை
யானைதேர் மாச்சது ரங்கமா குந்தண்டு
தானைகட கந்தந் திரம். (கரு)

ருஎ. சரணடி பாதந்தாள் சானு முழந்தாள்
திரளுங் குறங்குகவா னுரு - வளைநிதம்ப
மல்குன் மருங்கு னடுவு நுசுப்பிவை
யொல்கு மிடைக்கொத்த பெயர். (கச)

௫௨. வேடர்பெயர்.—குறவர், சவரர், புளினர், கிராதர், மறவர், எயினர், வியாதர், கானவர். (அ)

இடையர்பெயர்—அண்டர், கோவலர், கோபாலர், ஆயர் (ச)

௫௩. அறிவுடையோர்பெயர்.—ஆரியர், நல்லோர், பண்டிதர், சீரியர், சான்றோர், உரவோர். (சு)

கீழ்மக்கள்பெயர்.—பூரியர், அசடர், நீசர், நெறியில்லார், கல்லார், கயவர், கலர். (எ)

௫௪. பகைவர்பெயர்.—மன்னுதார், மாற்றார், மருவலர், வேண்டார், அடையார், இன்னுதார், கூடார், இகலினர், ஒன்னுதார், செற்றார், அமித்திரர், சேரார், நண்ணார், செறுநர் பற்றார், பரர். (கசு)

௫௫. படைவீரர்பெயர்.—வயவர், மறவர், மள்ளர், தீரர், அபயர், தெறுந்தொழிலோர், சூரர், பொருநர், அயிலுழவர், விறலோர், செருநர், செருத்தொழிலோர். (கஉ)

௫௬. கொடிப்படையின்பெயர்—படைமுன்செல்லல், தார், தூசி.

படைவகுப்பின்பெயர்.—அணி, நெற்றி, கை, ஒட்டு, உண்டை, யூகம். (சு)

சதுரங்கசேனையின்பெயர்.—சேனை, யானை, தேர், குதிரை. (ச)

தண்டின்பெயர்.—தானை, கடகம், தந்திரம். (ங.)

(௫எ) பாதத்தின்பெயர்.—சரண, அடி, தாள். (ங)

முழந்தாளின்பெயர்.—சானு. (க)

தொடையின்பெயர்.—குறங்கு, கவான், ஊரு. (ங)

அல்குலின்பெயர்.—நிதம்பம். (க)

இடையின்பெயர்.—மருங்குல், நடு, நுசுப்பு. (ங)

டு அ. வயிறு வயினுதர நாபியுந்தி கொப்பூழ்
குயமுலை கொங்கைதனஞ் சொர்க்கம் - பயோதர
மொய்கதிர்ப்பூ ணாக முரமருமம் மார்பகலங்
கைபுயந்தோ ளத்தங் கரம். (கரு)

டுகூ. விரலங் குலியா நகமுகி ராகுஞ்
சிரதரங் கண்டங் கழுத்துக் - கிரீவங்
களமாஞ் செவிகன்னங் காததர மோட்ட
முளவாகு முத்த முதடு. (கசா)

சா0. நாக்குநாத் தாலு நகைமுறுவல் பல்லெயிறு
மூக்கின் பெயர்நாசி துண்டமா - நோக்க
நயனம் விழிநாட்ட நேத்திரங் கோக்கண்
ணியனுத னெற்றியிலா டம். (கஎ)

சாக. பங்கி நவிர்குஞ்சி யோரி மயிர்பித்தை
மங்கல்மா மைந்தர்க்கு மாதர்க்குக் - கொங்கார்
குரலைம்பால் கூந்தல் குழல்கூழை யோதி
சுருளளகங் கொந்தளமாச் சொல். (கஅ)

சாஉ. சிரமுத்த மாங்கங்கஞ் சென்னி தலையாம்
வெரிந்முதுகு தாடியண்ண மேல்வாய் - புரிகுழல்சேர்
தேமொழியாய் தேமல் வரிதிதலை துத்திசுணங்
காமியன் றுரைப்பரறி ஞர். (கக)

ருஅ. வயிற்றின்பெயர்.—வயின், உதரம். (௨)
கொப்பூழின்பெயர்.—நாபி, உந்தி. (௨)
முலையின்பெயர்.—குயம், கொங்கை, தனம், சொர்க்கம், பயோதரம். (௫)
மார்பின்பெயர்.—ஆகம், உரம், மருமம், அகலம். (௪)
தோளின்பெயர்.—புயம். (௧)
கையின்பெயர்.—அத்தம், கரம். (௨)

ருகூ. விரலின்பெயர்.—அங்குலி. (௧)
நகத்தின்பெயர்.—உகிர். (௧)
கழுத்தின்பெயர்.—சிரதரம், கண்டம், கிரீவம், களம். (௪)
காதின்பெயர்.—செவி, கன்னம். (௨)
கீழுதட்டின்பெயர்.—அதரம். (௧)
மேலுதட்டின்பெயர்.—ஓட்டம். (௧)
உதட்டின்பெயர்.—முத்தம். (௧)

சுo. நாக்கின்பெயர்.—நா, தாலு. (௨)
பல்லின்பெயர்.—நகை, முறுவல், எயிறு. (௩)
மூக்கின்பெயர்.—நாசி, துண்டம். (௨)
கண்ணின்பெயர்—நோக்கம், நயனம், விழி, நாட்டம், நேத்திரம், கோ. (௬)
நெற்றியின்பெயர்.—நுதல், இலாடம். (௨)

சுக. மைந்தர்மயிரின்பெயர்.—பங்கி, நவிர், குஞ்சி, ஓரி, பித்தை. (௫)
மாதர்மயிரின்பெயர்.—குரல், ஐம்பால், கூந்தல், குழல், கூழை, ஓதி, அளகம், கொந்தளம். (அ)

சுஉ. தலையின்பெயர்.—சிரம், உத்தமாங்கம், கம், சென்னி. (௪)
முதுகின்பெயர்.—வெரிந். (௧)
மேல்வாயின்பெயர்.—தாடி, அண்ணம். (௨)
தேமலின்பெயர்.—வரி, திதலை, துத்தி, சுணங்கு. (௪)

சுரு. புரங்கடம் விக்கிரகந் தேகமுடம் பாகங்
குரம்பை யுடன்மேனி பிண்ட - நிரம்புருவ
மூர்த்தங் களேபரம் யாக்கை தனுவங்கம்
காத்திர மெய்காய மாம். (உ0)

சுச. விந்துபொறி யாவி பிராண னுயிர்சீவன்
சிந்தை மனநெஞ்சு சித்தமுளம் - புந்தியாம்
போற்று மறிவுணர்வு ஞானம் புலன்போதந்
தேற்றந் துணிவு தெளிவு. (உக)

இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

ஆ செய்யுள் - சுச.

---

## மூன்றாவது
## விலங்கின்பெயர்த்தொகுதி.

சுரு. முடங்குளை கோளரி கேசரி சிங்க
மடுந்திறற் சீயம் வயமா - மடங்கலே
பஞ்சா னனம்யாளி கண்டீ ரவமரி
யஞ்சா நகாயுதமு மாம். (க)

சுசு. வெருவில் வியாக்கிரந் தீவிசார்த் தூலம்
வரியுழுவை வேங்கை வயமா - மிருகாதி
திண்டிறல் வல்லியஞ் சித்திரகா யந்தரக்குப்
புண்டரிகம் புல்லுப் புலி. (உ)

சுஎ. தும்பிகயம் யானை கறையடி குஞ்சரந்தோல்
உம்பலிபம் வேழங் கரியத்தி - வெம்பகடு
போதகம் வாரணந் தந்தி யுவாகளிறு
மாதங்க நாகங்கைம் மா. (௩)

கூ௩. உடலின்பெயர்.—புரம், கடம், விக்கிரகம், தேகம், உடம்பு, ஆகம், குரம்பை, மேனி, பிண்டம், உருவம், மூர்த்தம், களேபரம், யாக்கை, தனு, அங்கம், காத்திரம், மெய், காயம். (க௮)

கூ௪. இந்திரியத்தின்பெயர்.—விந்து, பொறி. (௨)
உயிரின்பெயர்.—ஆவி, பிராணன். சீவன். (௩)
மனத்தின்பெயர்.—சிந்தை, நெஞ்சு, சித்தம், உளம். (௪)
அறிவின்பெயர்.—புந்தி, உணர்வு, ஞானம், புலன், போதம், தேற்றம், துணிவு, தெளிவு. (௮)

மக்கட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

## விலங்கின்பெயர்த்தொகுதி.

கூ௫. சிங்கத்தின்பெயர்.—முடங்குளை, கோளரி, கேசரி, சீயம், வயமா, மடங்கல், பஞ்சானனம், யாளி, கண்டீரவம், அரி, நகாயுதம். (கக)

கூ௬. புலியின்பெயர்.—வியாக்கிரம், தீவி, சார்த்தூலம், வரி, உழுவை, வேங்கை, வயமா, மிருகாதி, வல்லியம், சித்திரகாயம், தரக்கு, புண்டரிகம், புல். (க௩)

கூ௭. யானையின்பெயர்.—தும்பி, கயம், கறையடி, குஞ்சரம், தோல், உம்பல், இபம், வேழம், கரி, அத்தி, பகடு, போதகம், வாரணம், தந்தி, உவா, களிறு, மாதங்கம், நாகம், கைம்மா. (க௯)

சுஅ. தம்பே ரமையிரதி சிந்துரஞ்சா மோற்பவை
கம்பமதந் தானங் கடங்கடாங் - கும்பஞ்சே
ரோடையாம் பட்ட மொளிர்கிம் புரிமருப்புக்
கோடெயிறு தந்தமாங் கொம்பு. (சு)

சுகூ. குரகதம் வாசி குதிரை யிவுளி
துரகம் புரவி துரங்கம் - பரியரி
கோடகம் * வற்கச் சயிந்தவங் கந்தருவ
மாடல் வயமா வயம். (ரு)

எ0. கருமாவே கேழ லெறுழிகோ லஞ்சு
கரமேனங் கோணி வராகங் - குரோட்டமரி
போத்திரிபூ தாரங் கிருட்டி கிரிகிடி
பேர்த்தகு பன்றியின் பேர். (சு)

எக. வலிமுகங் கோடரங் கீசக நாக
நிலவிய சாகா மிருகம் - பிலவங்கம்
வானர மர்க்கட மந்தி குரங்கரி
கானவன் யூகங் கவி. (எ)

எஉ. வெண்பல்லம் வல்லூகம் வேக வுளியமெலு
திண்பல்லூ கஞ்செங்கண் மாகரடி - யெண்கு
சவைநெடுங் கோட்டுக் கலைபுல்வாய் நவ்வி
யிவைவயா மிரலையின் பேர். (அ)

* வற்கம் - குதிரைக்கயிறு.

சுஅ. பெண்யானையின்பெயர். — தம்பேரமை, இரதி, சிந்து ரஞ், சாமோற்பவை. (ச)
யானைமதத்தின்பெயர்.—தானம், கடம், கடாம். (ரூ)
யானைப்பட்டத்தின்பெயர் —ஓடை. (க)
யானைக்கோம்பின்பெயர். —மருப்பு, கோடு, எயிறு, தந்தம். (௧)

சுகூ. குதிரையின்பெயர்.—குரகதம், வாசி, இவுளி, துரகம், புரவி, துரங்கம், பரி, அரி, கோடகம், சயிந்தவம், கந்தருவம், வயமா, வயம். (கரூ)

எ௦. பன்றியின் பெயர்.—கருமா, கேழல், எறுழி, கோலம், சூகரம், ஏனம், கோணி, வராகம், குரோட்டம், அரி, போத்திரி, பூதாரம், கிருட்டி, கிரி, கிடி. (கடு)

எக. குரங்கின்பெயர்.—வலிமுகம், கோடரம், கீசகம், நாகம், சாகாமிருகம், பிலவங்கம், வானரம், மர்க்கடம், மந்தி, அரி, கானவன், யூகம், கவி. (கஙூ)

எஉ. கரடியின்பெயர்.—வெண்பல்லம், வல்லூகம், உளியம், எலு, பல்லூகம், செங்கண்மா, எண்கு. (எ)
இரலையின்பெயர்.—கலை, புல்வாய், நவ்வி, (ரூ)

## மூன்றாவது விலங்கின்பெயர்த்தொகுதி.

எரு. அரிணமான் சாரங்க மேணங் குரங்கம்
விருகஞ்செந் நாய்கொக்குமாகும்-நரியிகல்ன்
கோமாயு சம்பூகம் பூரிமா யுக்குரோட்ட
மாமாவின் பேர்கவைய மா. (கூ)

எசு. கரியகுரங் கூக முசுக்கோலாங் கூலங்
கரமொடுவா லேபங் கழுதை - கரப
மிரவணந் தாசேரக மொட்டக மாகு
முரமிகு கோதா வுடும்பு. (கo)

எஙு. ஆவிதங் கானக் குதிரை மரையாகுந்
தாவுமுண் மாவெய்யே சல்லிய - மேவிய
மீன்கவர் மார்ச்சாலம் வெருகுவிலா ளம்பூனை
வான்சவரி மாகவரி மா. (கக)

எரு. தக்கவயமுஞ் சசமு முயல் சுணங்கன்
குக்கனே சாரமே யன்சுனகன் - மிக்கசுவா
கோளி ஞமலி ஞாளிமேக நாய்,
ஞாளி ஞமலிபட்டி நாய். (கஉ)

எஎ. கோம்பிசர டங்காம ரூபி கொடுமுசலி
பாம்பஞ்சுந் தோகைப் பகையோந்திக் - காம்பேராம்
வேக வெலிகருப்பை மூடிகம் வெவ்விட
ராகு வணில்வெளி லாம். (கரு)

எரு. மானின்பெயர்.—அரிணம், சாரங்கம், ஏணம், குரங்கம். (ச)
சேந்நாயின்பெயர்.—விருகம், கொக்கு (உ)
நரியின்பெயர்.—இகலன், கோமாயு, சம்பூகம், பூரிமாயு,
குரோட்டம். (ரு)
காட்டுப்பசுவின்பெயர்.—ஆமா, கவையமா. (உ)

எசு. கருங்குரங்கின்பெயர்.—ஊகம். (க)
முசுவின்பெயர்.—கோலாங்கூலம். (க)
கழுதையின்பெயர்.—க்ரம், வாலேபம், கரபம். (ங)
ஒட்டகத்தின்பெயர்.—இரவணம், தாசேரகம். (உ)
உடும்பின்பெயர்.—கோதா. (க)

எரு. மரையின்பெயர்.—ஆவிதம், கானக்குதிரை. (உ)
முள்ளம்பன்றியின்பெயர்.—முண்மா, எய், சல்லியம். (ங)
பூனையின்பெயர்.—மார்ச்சாலம், வெருகு, விலாளம். (ங)
கவரிமானின்பெயர்.—சவரிமா. (க)

எசு. முயலின்பெயர்.—வயம், சசம். (உ)
நாயின்பெயர்.—சுணங்கன், குக்கன், சாரமேயன், சுனக
ன், சுவா, எகினம், முடுவல், ஞாளி, ஞமலி. பட்டி. (கம)

எஎ. பச்சோந்தியின்பெயர்.—கோம்பி, சரடம், காமரூபி, மு
சலி, தோகைப்பகை, ஓந்தி. (சு)
எலியின்பெயர்.—கருப்பை. (க)
பெருச்சாளியின்பெயர்.—மூடிகம், விடர், அகு. (ங)
அணிலின்பெயர்.—வெளில். (க)

எஅ. தேனுவும் பெற்றமுங் கோவுஞ் செழும்பசுவு
மானுஞ் சுரபியு மாவாகு - மானே
றிடபம் விடையெருது கோபதி புல்லந்
திடமூரி புங்கவஞ் சே. (கச)

எகூ. கருமகி டங்கவரி கார்மேதி காரா
னெருமையின் பேராகு மென்ப - தருவைமை
யாகு முரப்பிரம் வெள்ளா டயந்தகர்
சாகஞ் சகஞ்சா களம். (கரு)

அ0. ககபதி நாகா சனனே கலுழன்
றிகழ்வயின தேயன் கருடன் - சிகியே
மயின்மஞ்ஞை தோகை மயூரங் கலாபங்
குயில் களகண் டங்கோ கிலம். (கசு)

அக. வரியளி தேன்மா மதுகரந் தும்பி
யரியறுகால் வண்டு கழுது - பிரமரங்
கள்ளுண்சா ரங்கம் ஞிமிறு சுரும்பாகுங்
கிள்ளைசுகந் தத்தை கிளி. (கஎ)

அஉ. சிறையன்னஞ் செங்காற் பிணிமுகமஞ் சந்நீ
ருறையெகின மோதிம மாகும் - புறவந்
திருந்துபா ராவதந் தீதில் கபோதம்
பருந்துசே னங்கங்கம் பாறு. (கஅ)

அ௩. சில்லிகை சில்லை நெடிசிமிலி சிள்வீடு
ஒல்லிய காடை குறும்பூழே - சொல்லிடில்
உன்னங் கிராமமா முற்குரோ சத்தினெடு
கின்னரநீர்ப் பக்கியெனக் கேள். (ககூ)

௭௮. பசுவின்பெயர்.—தேனு, பெற்றம், கோ, ஆன், சுரபி, ஆ. (௬)
எருதின்பெயர்.—ஆன், ஏறு, இடபம், விடை, கோபதி,
புல்லம், மூரி, புங்கவம், சே. (௯)

௭௯. எருமையின்பெயர்.—மகிடம், கவரி, மேதி, காரான். (௪)
செம்மறியாட்டின்பெயர்.—துருவை, மை. (௨)
வெள்ளாட்டின்பெயர்.—உரப்பிரம், அயம், தகர், சாகம்,
சகம், சாகளம். (௬)

௮௦. கருடன்பெயர்.—ககபதி, நாகாசனன், கலுழன், வயின
தேயன். (௪)
மயிலின்பெயர்.—சிகி, மஞ்ஞை, தோகை, மயூரம், கலா
பம். (௫)
குயிலின்பெயர்.—களகண்டம், கோகிலம். (௨)

௮௧. வண்டின்பெயர்—அளி, தேன், மா, மதுகரம், தும்பி,
அரி, அறுகால், கழுது, பிரமரம், சாரங்கம், ஞிமிறு, சுரும்பு. (௧௨)
கிளியின்பெயர்.—கிள்ளை, சுகம், தத்தை. (௩)

௮௨. அன்னத்தின்பெயர்.—பிணிமுகம், அஞ்சம், எகினம், ஓதி
மம். (௪)
புறவின்பெயர்.— பாராவதம், கபோதம். (௨)
பருந்தின்பெயர்.—சேனம், கங்கம், பாறு, (௩)

௮௩. சிள்வீட்டின்பெயர்.—சில்லிகை, சில்லை, சீரி, சிமிலி (௪)
காடை.—குறும்பூழ். (௧)
நீர்ப்புள்ளின்பெயர்.—உன்னம், கிராமம், உற்குரோசம்,
கின்னரம். (௪)

அ௪. சக்கரவா கங்கோகஞ் சக்கர நேமிப்புட்
டக்கசட கம்புலிங்க மூர்க்குருவி-குக்கிலாஞ்
செம்போத்து வெண்குருகு சாரசம்புட்கர
மம்பூவை சாரிகை யாம். (௨௦)

அ௫. குக்குடம் வாரணங் கோழிசர ணாயுதங்
கொக்குக் குரண்டம் பிதாபோதா - பொற்க
ணிருடிகூன் பிங்கலை கின்னர மாந்தை
கரடங்கா கங்கொடிகாக் கை. (௨௧)

அ௬. வெஞ்சினக் காத்திர வேயம் விடதரங்
கஞ்சுகி காகோ தரமிரும்பை - நஞ்சுமிழ்
கூடபதஞ் சக்கிரி கும்பி நசமரி
யாடும் பவன சனம். (௨௨)

அ௭. நாகம் புயங்கம் பணிகட் செவிதந்த
சூக மகி கொடுமை சூழ்சர்ப்பம் - போகி
யுரக மராளமே பன்னகம் பாந்த
ளரவு வியாளம்பாம் பாம். (௨௩)

அ௮. கோலவரி மாசுணம் பாந்தள் பெரும்பாம்பா
மாலங் களங்கரளங் காரியே - நீலம்
விடங்கடு வெங்காள நஞ்சின் பெயராம்
படம்பை விரிந்த பணம். (௨௪)

அ௯. கருடு மிராச நாகங்கார் வழலை
திரனகுலங் கீரி தீர்வை - மருவிய
காலோலமே யண்டங் காக்கை நிலாமுகி
பாலார் சகுனமெனப் பார். (௨௫)

அச. சக்கரவாகத்தின்பெயர்.—கோகம், சக்கரம், நேமிப்புள்.
ஊர்க்குருவியின்பெயர்.—சடகம், புலிங்கம். (உ)
செம்போத்தின்பெயர்.—குக்கில். (க)
* வெண்குருகின்பெயர்.—சாரசம், புட்கரம். (உ)
† பூவையின்பெயர்.—சாரிகை. (க)

அரு. கோழியின்பெயர்.—குக்குடம், வாரணம், சரணாயுதம். (௩)
கோக்கின்பெயர்.—குரண்டம். (க)
§ போதாவின்பெயர்.—பிதா. (க)
ஆந்தையின்பெயர்.—இருடி, கூன், பிங்கலை, கின்னரம். (ச)
காக்கையின்பெயர்.—கரடம், காகம், கொடி. (௩)

அசு. பாம்பின்பெயர்.—காத்திரவேயம், விடதரம், கஞ்சுகி, காகோதரம், இரும்பை, கூடபதம், சக்கிரி, கும்பிநசம், அரி, பவனாசனம். ௧௦

அஎ. நாகம், புயங்கம், பணி, கட்செவி, தந்தசூகம், அகி, சர்ப்பம், போகி, உரகம், மராளம், பன்னகம், பாந்தள், அரவு, வியாளம். ஆூ (உச)

அஅ. பெரும்பாம்பின்பெயர்.—மாசுணம், பாந்தள். (உ)
நஞ்சின்பெயர்.—ஆலம், களம், கரளம், காரி, நீலம், விடம், கடு, காளம். (அ)
பாம்பின்படத்தின்பெயர்.—பை, படம். (உ)

அகூ. இராசநாகத்தின்பெயர்.—கார்வழலை. (க)
கீரியின்பெயர்.—நகுலம், தீர்வை. (உ)
அண்டங்காக்கையின்பெயர்.—காலோலம். (க)
நிலாமுகியின்பெயர்.—சகுனம். (க)

---

* வெண்குருகு - வெண்ணாரை.
† பூவை - நாகணவாய்ப்புள். § போதா - பெருநாரை.

௬௦. மச்சஞ் சகுலி வகுலி சலசரமீன்
கச்சப மாமை கராமுதலே - நச்சுங்
களவன் குளிர்ஞெண்டு கர்க்கடக மட்டை
செளகங் கறையான் சிதல். (௨௬)

மூன்றவது விலங்கின்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக செய்யுள் - ௬௦.

---

## நான்காவது
## மரப்பெயர்த்தொகுதி.

௬௧. தருவிடவி பாதவம் பூருகஞ் சாகி
துருமமக மந்திரு சால - மரமா
மெழிலிலதை வள்ளி பிரததி யேடார்
கொழுமலர் வல்லி கொடி. (௧)

௬௨. வண்டமர் சோலை மலர்ப்பொழி லாராமங்
கொண்டன் மலிகா தருக்குழாம் - தண்டலை
கானங் கனம் வனமடவி காந்தாரங்
கானக மாரணியங் காடு. (௨)

௬௩. தலமடை பன்னஞ் சதனம் பலாச
மிலைசதம் பத்திர மென்ப - கலிகை
முகிழ்சா லகமே கோரகை மொட்டு
முகிள மரும்பு முகை. (௩)

௯௦. மீனின்பெயர்.—மச்சம், சகுலி, வகுலி, சலசரம். (௪)
ஆமையின்பெயர்.—கச்சபம். (௧)
முதலையின்பேர்.—கரா. (௧)
ஞெண்டின்பெயர். களவன், குளிர், சர்க்கடகம். (௩)
அட்டையின்பெயர்.—செளுகம். (௧)
கறையான்பெயர்.—சிதல். (௧)

விலங்கின்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

## மரப்பெயர்த்தொகுதி.

௯௧. மரத்தின்பெயர்.—தரு, விடவி, பாதவம், பூருகம், சாகி, திருமம், அகமம், துருசாலம். (௮)
படர்கொடியின்பெயர்.—இலதை, வள்ளி, பிரததி, வல்லி. (௪)

௯௨. சோலையின்பெயர்.—பொழில், ஆராமம், கா, தருக்குழாம், தண்டலை. (௫)
காட்டின்பெயர்.—கானம், ககனம், வனம், அடவி, காந்தாரம், கானகம், ஆரணியம். (௭)

௯௩. இலையின்பெயர்.—தலம், அடை, பன்னம், சதனம், பலாசம், சதம், பத்திரம். (௭)
அரும்பின்பெயர்.—கலிகை, முகிழ், சாலகம், நனை, கோரகை, மொட்டு, முகிளம், முகை. (௮)

க௪. கந்தங் கிழங்குமூ லந்தூர் சடைசிவைவேர்
கொந்தலர்பூங் கொத்துப் பணைகவடு - முந்திய
பொங்கர் சினைசாகை கப்புமுறி பல்லவ
மங்கிசலை யந்தளிர்ப்பே ராம். (௪)

க௫ மணமலி பூவீ மலர்போ தலராங்
துணர்மஞ் சரிகொத்துத் தொத்தோ - டிணரா
நலஞ்சேர் குலைதாறு வல்லரி யாகும்
பலங்காய் கனியாம் பழம். (௫)

க௬. கதிராங் குரல்செங் கனிமேவிய தோல்
செதிளாகுங் காழ்கொட்டை செப்பில் - விதையாகுங்
காலா முளைபொடித்த லங்குரித்த லூறுதல்
பாலார் குருத்துப் பயின். (௬)

க௭. வெறிகடி வாசம் விரைமணங்கான் கந்தம்
நறைமன்ற லேமுருகு நாற்றம் - பொறிவண்டார்
கட்டண்டேன் வேரி பிரச நறுநறவு
மட்டுமக ரந்த மது. (௭)

க௮. வளர்நொச்சி யாஞ்சிந்து வாரநீர் வாரங்
குளநெல் லெருவைசாய் கோரை - களங்களா
செந்நெல் வீரிகியொடு செஞ்சாலி வேழம்பைங்
கன்னல்கழை யிக்குக் கரும்பு. (௮)

௬௪. கிழங்கின்பெயர்.—கந்தம், மூலம். (௨)
வேரின்பெயர்.—தூர், சடை, சிவை. (௩)
மலநம்பூங்கொத்தின்பெயர்.—கொந்து. (௧)
மரக்கப்பின்பெயர்.—பணை, கவடு, பொங்கர், சினை, சாகை. (௫)
தளிரின்பெயர்.—முறி, பல்லவம், கிசலயம், தளிர். (௪)

௬௫. மலரின்பெயர்.—பூ, வீ, போது, அலர். (௪)
பூங்கொத்தின்பெயர்.—துணர், மஞ்சரி, தொத்து, இணர்.
துலையின்பெயர்.—தாறு, வல்லரி. (௨)
காயின்பெயர்.—பலம். (௧)
பழத்தின்பெயர்.—கனி. (௧)

௬௬. கதிரின்பெயர்.—குரல். (௧)
தோலின்பெயர்.—செதிள். (௧)
கோட்டையின்பெயர்.—காழ், விதை. (௨)
முளையின்பெயர்.—கால். (௧)
முளைத்தலின்பெயர்.—பொடித்தல், அங்குரித்தல், நாறுதல். (௩)
குருத்தின்பெயர்.—பயின். (௧)

௬எ. வாசனையின்பெயர்.—வெறி, கடி வாசம், விரை, மணம், கான், கந்தம், நறை, மன்றல், முருகு, நாற்றம். (௧௪)
கள்ளின்பெயர்.—தேன், வேரி, பிரசம், நறு, நறவு, மட்டு, மகரந்தம், மது. (அ)

௬அ. நொச்சியின்பெயர்.—சிந்துவாரம். (௧)
தளநெல்லின்பெயர்.—நீர்வாரம். (௧)
கோரையின்பெயர்.—எருவை, சாய். (௨)
களாவின்பெயர்.—களம். (௧)
செந்நெல்லின்பெயர்.—விரீகி, செஞ்சாலி. (௨)
கரும்பின்பெயர்.—வேழம், கன்னல், கழை, இக்கு. (௪)

௯௯. அருக்க மெருக்காகுந் தாதகியா ராத்தி
முருக்குக் கவிர்கிஞ் சுகமாங் - குருக்கத்தி
மாதவி நிம்பமாம் வேம்பு மகிழ்வகுளம்
பாதிரியா கும்பா டலம். (௯)

௧00. அரசு திருமரம் பிப்பிலம் போதி
மருத மருச்சுனமா கொக்கு - விளையாருஞ்
சூதம் பனசம் பலாசுர புன்னை வழை
மாதுளங்க மாமா துளை. (௧0)

௧0௧. தடம்பெண்ணை தாலம் பனைசம்பு நாவல்
கடம்பாகு நீபங் கதம்ப - நெடுங்கமுகு
பூகமாம் புன்னாகம் புன்னையா வாச்சாவாஞ்
சாகமாந் தேக்கந் தரு. (௧௧)

௧0௨. தாழைதென் ஞளிகே ரந்தெங்கு தண்கதலி
வாழை யரம்பை மடிகைதை - தாழை
செழுங்கே தகையிதழி தேங்கடுக்கை கொன்றை
கொழுங்கன்னி காரமாங் கோங்கு. (௧௨)

௧0௩. அகரு வகிலதவு தும்பர மத்தி
தகுநத்தங் காஞ்சனம் புன்கு - நிகரி
லிலவாகுஞ் சான்மலி கர்ச்சூர மீந்தா
மலரி கரவீர மாம். (௧௩)

௯௯. எருக்கின்பெயர்.—அருக்கம். (௧)
ஆத்தியின்பெயர்.—தாதகி, ஆர். (உ)
முள்முருக்கின்பெயர்.—கவிர், கிஞ்சுகம். (உ)
குருக்கத்தியின்பெயர்.—மாதவி. (௧)
வேம்பின்பெயர்.—நிம்பம். (௧)
மகிழின்பெயர்.—வகுளம். (௧)
பாதிரியின்பெயர்.—பாடலம். (௧)

௧00. அரசின்பெயர்.—திருமரம், பிப்பிலம், போதி. (௩)
மருதமரத்தின்பெயர்.—அருச்சுனம். (௧)
மாமரத்தின்பெயர்.—கொக்கு, சூதம். (உ)
பலாவின்பெயர்.—பனசம். (௧)
சுரபுன்னையின்பெயர்.—வழை. (௧)
மாதுளையின்பெயர்.—மாதுளங்கம். (௧)

௧0௧. பனையின்பெயர்.—பெண்ணை, தாலம். (உ)
நாவலின்பெயர்.—சம்பு (௧)
கடம்பின்பெயர்.—நீபம், கதம்பம். (உ)
கமுகின்பெயர்.—பூகம். (௧)
புன்னையின்பெயர்.—புன்னாகம். (௧)
ஆச்சாவின்பெயர்.—ஆ. (௧)
தேக்கமரத்தின்பெயர்.—சாகம். (௧)

௧0உ. தெங்கின்பெயர்.—தாழை, தென், நாளிகேரம். (௩)
வாழையின்பெயர்.—கதலி, அரம்பை. (உ)
தாழையின்பெயர்.—மடி, கைதை, கேதகை. (௩)
கொன்றையின்பெயர்.—இதழி, கடுக்கை. (உ)
கோங்கின்பெயர்.—கன்னிகாரம். (௧)

௧0௩. அகிலின்பெயர்.—அகரு. (௧)
அத்தியின்பெயர்.—அதவு, உதம்பரம். (உ)
புன்கின்பெயர்.—நத்தம், காஞ்சனம். (உ)
இலவின்பெயர்.—சான்மலி. (௧)
பேரீந்தின்பெயர்.—கர்ச்சூரம். (௧)
அலரியின்பெயர்—கரவீரம். (௧)

௧0௪. பிரம தருவாம் * பலாசஞ் செயலை
யரிமருவு பிண்டி யசோகு - விரிமலர்க்
குந்தங் குருந்தாங் குடசமாம் வெட்பாலை
சந்தனமா ரஞ்சந்தஞ் சாந்து. (௧௪)

௧0௫. நல்ல கடுவா மரிதகி யாமலக
நெல்லியாந் தான்றி கலித்தருமம் - வில்லுவ
மாலூரங் கூவிளை வெள்ளில் விளாவட
மாலழிஞ்சி லங்கோல மாம். (௧௫)

௧0௬. சுரர்மர மாந்தேவ தாரந் துணர்ப்பூங்
குராமர மாங்கோவி தார - மராமரமாஞ்
சாலம்வா னீரந் தளிர்வஞ் சுளம்வஞ்சி
யேலமா மென்பர் துடி. (௧௬)

௧0௭. காழ்மலி யார்த்திரக மிஞ்சி கறிமரிச
மாமிளகு திப்பிலி மாகதியாந் - தேமதுகம்
யட்டி மதுர மதூக மிருப்பையயாங்
கட்டரும் பூவைகா யா. (௧௭)

௧0௮. மல்லிகையாகும் விசகலி † பித்திகை
யெல்லிணர்ச்சாதி யிருவாட்சி - நல்லநங்க
மாலதி ‡ மௌவல் சகசரி யாங்குறிஞ்சி
நீலி நிகழவுரி யாம். (௧௮)

* பலாசம் - புனமுருக்கு.
† பித்திகை-சிறுசண்பகம். ‡ மௌவல்-வநமல்லிகை.

௧0௪. பலாசத்தின்பெயர்.—பிரமதரு. (௧)
அசோகின்பெயர்.—செயலை, பிண்டி. (௨)
குருந்தத்தின்பெயர்.—குந்தம். (௧)
வெட்பாலையின்பெயர்.—குடசம். (௧)
சந்தனத்தின்பெயர்.—ஆரம், சந்தம், சாந்து. (௩)

௧0௫. கடுக்காய்மரத்தின்பெயர்.—அரிதகி. (௧)
நெல்லியின்பெயர்.—ஆமலகம். (௧)
தான்றியின்பெயர்.—கலித்துருமம். (௧)
வில்லுவத்தின்பெயர்—மாலூரம், கூவிளை. (௨)
விளாவின்பெயர்.—வெள்ளில். (௧)
ஆலமரத்தின்பெயர்.—வடம். (௧)
அழிஞ்சிலின்பெயர்.—அங்கோலம். (௧)

௧0௬. தேவதாரத்தின்பெயர்.—சுரர்மரம். (௧)
குராவின்பெயர்.—கோவிதாரம். (௧)
மராமரத்தின்பெயர்.—சாலம். (௧)
வஞ்சியின்பெயர்.—வானீரம், வஞ்சுளம். (௨)
ஏலத்தின்பெயர்.—துடி. (௧)

௧0௭. இஞ்சியின்பெயர்.—ஆர்த்திரகம். (௧)
மிளகின்பெயர்.—கறி, மரிசம். (௨)
திப்பிலியின்பெயர்.—மாகதி. (௧)
அதிமதுரத்தின்பெயர்.—மதுகம், யட்டி. (௨)
இருப்பையின்பெயர்.—மதூகம். (௧)
காயாவின்பெயர்.—பூவை. (௧)

௧0௮. மல்லிகையின்பெயர்.—விசகலி. (௧)
பித்திகையின்பெயர்.—சாதி. (௧)
இருவாட்சியின்பெயர்.—அநங்கம். (௧)
மௌவலின்பெயர்.—மாலதி. (௧)
வாடாக்குறிஞ்சியின்பெயர்.—சகசரி. (௧)
அவுரியின்பெயர்.—நீலி. (௧)

க0க. கிளைவேணு வேரலமை கீசகம் விண்டு
முளைதிரிகண் சந்திபணை மூங்கில் - கிளர்வளைவேய்
தூம்புவெதிர் தட்டையம்பு மூங்தூழ் தொளையோங்கல்
காம்பு திகிரி கழை கண் (கக)

கக0. செழுநாளி கம்வள்ளை சேம்பு சகுடங்
கொழுமல ராம்பல் குமுதங் - கழுநீராஞ்
செங்குவளை யுற்பல மிந்தீ வரநீலம்
நபங்குவளை நீலோற் பலம். (உ0)

கக்க. வலம்புரி நந்தியா வர்த்தமே யாகும்
குலம்பொலி யாதொண்டை கொவ்வை - நலஞ்சேரும்
விண்டபூஞ் செம்பரத்தை மேவிய மந்தாரங்
கொண்டபே ராகுங் குறி. (உக)

ககஉ. முண்டக மம்புய மம்போ ருகமுளரி
வண்டா மரைவனசம் வாரிசம் - புண்டரிகம்
பங்கயங் கஞ்சம் பதும மரவிந்த
மங்கமலங் கோகநக மாம். (உஉ)

நான்காவது மரப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ செய்யுள் - ககஉ.

---

ஐ ந் தா வ து

## இடப்பெயர்த்தொகுதி.

ககங. கடைதலை கான்மருங்கு கண்மா டுழைமேல்
புடைவலந் தாமம் புறங்கீ - ழிடைவயின்வாய்
பின்னுய லுள்ளில் பதிதானஞ் சார்வுளி
முன்னக முற்று மிடம். (க)

கoகூ. மூங்கிலின்பெயர்.—கிளை, வேணு, வேரல், அமை, கீசகம், விண்டு, முளை, திரிகண், சந்தி, பணை, வரை, வேய், தூம்பு, வெதிர், தட்டை, அம்பு, முந்தூழ், தொளை, ஓங்கல், காம்பு, திகிரி, கழை, கண். (உ௩)

கக0. வள்ளையின்பெயர்.—நாளிகம். (க)
சேம்பின்பெயர்.—சகுடம். (க)
வெள்ளாம்பலின்பெயர்.—குமுதம், (க)
செங்குவளையின்பெயர்.—சழுநீர், உற்பலம். (உ)
கருங்குவளையின்பெயர்.—இந்தீவரம், நீலம், நீலோற்பலம்.

ககக. நந்தியாவர்த்தத்தின்பெயர்.—வலம்புரி. (க)
கோவ்வையின்பெயர்.—ஆதொண்டை. (க)
செம்பரத்தையின்பெயர்.—மந்தாரம். (க)

ககஉ. தாமரையின்பெயர்.—முண்டகம், அம்புயம், அம்போருகம், முளரி, வனசம், வாரிசம், புண்டரிகம், பங்கயம், கஞ்சம், பதுமம், அரவிந்தம், கமலம், கோகநகம். (கரு)

நான்காவது மரப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

# இடப்பெயர்த்தொகுதி.

ககங. இடப்பெயரின்பெயர்.—கடை, தலை, கால், மருங்கு, கண், மாடு, உழை, மேல், புடை, வலம், தாமம், புறம், கீழ், இடை, வயின், வாய், பின், அயல், உள், இல், பதி, தானம், சார்வு, உளி, முன், அகம். (உசு)

ககச. அவனி பொழில்பா ரகலிடம் வையம்
புவனி புவிபுடவி பூமி - குவலய
ஞாலந் தனாதா ரணிகா சினிபடி
தாலந் தரணி தலம். (உ)

ககரு. வசுந்தரை பூவுலகு மண்குநில நேமி
வசுமதி சாந்தை வசுதை - யசலை
யுகமே நகந்தறை கோவே விபுலை
சகமே தினிதாத் திரி. (ங)

ககசு. வரைகிரி யோங்கல் குவடு மலைபூ
தரமசலங் குன்று சயிலங் - கிரிகல்
சிலம்பு பொருப்புச் சிகரி யடுக்கல்
விலங்கல் சிலைபிறங்கல் வெற்பு. (ச)

ககஎ. இரவி பருப்பதம் விண்டு நகமா
திரமோ திமயிறும்பு நாகந் - தராதரங்
குத்திரம் பொற்றை சிலோச்சயங் கோத்திர
மத்திரி வேதண்ட மாம். (ரு)

ககஅ. சயிலாதி வெள்ளியங் குன்றந்தண் சோலைக்
கயிலாயங் கண்ணுதலோன் வெற்பு - துயிலாதா
ராலயம் பொன்னசல மேரு வமரர்க்காய்
வேலைவிட முண்டான்கை வில். (சு)

கசக. இமவான் மலையரைய னெம்மிறைவன் பாகத்
திமையாளைப் பெற்ற வரவோன் - சிமயப்
பொதிய மலைமலயந் தென்மலைபூ மிக்கு
மதி தமிழை யீந்தான் மலை. (எ)

கககச. பூமியின்பெயர்.—அவனி, பொழில், பார், அகலிடம், வையம், புவனி, புவி, புடவி, குவலயம், ஞாலம், தரை, தாரணி, காசினி, படி, தாலம், தரணி, தலம். (கஎ)

கககரு. வசுந்தரை, பூ, உலகு, மண், கு, நிலம், நேமி, வசுமதி, சாந்தை, வசுதை, அசலை, உகம், நகம், தறை, கோ, விபுலை, சகம், மேதினி, தாத்திரி. ஆ (ரு௬)

கககசு. மலையின்பெயர்.—வரை, கிரி, ஓங்கல், குவடு, பூதரம், அசலம், குன்று, சயிலம், கிரி, கல், சிலம்பு, பொருப்பு, சிகரி, அடுக்கல், விலங்கல், சிலை. பிறங்கல், வெற்பு. (கஅ)

கககஎ. இரவி, பருப்பதம், விண்டு, நகம், மாதிரம், ஓதிமம், இறும்பு, நாகம், தராதரம், குத்திரம், பொற்றை, சிலோச்சயம், கோத்திரம், அத்திரி, வேதண்டம். ஆ (ருரு)

கககஅ. கயிலாயத்தின்பெயர்.—சயிலாதி, வெள்ளியங்குன்றம், கண்ணுதலோன்வெற்பு. (ரு)

மேருமலையின்பெயர்.—தயிலாதாராலயம், பொன்னசலம், விடமுண்டான்கைவில். (ரு)

ககககூ. இமயமலையின்பெயர்.—இமவான், மலையரையன், உமையாளைப்பெற்றவன். (ரு)

பொதியமலையின்பெயர்.—மலயம், தென்மலை, தமிழ்தந்தான்மலை. (ரு)

கஉ0. நீர்புணரி நேமி பரவைவே லாவலய
மார்கலி யத்தி திரைநரலை - வாரிதி
பாராவா ரம்பௌவம் வேலைமுந் நீருவரி
காராழி வாரி கடல். (அ)

கஉக. சலராசி தோயநிதி யம்பர முப்புச்
சலநிதி யேயுததி சிந்து - சலதி
யளப்பரும் வெள்ளநதிபதி வீரை
யளக்கர் சமுத்திர மாம். (கூ)

கஉஉ. கூலம்பா ரந்தீரங் கோடு தடங்கரைகல்
லோலந் தரங்க மலைதிரை - வேலையிற்
றங்குங் குமிழியே புற்புதமா கும்பேனம்
பொங்குநுரை யென்றே புகல். (க0)

கஉ௩. மொய்குறிஞ்சி வன்பாலை முல்லை செழுமருத
நெய்தலிவை யைந்து நிலனகு - மைநீர்
நிவப்பு மிசைமீது மேடுயர மாகு
மவற்பயம்பு பள்ளந்தாழ் வாம். (கக)

கஉச. செழுநீர்க் கிணறுகுங் கூவல் செறுச்செய்
கழனி பழனம் வயலாம் - பழுதில்
வரம்பாகு மாசி வரம்பருகாங் கங்கு
கரம்புவ ராகுங் களர். (கஉ)

கஉரு. ஈம மயானஞ் சுடலை சுடுகாடு
தூமமிகு சுள்ளையாந் தொல்குயவர் - தாமட்
கலஞ்சுடு பூமி கமரும் விடரு
நிலம்பிளந்த தென்றே நிகழ்த்து. (க௩)

கஉ௦. சமுத்திரத்தின்பெயர்.—நீர், புணரி, நேமி, பரவை, வேலாவலயம், ஆர்கலி, அத்தி, திரை, நரலை, வாரிதி, பாராவாரம், பௌவம், வேலை, முந்நீர், உவரி, ஆழி, வாரி, கடல். (கஅ)

கஉக. சலராசி, தோயநிதி, அம்பரம், உப்பு, சலநிதி, உததி, சிந்து, சலதி, வெள்ளம், நதிபதி, வீரை, அளக்கர். ஆ௳ (௫௦)

கஉஉ. கரையின்பெயர்.—கூலம், பாரம், தீரம், கோடு, தடம். (௫)
கடற்றிரையின்பெயர்.—கல்லோலம், தரங்கம், அலை. (௩)
நீர்க்குமிழின்பெயர்.—புற்புதம். (க)
நீர்நுரையின்பெயர்.—பேனம். (க)

கஉ௩. ஐவகைநிலத்தின்பெயர்.—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல். (௫)
மேட்டின்பெயர்.—நிவப்பு, மிசை, மீது, உயரம். (௪)
பள்ளத்தின்பெயர்.—அவல், பயம்பு, தாழ்வு. (௩)

கஉ௪. கிணற்றின்பெயர்.—கூவல். (க)
வயலின்பெயர்.—செறு, செய், கழனி, பழனம. (௪)
வரம்பின்பெயர்.—மாசி. (க)
வரம்பின்பக்கத்தின்பெயர்.—அருகு, கங்கு. (உ)
கரம்பின்பெயர்.—கரம்பு, உவர், (உ)

கஉ௫. சுடுகாட்டின்பெயர்—ஈமம், மயானம், சுடலை. (௩)
மட்கலஞ்சுடுசூளையின்பெயர்.—சுள்ளை. (க)
நிலப்பிளப்பின்பெயர்.—கமர், விடர். (உ)

கஉசு. துர்க்கமருப் பஞ்சென்று துன்னற் கரியவிடங்
கற்க ணெருங்கு மிடமுரம்பா - நிற்குமொரு
வெள்ளிடையாகும் வெளிமருங்கு பக்கமா
ஙள்ளிடை நாப்ப ணடு. (கச)

கஉஎ. வடவா முகந்தாழ் பிலங்கீ ழுலோகம்
படநாக லோகம்பா தாளங் - கொடிய
விருளந்த காரந் துவாந்தந் திமிர
நரகு நிரயநர கம், (கரு)

கஉஅ. அதர்நெறி யத்தஞ் செலவொழுக் காறு
வதியி குவை மார்க்கம் வருந்து - பதமே
சரிகடறு தாரை யியவை நடவை
வரிசுரம் வட்டை வழி. (கசு)

கஉகூ. தெருவு மறுகு திகழ்வீதி ஞெள்ளல்
வரைவேய் தவர்த்த வழிபாங் - கிரிகவலை
பூவணி சந்தி சதுக்கம் பொதுநியம
மாவணமங் காடிகடை யாம். (கஎ)

கஙo. மதிலெயி லிஞ்சி யரண்புரிசை யாரல்
புதவுயர் கோபுர வாயில் - கதவாகும்
வாரி கபாட நகர நகரிபுர
மூர்நக ராகும் புரி. (கஅ)

௧௨௬. துர்க்கத்தின்பெயர்.—அருப்பம், அரியவிடம். (௨)
கற்கணேநந்துமிடத்தின்பெயர்.—முரம்பு (௧)
வெளியிடத்தின்பெயர்.—வெள்ளிடை. (௧)
பக்கத்தின்பெயர்.—மருங்கு. (௧)
நடுவின்பெயர்.—நள், இடை, நாப்பண். (௩)

௧௨௭. நாகலோகத்தின்பெயர்.—வடவாமுகம், பிலம், கீழுலோகம், பாதாளம். (௪)
நரகத்தின்பெயர்.—இருள், அந்தகாரம், துவாந்தம், திமிரம், நரகு, நிரயம். (௬)

௧௨௮. வழியின்பெயர்.—அதர், நெறி, அத்தம், செலவு, ஒழுக்கு, ஆறு, வதி, இருவை, மார்க்கம், வகுந்து, பதம், சரி, கடறு, தாரை, இயவை, நடவை, வரி, சுரம், வட்டை. (௧௯)

௧௨௯. தெருவின்பெயர்.—மறுகு, வீதி, ஞெள்ளல். (௩)
கவர்வழியின்பெயர்.—கவலை. (௧)
பலதெருக்கூடுமிடத்தின்பெயர்.—சந்தி. (௧)
* சதுக்கத்தின்பெயர்.—பொது. (௧)
கடைவீதியின்பெயர்.—நியமம், ஆவணம், அங்காடி. (௩)

௧௩௦. மதிலின்பெயர்.—எயில், இஞ்சி, அரண், புரிசை, ஆரல். (௫)
கோபுரவாயிலின்பெயர்.—புதவு. (௧)
கதவின்பெயர்.—வாரி, கபாடம். (௨)
நகரின்பெயர்.—நகரம், நகரி, புரம், ஊர், புரி. (௫)

* சதுக்கம் - நாற்றெருக்கூடுமிடம்.

கசுக. மருவம் பலம்பொதுவில் மன்றநிலா முற்ற
மரமிய மந்திர மாகும் - * புரவியின்
பந்திமடைப் பள்ளி யடுக்களைசேவகஞ்
சிந்துரத்தின் கூடமெனச் செப்பு. (க௯)

கசுஉ. நகர்மாளிகைகுல மாடம் பவன
மகமனை வீடுபுக்கி லில்லம் - புகலலாந்
தென்றலார் வேதிகை திண்ணையா மங்கணமு
முன்றிலு முற்றமே யாம். (உ0)

கசுங. இலஞ்சி கயங்கேணி கோட்டக மேரி
மலங்கன் மடுவோடை வாவி - சலதரம்
வட்டந் தடாக நளினி மடுப்பொய்கை
குட்டங் கிடங்கு குளம். (உக)

கசுச. அடுகள மிக்க வமர்க்களம் வெய்ய
படுகளஞ் செங்களம் பற்றூர் - முடுகிய
போர்க்கள மாகவ பூமி புலால் கவர்புள்
ளார்கரும பறந்தலை யாம். (உஉ)

ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

ஆக செய்யுள் - கசுச.

---

* புரவியின்பந்தி - குதிரைலாயம்.

கருக. அம்பலத்தின்பெயர்.—பொதுவில், மன்றம். (உ)
நிலாமுற்றத்தின்பெயர்.—அரமியம். (க)
புரவியின்பந்தியின்பெயர்.—மந்திரம். (க)
மடைப்பள்ளியின்பெயர்.—அடுக்களை. (க)
யானைக்கூடத்தின்பெயர்.—சேவகம். (க)

கருஉ. இல்லத்தின்பெயர்.—நகர், மாளிகை, குலம், மாடம், பவனம், அகம், மனை, புக்கில். (அ)
திண்ணையின்பெயர்.—வேதிகை. (க)
முற்றத்தின்பெயர்.—அங்கணம், முன்றில். (உ)

கருங. தடாகத்தின்பெயர்.—இலஞ்சி, கயம். கேணி, கோட்டகம், ஏரி, மலங்கல், மடு, ஓடை, வாவி, சலதரம், வட்டம், நளினி, மடு, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம். (கஎ)

கருச. போர்க்களத்தின்பெயர்.—அடுகளம், அமர்க்களம், படுகளம், செங்களம், ஆகவபூமி, பறந்தலை. (சு)

இடப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

## ஆறவது
## பல்பொருட்பெயர்த்தொகுதி.

கருரு. மாசை யரி பீத மாடுகா ணம்பொலந்
தேசிகமீ கையாட கஞ்சொன்னம் - பேசு
நிதியருத்தம் வித்த நிதானம் வெறுக்கை
பொதிதன மிக்க பொருள். (க)

கருசு. சாமீ கரஞ்சாத ரூபந் தமனிய
மாமாடை மாழைசாம் பூநத - மேமங்
கனக மிரணியங் காஞ்சன மீழம்
புனைபூரி சந்திரம் பொன். (உ)

கருஎ. தார மிரசிதம் வெள்ளி களதவுதந்
தேரி னுதும்பரந் தாமிரஞ் - சீருளா
மாரகூ டம்மிரதி பித்தளைமா யாபுரி
யாரும்வெண் கலங்கஞ்ச மாம். (ங)

கருஅ. கருந்தா தயமிரும்பு காரீய நாகந்
திருந்துவங் கஞ்சீரு ளீயம் - பெருந்தரையிற்
புல்லியநிக் கேபம் புதையலா கும்பூதி
செல்வம் விபவந் திரு. (ச)

கருகூ. வல்ம்புரி கோடு வளைகம்பு நத்துச்
சலஞ்சலஞ் சங்கு பணில - மிலங்கிய
நித்திலமுத் தாரந் தரளந் துகிர்துப்பு
வித்துருமம் விற்பவள மாம். (ரு)

## ஆறவது
# பல்பொருட்பெயர்த்தொகுதி.

௧௩௫. பொன்னின்பெயர்.—மாசை, அரி, பீதம், மாடு, க்ரணம், பொலம், தேசிகம், ஈகை, ஆடகம், சொன்னம், நிதி, அருத்தம், வித்தம், நிதானம், வெறுக்கை, தனம். பொருள். (௧௭)

௧௩௬. சாமீகரம், சாதரூபம், தமனியம், மாடை, மாழை, சாம்பூநதம், ஏமம், கனகம், இரணியம், காஞ்சனம், ஈழம், பூரி, சந்திரம்.—௧௩. ஆடூ (௩௦.)

௧௩௭. வெள்ளியின்பெயர்.—தாரம், இரசிதம், களதவுதம். (௩)
தாமிரத்தின்பெயர்.—உதும்பரம், சீருள். (௨)
பித்தளையின்பெயர்.—ஆரகூடம், இரதி, மாயாபுரி. (௩)
வெண்கலத்தின்பெயர்.—கஞ்சம். (௧)

௧௩௮. இரும்பின்பெயர்.—கருந்தாது, அயம், (௨)
காரீயத்தின்பெயர்.—நாகம். (௧)
ஈயத்தின்பெயர்.—வங்கம், சீருள். (௨)
புதையலின்பெயர்.—நிக்கேபம். (௧)
செல்வத்தின்பெயர்.—பூதி, விபவம், திரு. (௩)

௧௩௯. சங்கின்பெயர்.—வலம்புரி, கோடு, வளை, கம்பு, நத்து, சலஞ்சலம், பணிலம், (௭)
முத்தின்பெயர்.—நித்திலம், ஆரம், தரளம். (௩)
பவளத்தின்பெயர்.—துகிர், துப்பு, வித்துருமம். (௩)

கசo. மாணிக்க முத்து மரகத நீலமணி
பேணும் வயிடூரி யம்வயிரம் - பூணும்
பவளங் கோமேதகம் புட்பரா கந்தா
னவமணியி னுமங்க ளாம். (சு)

கசக. உன்னயினி சொன்றி யுணுவசனம் போசன
நன்னருண வோதனம் போனக - மன்ன
மடைநிமிர்தல் மூரல் புழுக்கல் பதங்கூ
ழடிசில் சரு * புகா சோறு. (எ)

ஆறவது பல்பொருட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக செய்யுள் - கசக.

---

* புகர்வு எனவும் பாடம்.

௧௪0. நவமணியின்பெயர்.—மாணிக்கம், முத்து, மரகதம், நீல மணி, வயிடூரியம், வயிரம், பவளம், கோமேதகம், புட்பராகம். (௯)

௧௪௧. சோற்றின்பெயர்.—அயினி, சொன்றி, உணா, அசனம், போசனம், உணவு, ஓதனம், போனகம், அன்னம், மடை, நிமிர்தல், மூரல், புழுக்கல், பதம், கூழ், அடிசில், சரு, புகா. (௧௮)

பல்பொருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

## ஏழாவது
# செயற்கைவடிவின்பெயர்த்தொகுதி.

௧௪௨. கார்முகங் கோதண்டம் தனுவிற் கொடுமரம்
வார்சிலை சாபஞ் சராசனங் - கூர்வாளி
வெம்பகழி கோப்பல்லம் பாணங் ககங்காண்ட
மம்புகணை கோல்சரமே யாம். (௧)

௧௪௩. * சித்திர புங்கஞ் சிலீமுக மேகங்க
பத்திர மார்க்கணந் தோணியா - மத்திரம்
வெய்ய விசிகமே யாசுகஞ் சாயக
மெய்யுங் கதிரமென லாம். (௨)

௧௪௪. முக்குடுமி வேல்சூல மாம்பரசு மொய்கணிச்சி
மிக்க மழுவாழி நேமிவளை - சக்கரமாம்.
வெங்குலிசம் போரசனி வச்சிர நாந்தகம்வா
ளங்கரவா ளங்கட்க மாம். (௩)

௧௪௫. ஓங்கயில் சத்தி யுடம்பிடி வேலெஃகந்
தாங்கு மொருகதை தண்டீர்வா - ளோங்கு
கரபத் திரம்வே தினங்கப் பணந்தோ
மரமேகை வேல்விகற்ப மாம். (௪)

௧௪௬. கதவிற் செறிக்குந்தாழ் சீப்பாகுங் காவ
விதணங் கழுதுபர ணென்ப - ருதைந்தாடு
மூஞ்சலா மூசலு வூசல மென்பதூரல்
நாஞ்சி லலங்கலப்பை நாட்டு. (௫)

* சித்திரப்புங்கம் - தொகுக்கும் வழித்தொகுத்தல்.

ஏழாவது

## செயற்கைவடிவின்பெயர்த்தொகுதி.

கசஉ. வில்லின்பெயர்.—கார்முகம், கோதண்டம், தனு, கொடுமரம், சிலை, சாபம், சராசனம். (எ)

அம்பின்பெயர்.—வாளி, பகழி, கோ, பல்லம், பாணம், ககம், காண்டம், கணை, கோல், சரம். (கo)

கசங. புங்கம், சிலீமுகம், ஏ, கங்கபத்திரம், மார்க்கணம், தோணி, அத்திரம், விசிகம், ஆசுகம், சாயகம், கதிரம். ஆ௨ (உக)

கசச. சூலத்தின்பெயர்.—முக்குடுமிவேல். (க)

மழுவின்பெயர்.—பரசு, கணிச்சி. (உ)

சக்கரத்தின்பெயர்.—ஆழி, நேமி, வளை. (ஙு)

வச்சிரத்தின்பெயர்.—குலிசம், அசனி. (உ)

வாளின்பெயர்.—நாந்தகம், கரவாளம், கட்கம். (ஙு)

கசரு. வேலாயுதத்தின்பெயர்.—அயில், சுத்தி, உடம்பிடி, எஃகம்

தண்டின்பெயர்.—கதை.

ஈர்வாளின்பெயர்.—கரபத்திரம், வேதினம். (உ)

கைவேலின்பெயர்.—கப்பணம், தோமரம். (உ)

கசசு. தாழின்பெயர்.—சீப்பு. (க)

பரணின்பெயர்.—காவல், இதணம், கழுதி. (ஙு)

ஊஞ்சலின்பெயர்.—ஊசல். (க)

உரலின்பெயர்.—உலூகலம். (க)

கலப்பையின்பெயர்.—நாஞ்சில், அலம். (உ)

## ௫அ ஏழாவது செயற்கைவடிவின்பெயர்த்தொகுதி.

௪௭எ. மடிதுகில் கோசிகங் காழகஞ் சேலை
புடைவைகலிங் கந்தானை தூசு - படமாடை
புட்ட மறுவை புனைசாடி யம்பரம்
பட்டுடை கூறை படாம். (௬)

௪௭அ. தொங்கல் பிணைய ரொடைவண்டு சூழணிய
லங்கண்ணி செந்தேன் மலியலங்கல் - பைங்கோதை
தேம ஞெலிய றெரிய விலம்பகம்பூந்
தாம மொளிர்மாலை தார். (௭)

௪௭௯. கேயூர மங்கதந் தோளணி யாமென்பர்
தூய மணியாழி மோதிரஞ் - சேயொளி
சேருங் கலாபஞ் செறிமே கலைகாஞ்சி
யார மணிவடங்கா ழாம். (அ)

௪௮0. அணியிழை பூண்கல னாபரண மாகு
மணிமகுட மௌலி கிரீட - மணிமுடியாங்
கங்கண மாகுங் கடகந் தொடிவளை
யங்குழை குண்டலந்தோ டாம் (௯)

௪௮௧. பரிபுர நூபுரம் பைம்பொன் ஞெகிழி
யரிபெய் சிலம்பின் பெயராம் - *பரியகம்
பாதசா லம்புலம்பு கிண்கிணி யாஞ்சதங்கை
பாதகட கம்பாட கம். (௧0)

* பரியகம் - காலணியில் ஒருவகை.

கசஎ. சேலையின்பெயர்.—மடி, துகில், கோசிகம், காழகம், புடைவை, கலிங்கம், தானை, தூசு, படம், ஆடை, புட்டம், அறுவை, புனை, சாடி, அம்பரம், பட்டு, உடை, கூறை, படாம். (கக)

கசஅ. மாலையின்பெயர்.—தொங்கல், பிணையல், தொடை, அணியல், கண்ணி, அலங்கல், கோதை, ஒலியல், தெரியல், இலம்பகம், தாமம், தார். (கஉ)

கசக. தோளணியின்பெயர்.—கேயூரம், அங்கதம். (உ)
மோதிரத்தின்பெயர்.—ஆழி. (க)
மேகலாபரணத்தின்பெயர்.—கலாபம், காஞ்சி. (உ)
மணிவடத்தின்பெயர்.—ஆரம், காழ். (உ)

கருO. ஆபரணத்தின்பெயர்.—அணி, இழை, பூண், கலன். (ச)
கிரீடத்தின்பெயர்.—மகுடம், மௌலி, முடி. (௩)
கங்கணத்தின்பெயர்.—கடகம், தொடி, வளை. (௩)
குண்டலத்தின்பெயர்.—குழை, தோடு. (உ)

கருக. காற்சிலம்பின்பெயர்.—பரிபூரம், நூபுரம், ஞெகிழி. (௩)
பரியகத்தின்பெயர்.—பாதசாலம். (க)
சதங்கையின்பெயர்.—கிண்கிணி. (க)
பாடகத்தின்பெயர்.—பாதகடகம். (க)

கருஉ. உறிசிமிலி சிக்கமறை யோதுவோர் வேள்வித்
தறியூபம் போதிகை தானே - குறியதறி
தம்ப மதலைதூண் யானைத் தறிவெளில்
வம்பு மூலைக்கச்சு வார். (கக)

ஏழாவதுசெய்ற்கைவடிவின்பெயர்த்தொதுதிமுற்றிற்று.

ஆகூ செய்யுள் - கருஉ.

---

கடுஉ. உறியின்பெயர்.—சிமிலி, சிக்கம். (உ)

வேள்வித்தறியின்பெயர்.—யூபம். (க)

துறியதறியின்பெயர்.—போதிகை. (க)

தூணின்பெயர்.—தம்பம், மதலை. (உ)

யானைத்தறியின்பெயர்.—வெளில். (க)

மூலைக்கச்சின்பெயர்.—வம்பு, வார். (உ)

செயற்கைவடிவின்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

## எட்டாவது

# பண்புபற்றியபெயர்த்தொகுதி.

௧௫௩. பாண்டரங் கௌரஞ் சிதஞ்சுவே தந்தவளம்
பாண்டரம் பால்வா லருச்சுனம் - பாண்டு
சுசியவ தாதஞ் சுதைசுப் பிரமே
விசதம் விளர்கம் வெளுப்பு. (௧)

௧௫௪. சருமை கறையசிதங் காழகங் காள
மிருணீலஞ் சாமளஞ் சாம - மருணமொளி
கூடரத்தஞ் சோண முலோகித மஞ்சிட்டம்
பாடலம் பூவல் செவப்பு. (௨)

௧௫௫. அரித்துப் பலாச மரிதமரி பச்சை
யரித்திரா பம்பீதம் பொன்மை - தரித்த
புகர்நிறம் புன்மையாம் போற்றுங் குராலா
நிகரில் கபில நிறம். (௩)

௧௫௬. இலங்குதன் மின்ன லொளிர்த னிலவ
றலங்கல் விளங்க றளங்க - னலங்கொள்
படரொளி தேசு கிளர்கதிரொல் வில்வாள்
சுடர்விரியல் சோதியெனச் சொல். (௪)

௧௫௭. ஈரமு நேயமுங் காதலுங் காமமு
மார்வமு மிட்டமு மன்பிற்குப் - பேராங்
குழவுந் தருணமுங் கோமளமு நாகு
மெழிலு மழவுமிள மை. (௫)

## எட்டாவது
# பண்புபற்றியபெயர்த்தொகுதி.

கருரு. வெளுப்பின்பெயர்.—பாண்டரம், கௌரம், சிதம், சுவேதம், தவளம், பாண்டரம், பால், வால், அருச்சுனம், பாண்டு, சுசி, அவதாதம், சுதை, சுப்பிரம், விசதம், விளர், கம். (கள)

கருச. கருமையின்பெயர்.—கறை, அசிதம், காழகம், காளம், இருள், நீலம், சாமளம், சாமம். (அ)

சேவப்பின்பெயர்.—அருணம், அரத்தம், சோணம், உலோகிதம், அஞ்சிட்டம், பாடலம், பூவல். (எ)

கருரு. பச்சையின்பெயர்.—அரித்து, பலாசம், அரிதம், அரி. (ச)

பொன்மைநிறத்தின்பெயர்.—அரித்திராபம், பீதம். (உ)

கபிலநிறத்தின்பெயர்.—புகர்நிறம், புன்மை, குரால். (ங)

கருசா. ஒளிர்தலின்பெயர்.—இலங்குதல், மின்னல், நிலவல், துலங்கல், விளங்கல், துளங்கல். (சா)

ஒளியின்பெயர்.—தேசு, கிளர், கதிர் எல், வில், வாள், சுடர், விரியல், சோதி. (கூ)

கருஎ. அன்பின்பெயர்.—ஈரம், நேயம், காதல், காமம், ஆர்வம், இட்டம். (சா)

இளமையின்பெயர்.—குழவு, தருணம், கோமளம், நாகு, எழில், மழவு. (சா)

## எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி.

கடுஅ. ஆரியம ஞோகரங் காந்த மணிசோபங்
காரிகை பூவனப்புச் சுந்தர - மேமொழில்
வாமமியா ணர்மாமை வாகு தகைகவினி
ராமமபி ராமமழ காம். (சு)

கடுக. சுகமேமந் தொய்ய னகைமகிழ்ச்சி யின்ப
மகமலர்ச்சி யானந்த மாகுந் - தகுஞ்சரிதை
நல்லொழுக்கஞ் சாரித் திரஞ்சீல மாஞ்சிவண
லொல்லல்கூ டல்பொருந்த லாம். (எ)

கசுo. அனுசிதஞ் சத்தி யவிர்தமே யென்று
மனவரதஞ் சந்தத நித்த-மனரத
மெப்போழ்து மாகுமினி முற்றுமே லின்றின்னே
யிப்போழ் தெனவியம்ப லாம். (அ)

கசுக. கேத நடுக்கங் கிலேசந்தா பங்கவலை
வாதை யரந்தை வயாமம்மர் - வேதனை
வன்படர் பீழை யிடுக்க ணிடரிடும்பை
துன்பமஞர் துக்கந் துயர். (கூ)

கசுஉ. மேய விசாலம் விரிவு வியல்விபுல
மாய்வு நியக்குரோத மாமகல - மீயுயர்த
னேர்மை யொழுக் னெடுமை நெடினீளஞ்
சீர்மைகனம் பாரமெனச் செப்பு. (கo)

கருஅ. அழகின்பெயர்.—ஆரியம். மனோகரம், காந்தம், அணி, சோபம், காரிகை, பூ, வனப்பு, சுந்தரம், ஏர், எழில், வாமம், யாணர், மாமை, வாகு, தகை, கவின், இராமம், அபிராமம். (கசு)

கருகூ. இன்பத்தின்பெயர்.—சுகம், ஏமம், தொய்யல், நகை, மகிழ்ச்சி. (ரு)
ஆனந்தத்தின்பெயர்.—அகமலர்ச்சி. (க)
ஒழுக்கத்தின்பெயர்.—சரிதை, சாரித்திரம், சீலம். (ங)
பொருந்தலின்பெயர் —சிவணல், ஒல்லல், கூடல். (ங)

கசுO. சந்திசெயலின்பெயர்.—அனுசிதம். (க)
எப்போழ்தும்என்பது.—அவிர்தம், என்றும், அனவரததம், சந்ததம், நித்தம், அனாரதம், (சு)
இனியென்பது.—மற்று, மேல். (உ)
இப்போழ்துஎன்பது.—இன்று, இன்னே. (உ)

கசுக. துன்பத்தின்பெயர்.—கேதம், நடுக்கம், கிலேசம், தாபம், கவலை, வாதை. அரந்தை, வயா, மம்மர், வேதனை, படர், பீழை, இடுக்கண், இடர், இடும்பை, அனர், துக்கம், துயர். (கஅ)

கசுஉ. அகலத்தின்பெயர்.—விசாலம், விரிவு, வியல், விபுலம், ஆய்வு, நியக்குரோதம். (சு)
உயரத்தின்பெயர்.—மீ. (க)
நீளத்தின்பெயர்.—நேர்மை, ஒழுகல், நெடுமை, நெடில். ச
பாரத்தின்பெயர்.—சீர்மை, கனம். (உ)

## எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி.

௧௬௩. மதமபிமா னங்களிப்பு மத்தஞ் செருக்கா
மிதஞ்சுக மாமகிதந் துக்கஞ் - சிதைவில்
சகல நிகிலமுழுதும் மகண்டம் யாவு
மகிலமெல் லாமுற்று மாம். (௧௧)

௧௬௪. அதிர்ப்பு நடுக்கங் குலைதல் பனித்தல்
விதிர்ப்புத் தளம்ப லழுங்கல் - பொதிர்ப்புக்
கலங்கல் கம்பித்தல் கசடு தரளஞ்
சலங்கம் பிதஞ்சஞ் சலம். (௧௨)

௧௬௫. ஏர்தல் பொருந்த விணைகிடைசந் தம்புரைத
னேர்தல் சமந்துல் வியநிகர்த்தல் - சேர்தலே
மான லுறழ்தல் கடுப்பொப்புப் போலன்ன
வான வுவமைப்பே ராம். (௧௩)

௧௬௬. சவை தொகுதி சங்கங் கணஞ்சம வாய
மவைசமு தாயங் கதம்ப - நிவகமே
கோட்டிநிகா யம்பூகம் புஞ்சஞ் சயஞ்சமுகங்
கூட்டந் திரள்குழு வாம். (௧௪)

௧௬௭. உரந்துப் பெறும்மிடன் மைந்துவலி யாம்வக்
கிரங்குடிலம் வாங்கல்கூன் கோடல் - குரங்குத
லுள்ளுதல் சிந்தித்த லுன்ன னினைத்தலா
மெள்ளன கையிகழ்ச்சி யாம். (௧௫)

கசுரு. களிப்பின்பெயர்.—மதம், அபிமானம், மத்தம், செருக்கு. (ச)

சுகத்தின்பெயர்.—இதம். (க)

துக்கத்தின்பெயர்.—அகிதம். (க)

எல்லாம் என்பதின்பெயர்.—சகலம், நிகிலம், முழுதும், அகண்டம், யாவும், அகிலம், முற்றும். (எ)

கசுச. நடுக்கத்தின்பெயர்.—அதிர்ப்பு, குலைதல், பனித்தல், விதிர்ப்பு, தளம்பல், அழுங்கல், பொதிர்ப்பு, கலங்கல், கம்பித்தல். (கூ)

அசைவின்பெயர்.—கசடு, தரளம், சலம், கம்பிதம், சஞ்சலம். (ரு)

கசுரு. உவமையின்பெயர்.—ஏர்தல், பொருந்தல், இணை, கிடைசந்தம், புரைதல், நேர்தல், சமம், துல்லியம், நிகர்த்தல், சேர்தல், மானல், உறழ்தல், கடுப்பு, ஒப்பு, போல், அன்ன. (கஎ)

கசுசு. கூட்டத்தின்பெயர்.—சவை, தொகுதி, சங்கம், கணம், சமவாயம், அவை, சமுதாயம், கதம்பம், நிவகம், கோட்டி, நிகாயம், பூகம், புஞ்சம், சயம், சமுகம், திரள், குழு. (கஎ)

கசுஎ. வலியின்பெயர்.—உரம், துப்பு, எறுழ், மிடல், மைந்து.

வளைவியின்பெயர்.—வக்கிரம், குடிலம், வாங்கல், கூன், கோடல், குரங்குதல். (சு)

நினைத்தலின்பெயர்.—உள்ளுதல், சிந்தித்தல், உன்னல். ரு,

இகழ்ச்சியின்பெயர்.—எள்ளல், நகை, (உ)

சூஅ. எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி.

கசுஅ. நிச்னந் தனிபிர சன்னமே காந்த
நிசனகம் வேறிட நீங்கல் - வசனமிது
மாசின் மறைவாகுங் காம நசைவாஞ்சை
யாசைநச் சிச்சை யவா. (கசு)

கசுசு. யூகம் விகற்பம் விகடம் பிராந்திசந்
தேகமை யஞ்சங்கை விப்பிரம - மாகு
நவமு நவீனமு நூதனமும் வம்பு
மபிநவ மும்புதுமை யாம். (கஎ)

கஎ0. முன்பூர்வ மாதி முதலக் கிரந்தலையாம்
பின்பபர மந்தங் கடைமுடிவா - மன்பார்
தயாள மருள்கருணை யீர மிரக்கம்
பயானக மச்சம் பயம். (கஅ)

கஎக. நிறைதல் கமம்பூ ரணமலித லெஞ்சல்
குறைதலீ னஞ்சிங்கல் குன்றல் - குறையாங்
குமிழ்ப்புப் புளகமாங் கூம்புதல் சாம்பல்
சமழ்ப்புநாண் மானமிலச் சை. (கசு)

கஎஉ. பெருமை தடமால் கயநனி பீடு
குருமரபு மல்லல் விசாலம் - பருவுரு
வாகுஞ் சிறுமை யிலேசந் தனுவஞ்சக்
தோகமணு வற்பந் துடி. (உ0)

௧௬௮. தனியின்பெயர்.—நிசனம், பிரசன்னம், ஏகாந்தம், நீசனகம், வேறிடம். (௫)
மறைவின்பெயர்.—நீங்கல். (௧)
ஆசையின்பெயர்.—காமம், நசை, வாஞ்சை, நச்சு, இச்சை, அவா. (௬)

௧௬௯. விகற்பத்தின்பெயர்.—யூகம், விகடம். (௨)
சந்தேகத்தின்பெயர்.—பிராந்தி, ஐயம், சங்கை, விப்பிரமம். (௪)
புதுமையின்பெயர்.—நவம், நவீனம், நூதனம், வம்பு, அவிநவம். (௫)

௧௭௦. முதலின்பெயர்.—முன், பூர்வம், ஆதி, அக்கிரம், தலை. (௫)
முடிவின்பெயர்.—பின்பு, அபரம், அந்தம், கடை. (௪)
தயாளத்தின்பெயர்.—அன்பு, அருள், கருணை, ஈரம், இரக்கம். (௫)
அச்சத்தின்பெயர்.—பயானகம், பயம். (௨)

௧௭௧. நிறைதலின்பெயர்.—கமம், பூரணம், மலிதல். (௩)
குறைதலின்பெயர்.—எஞ்சல், ஈனம், சிங்கல், குன்றல், குறை. (௫)
புளகத்தின்பெயர்.—குமிழ்ப்பு. (௧)
கூம்புதலின்பெயர்.—சாம்பல். (௧)
நாணின்பெயர்.—சமழ்ப்பு, மானம், இலச்சை. (௩)

௧௭௨. பெருமையின்பெயர்.—தடம், மால், கயம், நனி, பீடு, குரு, மரபு, மல்லல், விசாலம், பருவுரு. (௧௦)
சிறுமையின்பெயர்.—இலேசம், தனு, வஞ்சம், தோகம், அணு, அற்பம், துடி. (௭)

கஎரு. மாசு தவறு வடுக்களங்கந் தீங்குமறு
காசுநவை கோது கசடுபழி - யாசுதோஞ்
சிரில் செயிர் போக்குக் குற்ற மரிலழுக்குத்
தேரில் புகர் பழுதாய்ச் செப்பு. (உக)

கஎசு. வஞ்சகங் கைதவங் கூடகங்குய் யங்கபடம்
வஞ்சனையாந் தேற்றந் தெளிதல் சூள் - வஞ்சினமாந்
தொன்மை புராணம் புராதனந் தொன்றுபுதி
தன்மைபூரு வம்பழமை யாம். (உஉ)

கஎஏ. போற்றுஞ் சயம்விசயம் வென்றியாடல் வெற்றி
யாற்றல் கெடவொலைத லஞ்சுதலாங் - ரேற்றலடல்
கோறல் வதைசெகுத்தல் கோபங் கதங்கடுத்தல்
சீறலே சீற்றஞ் சினம். (உங)

எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ செய்யுள் - கஎஏ.

கஎ௩. குற்றத்தின்பெயர்.—மாசு,தவறு,வடு,களங்கம்,தீங்கு,மறு, காசு,நவை, கோது, கசடு, பழி, ஆசு, தோம், செயிர், போக்கு, அரில், அழுக்கு, புகர், பழுது, (கக)

கஎ௪. வஞ்சகத்தின்பெயர்.—கைதவம், கூடகம், குய்யம், கபடம், வஞ்சனை. (ரு)
தெளிதலின்பெயர்.—தேற்றம். (க)
* சூளின்பெயர்.—வஞ்சினம். (க)
பழமையின்பெயர்.—தொன்மை, புராணம், புராதனம், தொன்று, புதிதன்மை, பூருவம். (சு)

கஎரு. வெற்றியின்பெயர்.—சயம், விசயம், வென்றி, ஆடல். (௪)
தோற்றலின்பெயர்.—ஆற்றல், கெடல், தொலைதல், அஞ்சுதல். (௪)
வதையின்பெயர்.—அடல், கோறல், செகுத்தல். (௩)
கோபத்தின்பெயர்.—கதம், கடுத்தல், சீறல், சீற்றம், சினம்.

பண்புபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

---

* சூள் - சபதம்.

## ஒன்பதாவது
# செயல்பற்றியபெயர்த்தொகுதி.

கஎசு. செயல்வி திகன்மங் கருமந் தொழில்செ
யயர்தல் வினைதலே யாற்றல் - குயிறலாம்
சிட்டித்தன் மற்றுஞ் சிருட்டித்த லுண்டாக்கல்
லொட்டல் படைத்த லுறல். (க)

கஎஎ. வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ்செய்தன் - முந்தித்
தொழுதலே தண்டன் றொடர்ந்து முயங்கல்
தழுவலே விள்ளுதலுஞ் சாற்று. (உ)

கஎஅ. வதுவை கைப் பற்றன் மணங்கலி யாணம்
விதியுளி வேட்டல் விவாகம் - புதுமனறல்
தொடலை விலாசனை வண்டல் கிரீடை
கெடவரல் கேளிக்கை யாம். (௩)

கஎகூ. அசித்த னுகர்த லயிறல ருந்தல்
புசித்த லுணறுய்த்தன் மாந்தன் - மிசைதலா
மிச்சின் மிகைசேட மிக்கபொரு ளாகுமென்ப
ரொச்சிலுச் சிட்டமென லாம். (ச)

கஅ0. திரித லியலல் செலவியங்கல் போதல்
வருதல் சரித்த னடத்தற் - குரியபெயர்
பஞ்சியணை பாய்பள்ளி கண்படை நித்திரை
துஞ்ச லுறக்கந் துயில் (ரு)

ஒன்பதாவது

## செயல்பற்றியபெயர்த்தொகுதி.

கஎசு. செயலின்பெயர்.—விதி, கன்மம், கருமம். (௩)
தொழில்செய்தலின்பெயர்.—அயர்தல், வனைதல், ஆற்றல், குயிறல். (௪)
படைத்தலின்பெயர்.—சிட்டித்தல், சிருட்டித்தல், உண்டாக்கல், ஒட்டல், (௪)

கஎஎ. வணங்கலின்பெயர்.—வந்தனை, காணல், பணிதல், தாழ்தல், சலாஞ்செய்தல், தொழுதல், தண்டன். (எ)
தழுவலின்பெயர்.—முயங்கல், விள்ளுதல். (உ)

கஎஅ. கலியாணத்தின்பெயர்.—வதுவை, கைப்பற்றல், மணம், விதியுளி, வேட்டல், விவாகம், மன்றல். (எ)
கிரீடையின்பெயர்.—தொடலை, விலாசனை, வண்டல், கெடவரல், கேளிக்கை. (ரு)

கஎகூ. புசித்தலின்பெயர்.—அசித்தல், நுகர்தல், அயிறல், அருந்தல், உணல், துய்த்தல், மாந்தல், மிசைதல். (அ)
மிக்கபொருளின்பெயர்.—மிச்சில், மிகை, சேடம். (௩)
எச்சிலின்பெயர்.—உச்சிட்டம். (க)

கஅ௦. நடத்தலின்பெயர்.—திரிதல், இயலல், செலல், இயங்கல், போதல், வருதல், சரித்தல். (எ)
பாயின்பெயர்.—அணை, பள்ளி, (உ)
நித்திரையின்பெயர்.—கண்படை, துஞ்சல், உறக்கம், துயில். (௪)

## ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த்தொகுதி.

கஅக. ஓடவிரிதல் கெடுத லுடைதலா
நாடலு நேடலுந் தேர்தலும் - தேடல்
பரித்தல் பொறுத்தல் சுமத்தலெடுத்த
றரித்த லிவைதாங்கு தல். (௬)

கஅஉ. ஒடித்த லிறுத்த லொசித்தன் முறித்தல்
படித்தலோ தல்கற்ற லாகும் - பிடித்ததோர்
வாரமோ ரம்பக்க வாத மதமர்த்தல்
கோரஞ்சண் டங்கு ரூரம். (எ)

கஅங. தணத்தலாந் தீர்த்த றவிர்த்தல் பந்தித்தல்
பிணித்தலாங் கட்டுத லார்த்தல் - பிணைத்த
லரங்க லழுங்க லழுந்துத லாகு
முரஞ்சுதன் முற்றுத லாம். (அ)

கஅச. எதிர்த்தல் கண்டித்த லெறித றுணித்தல்
பொதுத்தறுண் டித்திடல் காய்தல் - செதுக்குதல்
வெட்ட றுமித்த லரித லறுத்திடல்
சுட்ட லெரித்தல் சுடல். (கூ)

கஅரு. இன்மை மிடி யல்க லிலம்பாடு நல்குரவா
நன்மை யிடல் வண்மை வள்ளன்மை - புன்மையிலா
வேளாண்மை யீதல் வழங்கல் கொடைதருதல்
தாளாண்மையா முயற்சி தாள். (க0)

கஅக. ஓடலின்பெயர்.—இரிதல். (க)
கெடுதலின்பெயர்.—உடைதல். (க)
தேடலின்பெயர்.—நாடல், நேடல், தேர்தல். (ங)
சுமத்தலின்பெயர்.—பரித்தல், பொறுத்தல், எடுத்தல், தரித்தல், தாங்குதல். (ரு)

கஅஉ. ஒடித்தலின்பெயர்.—இறுத்தல், ஒசித்தல், முறித்தல். (ங)
படித்தலின்பெயர்.—ஓதல், கற்றல். (உ)
பக்கவாதத்தின்பெயர்.—வாரம், ஓரம். (உ)
மதர்த்தலின்பெயர்.—மதம். (க)
குரூரத்தின்பெயர்.—கோரம், சண்டம். (உ)

கஅங. தவிர்த்தலின்பெயர்.—தணத்தல், தீர்த்தல். (உ)
கட்டுதலின்பெயர்.—பந்தித்தல், பிணித்தல், ஆர்த்தல், பிணைத்தல். (ச)
அழுந்தலின்பெயர்.—அரங்கல், அழுங்கல். (உ)
முற்றுதலின்பெயர்.—முரஞ்சுதல். (க)

கஅச. வெட்டலின்பெயர்.—எதிர்த்தல், கண்டித்தல், எறிதல், துணித்தல், பொதுத்தல், துண்டித்திடல், காய்தல், செதுக்குதல், துமித்தல், அரிதல், அறுத்திடல். (கக)
சுடலின்பெயர்.—சுட்டல், எரித்தல், (உ)

கஅரு. தரித்திரத்தின்பெயர்.—இன்மை, மிடி, அல்க்ல், இல்ம்பாடு, நல்குரவு. (ரு)
நந்தலின்பெயர்.—நன்மை, இடல், வண்மை, வள்ளன்மை. வேளாண்மை, ஈதல், வழங்கல். கொடை, (அ)
முயற்சியின்பெயர்.—தாளாண்மை, தாள். (உ)

எசு ஒன்பதாவது செயல்பற்றியபெயர்த்தொகுதி.

கஅசு. கிட்டுதல் சேர்தல் பொருந்துதல் கூடுத
லொட்டுத லொன்ற லணைதலாங் - கட்டு
மரபு முறையுமுவல் மாலைபெற்றி தன்மை
பரிசு கிழமைவிதி பால். (கக)

கஅஎ. துறைத னிபிட நிரந்தரந் துன்றல்
பொதுளல் விரளமே துன்ன - லதிக
மிடைதல் செறிதலே மிண்டுதல் பம்ப
லடர்த னெருங்குத லாம். (கஉ)

கஅஅ. விழவாஞ்சா றுஞ்சேறும் வேண்டல் விருப்பாங்
கிழமை யுரிமை தலைமை - நிழல்சாயை
பண்ணை கெடவர லோரைபொய் தல்கேளி
வெண்ணகை யார்விளையாட் டாம். (கஙு)

கஅகூ. அமர்ஞாட்பு நேர்மலைத லாகவம் பூசல்
சமர மெதிர்தல் சமீகஞ் - சமரோ
செருவெஞ் சமஞ்சங் கிராமஞ் சினப்போ
ரிரணங் கலக மிகல். (கச)

ககூ0. கடுகல் விரைவு கதழ்வு துனைவு
சடுதி துரியஞ் சபதி - முடுகலே
சீக்கிர மாசு கடுப்புத் தணப்புவிட
னீக்கம் பிரிவகற னீப்பு. (கரு)

ஒன்பதாவது செயல்பற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக செய்யுள் - ககூ0.

கஅசு. கிட்டுதலின்பெயர்.—சேர்தல், பொருந்துதல், கூடுதல், ஒட்டுதல், ஒன்றல், அணைதல். (சு)
தன்மையின்பெயர்.—மரபு, முறை, உழுவல், மாலை,பெற்றி, பரிசு, கிழமை, விதி; பால். (கூ)

கஅஎ. நெருங்கலின்பெயர்.—துதைதல், நிபிடம், நிரந்தரம், துன்றல், பொதுளல், விரளம், துன்னல், அதிகம்,மிடைதல்,செறிதல், மிண்டுதல், பம்பல், அடர்தல். (கங)

கஅஅ. திருவிழாவின்பெயர்—விழவு, சாறு, சேறு, (ரூ)
வேண்டலின்பெயர்.—விருப்பு. (க)
உரிமையின்பெயர்.—கிழமை, தலைமை. (உ)
நிழலின்பெயர்.—சாயை. (க)
பெண்கள்விளையாட்டின்பெயர்.—பண்ணை, கெடவரல், ஓரை, பொய்தல், கேளி. (ரு)

கஅகூ. போரின்பெயர்.—அமர், ஞாட்பு, நேர், மலைதல், ஆகவம், பூசல், சமரம், எதிர்தல், சமீகம், சமர், செரு, வெஞ்சமம், சங்கிராமம், இரணம், கலகம், இகல். (கசு)

ககூ0. சீக்கிரத்தின்பெயர்.—கடுகல், விரைவு, கதழ்வு, துனைவு, சடுதி, சீரியம், சபதி, முடுகல், ஆசு, கடுப்பு. (க0)
பிரிவின்பெயர்.—தணப்பு,விடல், நீக்கம், அகறல், நீப்பு.

செயல்பற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

## பத்தாவது
# ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

கககக. கிளவி மொழிபேச்சு வாக்குச்சொன் மாற்ற
மளவி லுரைவாணி வார்த்தை - விளம்பல்
புகற னுவல லறைதல் விசைத்தல்
பகர்தலி வைபன் னுதல். (க)

ககஉ. வழுத்தல் புகழ்ச்சிதுதி வாழத்தேத்தல் போற்றல்
பழிச்சல் பரசல் பரவல் - தொழற்பெயரா
மாட னிருத்த நடநட்டங் கூத்திசைப்
பாடல்கீ தங்கானம் பாட்டு (உ)

கககூ. மெய்யுண்மை சத்தியம் வாய்மை திடஞ்சாதம்
பொய்சடங் கூடமிச்சை பொக்கமாஞ் - செய்தரும
மேவறம் புண்ணிய நல்வினை தீவினை
பாவ மறம்பாதகம். (கூ)

ககச. மழலை மிழற்றல் வருங்குதலை கொஞ்சன்
மிழலை நிரம்பாத மென்சொல் - பழிமொழியே
அம்ப லபவாத மங்கதச்சொ லாகுமே
வெம்புசிறு சொற்றீச்சொற் றூறு. (ச)

ககரு. குஞ்சங் குறளை கொடுவாயே கொண்டியம்
விஞ்சு பிசுநம் விரிதொடுப்புத் - துஞ்சுபெயர்
ஆசி விடக்க ரடக்கலுடன் கூகனம்
பேசின் மறை சொற் பெயர். (ரு)

## பத்தாவது
# ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

கசுக. சொல்லின்பெயர்.—கிளவி, மொழி, பேச்சு, வாக்கு, மாற்றம, உரை, வாணி, வார்த்தை. (அ)

சொல்லுதலின்பெயர்.—விளம்பல், புகறல், நுவலல், அறைதல், இசைத்தல், பகர்தல், பன்னுதல். (எ)

கசுஉ. தொழலின்பெயர்.—வழுத்தல், புகழ்ச்சி, துதி, வாழ்த்து, ஏத்தல், போற்றல், பழிச்சல், பரசல், பரவல். (கூ)

கூத்தின்பெயர்.—ஆடல், நிருத்தம், நடம், நட்டம். (ச)

இசைப்பாடலின்பெயர்.—கீதம், கானம், பாட்டு. (ஙு)

கசுங. மெய்ம்மையின்பெயர்.—உண்மை, சத்தியம், வாய்மை, திடம், சாதம். (ரு)

பொய்ம்மையின்பெயர்.—சடம், கூடம், இச்சை, பொக்கம்.

தருமத்தின்பெயர்.—அறம், புண்ணியம், நல்வினை. (ங)

பாவத்தின்பெயர்.—தீவினை, மறம், பாதகம். (ங)

கசுச. நிரம்பாதமென்சொல்லின்பெயர்.—மழலை, மிழற்றல், குதலை, கொஞ்சல், மிழலை. (ரு)

பழிச்சொல்லின்பெயர்.—அம்பல், அபவாதம், அங்கதம்.

சிறுசொல்லின்பெயர்.—தீச்சொல், தூறு. (உ)

கசுரு. துறளையின்பெயர்.—குஞ்சம், சொடுவாய், கொண்டியம், பிசுநம், தொடுப்பு. (ரு)

மறைத்துமொழியுஞ்சொல்லின்பெயர். — இடக்கரடக்கல், கூகனம். (உ)

ககசு. கொண்டாடன் மெச்சல் குலாவலே பாராட்டுப்
பண்பார் பெருஞ்சொற் பலரறிசொல் - தண்டா
நயச்சொ னளினச்சொ ஞடு மதுர்த்தம்
பயனின் மொழியாய்ப் பகர் (சு)

ககஎ. கூறியது கூறல் குறிக்கிற் புனருத்தி
யேறு நகைச்சொலி யலசதி - ஈறில்லா
மிக்குச் சிரித்து விளம்பல் விடாதுரைத்தல்
கத்தல் பிதற்றலாய்க் காண். (எ)

ககஅ. சங்கதந் தேவச்சொல் சாலார்க் கவப்பிரஞ்சந்
துங்கர் பிராகிருதஞ் சூழுவர் - இங்கிதிற்சேர்
தற்பவ மாரியந் தற்சமந் தான்பொது
விற்றேசி கந்திசைச்சொல் வேண்டு. (அ)

ககக. வினவல் கடாவல் விடையுத் தரமே
வினவிடை கூட்டி விளம்ப - றனையுரைப்பிற்
சல்லாபச் சொல்முகமன் சன்மான மின்னய
மெல்லா முபசார மேல். (க)

உ௦௦. நூலாக மங்கலே தந்திர நுண்பனுவன்
மாலாகு மையன் மருண்மயக்கம் - வாலாமை
சூதகந் தூய்தன்மை சொல்லுமலர் கவ்வையம்பல்
பாதகம் பாவம் பழி. (க௦)

கசகூ. கொண்டாடலின்பெயர்.—மெச்சல், குலாவல், பாராட்டு.
பெருஞ்சொல்லின்பெயர்.—பலரறிசொல். (க)
நயச்சொல்லின்பெயர்.—நளினம். (க)
பயனில்சொல்லின்பெயர்.—அநர்த்தம். (க)

கசுஎ. புனருத்தியின்பெயர்.—கூறியதுகூறல். (க)
நகைச்சொல்லின்பெயர்.—அசதி, மிக்குச் சிரித்துவிளம்பல். (உ)
விடாதுபேசலின்பெயர்.—கத்தல், பிதற்றல். (உ)

கசுஅ. தேவர்மொழியின்பெயர்.—சங்கதம். (க)
இழிசனர்மொழியின்பெயர்.—அவப்பிரஞ்சம். (க)
உயர்ந்தோர்மொழியின்பெயர்.—பிராகிருதம். (க)
ஆரியத்திரிசொல்லின்பெயர்.—தற்பவம். (க)
ஆரியத்திற்குந்தமிழிற்கும் பொதுச்சொல்லின்பெயர்.—தற்சமம் (க)
தேசிகச்சொல்லின்பெயர்.—திசைச்சொல் (க)

கசுகூ. வினாவலின்பெயர்.—கடாவல். (க)
விடையின்பெயர்.—உத்தரம். (க)
வினாவும் விடையுங்கூட்டிச் சொல்லுதலின்பெயர்.—சல்லாபம். (க)
உபகாரச்சொல்லின்பெயர்.—முகமன், சன்மானம், இன்னயம். (௩)

உ00. நூலின்பெயர்.—ஆகமம், கலை, தந்திரம், பனுவல். (௪)
மயக்கத்தின்பெயர்.—மால், மையல், மருள். (௩)
தூய்தன்மையின்பெயர்.—வாலாமை, சூதகம். (உ)
* அலரின்பெயர்.—கவ்வை, அம்பல். (உ)
பழியின்பெயர்.—பாதகம், பாவம். (உ)

* அலர்பிறரறிந்துதூற்றல்.

௨0௧. சிலம்பலிசை நாதங் கம்பலை சும்மை
யலம்பர வந்துழனி யார்ப்புப் - புலம்பல்
கலித்த விரங்கல் கறங்கறு வைத்த
லொலித்த விரட்டோசை யாம். (௧௧)

௨0௨. திமிலந்து வைத்த றெழித்த லதிர்ச்சி
குமுத முரற்றல் குமுற - தமரங்
கலகங் குமிலம் களகளம் பூசல்
வலிபே ரொலிக்காம் வழக்கு. (௧௨)

௨0௩. அம்மென லொல்லென லார்ந்திட் டிழுமெனல்
கொம்மெனல் கல்லெனல் கோவென - விம்மெனல்
வல்லெனல் பொள்ளெனல் வாய்ந்தவிவை யாயுங்காற்
சொல்லி லனுகரணஞ் சூழ்.

௨0௪. கடகடென லோடு களகளெனல் சாலப்
படபடென வின்னும் பகரிற் - றிடுதிடென்
றிட்டனெறு நெறென வீதுபயச் சத்தமெனத்
திட்டமுடன் சொன்னார் தெளிந்து. (௧௪)

௨0௫. துழனி கலகலச் சொல்பறவைச் சத்தம்
கழிபெறுங் கோலா கலமே - குழுவிலங்கின்
னஞ்சத்தம் சோலையி லையாலன் மருமரஞ்
சிஞ்சிதம் பூணின் சிலை. (௧௫)

௨0௬. மந்தரங் காகுளி மந்தவிசைப் பெயர்
சஞ்சமுறு மத்திமஞ் சானமதாம் - முந்துசம
ஞோசையாந் தாரமுட னுச்சமது வல்லிசையாம்
பேசி னொலிப்பேதம் பேண். (௧௬)

உ0க. ஓசையின்பெயர்.—சிலம்பல், இசை, நாதம், கம்பலை, சும்மை, அலம்பல், அரவம். துழனி, ஆர்ப்பு, புலம்பல், கலித்தல், இரங்கல், கறங்கல், அவைத்தல், ஒலித்தல், இரட்டு. (கசு)

உ0உ. பேரொலியின்பெயர்.—திமிலம், துவைத்தல், தெழித்தல், அதிர்சசி, குமுதம், உரற்றல், குமுறல், தமரம், கலகம், குமிலம், களகளம், பூசல். (கஉ)

உ0ங. அனுகரணவோசையின்பெயர்.—அம்மெனல், ஒல்லெனல், இழுமெனல், கொம்மெனல், கல்லெனல், கோவெனல், இம்மெனல், வல்லெனல், பொள்ளெனல். (கூ)

உ0ச. உபயவோசையின்பெயர்.—கடகடெனல், களகளெனல், படபடெனல், திடுதிடெனல், நெறுநெறெனல். (ரு)

உ0ரு. புள்ளொலியின்பெயர்.—துழனி, கலகலம். (உ)
விலங்கொலியின்பெயர்.—கோலாகலம். (க)
இலைமுதலியவற்றன்எழுமொலியின்பெயர்.—மருமரம்.
பூணொலியின்பெயர்.—சிஞ்சிதம். (க)

உ0சு. மந்தவிசையின்பெயர்.—மந்தரம், காகுளி. (உ)
சமனோசையின்பெயர்.—சஞ்சம், மத்திமம், சானம். (ரு)
வல்லிசையின்பெயர்.—தாரம், உச்சம். (உ)

## பத்தாவது ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

உ0எ. படலஞ் சருக்கம பரிச்சேதங் காண்ட
மிடரி லிலம்பக மெல்லாந் - தொடர்பினுறப்
பல்பொருள்கள் வைப்பாம் பகரி லினப்பொருள்கள்
சொல்லிய லோத்தென்றே சூழ். (கஎ)

உ0அ. கவிகவிதை செய்யுள் கவின்றொடர்பு தூக்கு
நவில்யாப்புப் பா பாட்டிணுமை - மிவையாகும்
வெண்பாவின்பேர் முதற்பா வெள்ளை விளங்ககவல்
பண்பாரு மாசிரியப்பா. (கஅ)

உ0கூ. பதிகம் புனைந்துறை பாயிர மாகு
மிதிகாசங் காட்டென் றிசைப்பர் - உதாரணப்பேர்
வஞ்சினஞ் சத்தியம் வட்டித்த லாணையெலா
மெஞ்சில் சபத மிசை. (ககூ)

உக0. பாசுரம் வார்த்தை பகர்வசனம் வாசகம்
தேசாரும் பாழி திசைச்சொல்லாங் - கூசாக்
கழற விடித்தல் கதித்துறுதிச் சொல்லென்
றிழிபின் றுரைத்தா ரியைந்து. (உ0)

உகக. அறைகூவல் போரழைத்தலாகு முதுசொன்
முறைசேரு மூதுரை முன்சொற் - றிறமுடனே
தன்னைமேம் பாட்டுச்சொற் றுணு நெடுமொழி
மன்னி வியப்பின் வரும். (உக)

உகஉ. அந்திலி ருந்திட் டரோவிகுந் தில்விகபோ
தந்தும் பிறபிறக்குத் தானின்று - மன்மன்னே
மாமாது மாதோவான் மற்றத்தன் றேருஞ்சின்
ஞமமீ தெல்லா மசை. (உஉ)

உ0எ. படலத்தின்பெயர்.—சருக்கம், பரிச்சேதம், காண்டம், இலம்பகம், பல்பொருள்கள்வைப்பு. (ரு)

இயலின்பெயர் —ஓத்து. (க)

உ0அ. செய்யுளின்பெயர்.—கவி, கவிதை, தொடர்பு, தூக்கு, யாப்பு. பா, பாட்டு, (எ)

வெண்பாவின்பெயர்.—முதற்பா, வெள்ளை. (உ)

ஆசிரியப்பாவின்பெயர்.—அகவல். (க)

உ0கூ. பாயிரத்தின்பெயர்.—பதிகம், புனைந்துரை. (உ)

உதாரணத்தின்பெயர்.—இதிகாசம், காட்டு. (உ)

சபதத்தின்பெயர்.—வஞ்சினம், சத்தியம், வட்டித்தல், ஆணை. (ச)

உக0. வாசகத்தின்பெயர்.—பாசுரம், வார்த்தை, வசனம். (ங)

திசைச்சொல்லின்பெயர்.—பாழி. (க)

உறுதிச்சொல்லின்பெயர்.—கழறல், இடித்தல். (உ)

உகக. போரவழைத்தலின்பெயர்.—அறைகூவல். (க)

முதுரையின்பெயர்.—முதுசொல், முன்சொல். (உ)

மேம்பாட்டுச்சொல்லின்பெயர்.—நெடுமொழி. (க)

உகஉ. அசைச்சொல்லின்பெயர்.—அந்தில், இருந்து, இட்டு, அரோ, இகும், தில், இக, போ, தம், நம், பிற, பிறக்கு, தான், நின்று, மன், மன்னோ, மா, மாது, மாதோ, வான், மற்று, அத்து, அன்று, ஓரும், சின். (உகு)

உகரு. மாவே வியங்கோள் வருமசை யம்மவுரை
மேவசை யென்றே விளம்புவர் - பாவா
யிகமியா மோமதி யத்தையித்தை மாள
பகர்முன் னிலையசையாய்ப் பார். (உரு)

பத்தாவது ஒலிபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ செய்யுள் - உகரு.

உகரு. வியங்கோளசைச்சொல்லின்பெயர்.—மா. (க)
உரையசையிடைச்சொல்லின்பெயர்.—அம்ம. (க)
முன்னிலையசையிடைச்சொல்லின்பெயர்.—இக, மியா, மோ, மதி, அத்தை, இத்தை, மாள. (எ)

ஒலிபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

## பதினோராவது
# ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

உகச. அரிபன்றி தேரைகிளி பச்சையளி சிங்கம்
பரிகவிபாம் பிந்திரன்மால் கால்கூற் - றிருசுடர்தீ
கோவிறை திக்குக் கிரணஞ் சலங்குலிச
மாவரைகண் பார்சுவர்க்க மம்பு. (க)

உகரு. கந்தலை வாயுப் பிரமன் சலஞ் சுவர்க்கம்
புந்தி வசுமணி கோதனந்தீ - யந்தரத்தோர்
தீயபழிப் புப்பொன் றிரளறிவு வித்தநீ
ராயுதங்கா டாடைகாண் டம். (உ)

உகசு. வாருபுன்னை யாடைகா ரீயமலை யானை
வேக விட வரவ மேலுலக - நாகமாந்
துப்புப் பவளம் வலியரக்குத் தாமரை
யப்புக் கமலமென லாம். (ங)

உகஎ. தனபதி சோமன் குபேரனுங் கானீர்
வனமாங்கார் பொன்செறிவு பாரங் - கனமா
நலந்தெய்வ மாசை நலிமா தணங்காம்
பொலந்திசைசேய் புந்தி பொருள். (ச)

உகஅ. மல்லல் வலியும் வளனு மிகுதியுமாங்
கல்லொலிவின் மூலங் கடுஞ்சிலைக்கா - நல்ல
தலமா யிரங்கதிரோன் ருணுத் தரணி
குலமாந் தொழுவில் குடி. (ரு)

## பதினோராவது
# ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

உகச. அரி என்பது.—பன்றி, தேரை, கிளி, பச்சை, வண்டு, சிங்கம், குதிரை, குரங்கு, பாம்பு, தேவேந்திரன், விஷ்ணு, காற்று, இயமன், சந்திரன், சூரியன், நெருப்பு. (கசு)

கோ எ-து.—இராசா, திக்கு, கிரணம், நீர், வச்சிராயுதம், மலை, கண், பூமி, தெய்வலோகம், அம்பு. (க0)

உகரு. கம் எ-து.—தலை, வாயு, பிரமன், நீர், தெய்வலோகம், அறிவு. (சு)

வசு எ-து.—மணி, பசுவின்கன்று, நெருப்பு, வசுக்கள். (ச)

வித்தம் எ-து.—பழிப்பு, பொன், கூட்டம், அறிவு. (ச)

காண்டம் எ-து.—நீர், ஆயுதம், காடு, வஸ்திரம். (ச)

உகசு. நாகம் எ-து.—புன்னைமரம், வஸ்திரம், காரீயம், மலை, யானை, பாம்பு, தெய்வலோகம். (எ)

துப்பு எ-து.—பவளம், வல்லமை, அரக்கு. (ங)

கமலம் எ-து.—தாமரை, நீர். (உ)

உகஎ. குபேரன் எ-து.—தனபதி, சந்திரன்.

வனம் எ-து.—காடு, நீர். (உ)

கனம் எ-து.—மேகம், பொன், செறிவு, பாரம். (ச)

அணங்கு எ-து.—அழகு, தெய்வம், ஆசை, நோய், கொல்லியம்பாவை. (ரு)

பொருள் எ-து.—பொன், திசை, மகன், அறிவு. (ச)

உகஅ. மல்லல் எ-து.—வல்லமை, வளப்பம், மிகுதி. (ஙு)

சிலை எ-து.—கல், ஓசை, வில், மூலநாள். (ச)

தரணி எ-து.—பூமி, சூரியன், மலை. (ங)

குலம் எ-து.—இரேவதிநாள், மனை, சாதி. (ங)

## ௧௦ பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

௨௧௯. அம்பர மாகாய மாடைகடல் வெற்புச்சி
கொம்புபணி லங்கனா கோடென்ப - ரம்பு
பறவை ககமா மிதணமும் பேயு
மறுபத முங்கழுதுக் காம். (௬)

௨௨௦. வாம மிடப்பால் வனப்புக் குறங்குகுற
டாம மலங்கலொளி தாமணியா - நேமி
பரவை திகிரி பயோதரங்கார் கொங்கை
யரவ மொலிநாக மாம். (௭)

௨௨௧. சலமுதிரங் காடிகீ லாலம்பா னீய
நிலமுதகந் தக்கணந் தெற்கு - வலமாங்
கவிகவிதை வானரஞ் சுக்கிரனுஞ் சோலை
புவிபெருமை நாடு பொழில். (௮)

௨௨௨. அத்தி யதவானை யார்கலியென் பூருகுஞ்
சுத்த மணிவடம்பூண் சந்தாத்தி - முத்தாரம்
பூமரம் பொற்றை யுகிர்நகம் புண்டரிகந்
தாமரை திக் கானைபுலி வண்டு. (௯)

௨௨௩. வச்சிரமோர் கள்ளி வயிரமணி குலிசங்
கச்சுநவம் வம்புகாந் தாரம்பண் - ணச்சுமிசை
கானமாங் கோழி கவசந் தடைகடல்
யானைமெய்ப்பை சங்குவார ணம். (௧௦)

௨௧௯. அம்பரம் என்பது.—ஆகாயம், வஸ்திரம், கடல். (௩)
கோடு எ-து.—மலையினுச்சி, மரக்கொம்பு,சங்கு,நீர்க்கரை,
ககம் எ-து.—அம்பு, பறவை. (௨)
கழுது எ-து —பரண், பேய், வண்டு. (௩)

௨௨௦. வாமம் எ-து.—இடப்பால, அழகு, தொடை, குறுமை.
தாமம் எ-து —மாலை, ஒளி, தாமணி. (௩)
நேமி எ-து. கடல், சக்கரம். (௨)
பயோதரம் எ-து.—மேகம், முலை. (௨)
அரவம் எ-து.—ஓசை, பாம்பு. (௨)

௨௨௧. கீலாலம் எ-து.—நீர், இரத்தம், கஞ்சி. (௩)
உதகம் எ-து.—நீர், பூமி. (௨)
தக்கணம் எ-து.—தெற்கு, வலப்பக்கம். (௨)
கவி எ-து.—கவிதை, குரங்கு, சுக்கிரன். (௩)
பொழில் எ-து.—சோலை, பூமி, பெருமை, நாடு. (௪)

௨௨௨. அத்தி எ-து.—அத்திமரம், யானை, கடல், என்பு, கொலை.
ஆரம் எ-து.—மணிவடம், ஆபரணம்,சந்தனம்,ஆத்திமரம்,
முத்து. (௫)
நகம் எ-து.—பூமி, மரம், மலை, நகம். (௪)
புண்டரிகம் எ-து.—தாமரை, திக்கானை, புலி, வண்டு.(௪)

௨௨௩. வச்சிரம் எ-து.—சதுரக்கள்ளி, வயிரமணி, வச்சிராயுதம்.
வம்பு எ-து.— கச்சு, புதுமை. (௨)
காந்தாரம் எ-து.—ஓர்பண், இசை, காடு. (௩)
வாரணம் எ-து.—கோழி, கவசம், தடை, கடல், யானை,
சட்டை, சங்கு. (௭)

## ௬௨ பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

௨௨௪. தான மதங்கொடைவால் வெண்மை மிகுதிசுத்தங்
கானமணஞ் சோலையிசை காடாகு - மானளி
சாரங்க மாம்வையம் பண்டி யுரோகணிதேர்
பாரங்கை நீர்சொல்பா ணியாம். (௧௧)

௨௨௫. இரவி யருக்கன் பருப்பத மென்பர்
புரவி நீர் சேறு டயமா - மிரவியல்பு
தார்மாலை சக்கர மூங்கில் மலைதிகிரி
பார்மானல் பெற்றி படி. (௧௨)

௨௨௬. படை தேர்க்கால் வட்டம் பறவை பெருமை
புடவி பிறப்புப் பொருப்புக் - கடலே
கிரிமல் லிகைசக் கரமாங் கிளவி
கருமை பெருமை கறுப்பு. (௧௩)

௨௨௭. கடிபுதுமை கூர்மைமண நாற்றம்பேய் காவல்
முடிகலச்சங் கால மிகுதி - மடிவயின்
சோம்புபொய் சீலைமலை தூறுகஞ்சப் பூவிறும்பே
யாம்புளா யொப்புயர மாசு. (௧௪)

௨௨௮. யானைத் து திக்கைத் தலைபருந்து தீர்த்தநீர்
பான்மை கமலம்வாள் பாண்டமுகம் - வானிறைவு
புடகரமெஃ காமுருக்குக் கூர்மைவேல் வாள்காடு
முட்கண் டகமாய் மொழி. (௧௫)

உ௨௪. தானம் என்பது.—மதம், கொடை. (உ)
வால் எ-து.—வெண்மை, மிகுதி, சுத்தம். (௩)
கானம் எ-து —வாசனை, சோலை, இசைப்பாட்டு, காடு. (௪)
சாரங்கம் எ-து.—மான், வண்டு. (உ)
வையம் எ-து.—பண்டி, உரோகணிநாள், தேர், பூமி (௪)
பாணி எ-து.—கை, நீர், சொல். (௩)

உ௨௫. இரவி எ-து.—சூரியன், மலை. (உ)
அயம் எ-து.—குதிரை, நீர், சேறு, ஆடு. (௪)
மாலை எ-து.—இரா, குணம், மாலை. (௩)
திகிரி எ-து.—சக்கராயுதம், மூங்கில், மலை. (௩)
படி எ-து.—பூமி, ஒப்பு, குணம். (௩)

உ௨௬. சக்கரம் எ-து.—சக்கராயுதம், தேருருளை, வட்டவடிவு, சக்கரவாகப்பட்சி, பெருமை, பூமி, பிறப்பு, மலை, கடல், மலைமல்லிகை. (௧0)
கருமை எ-து.—பெருமை, கறுப்பு. (உ)

உ௨எ. கடி எ-து.—புதுமை, கூர்மை, கலியாணம், வாசனை, பேய், காவல், சீக்கிரம், அச்சம், காலம், மிகுதி. (௧0)
மடி எ-து.—வயிறு, சோம்பு, பொய், சீலை. (௪)
இறும்பு எ-து —மலை, சிறுசெடி, தாமரைப்பூ. (௩)
புரை எ-து —ஒப்பு, உயரம், குற்றம். (௩)

உ௨அ. புட்கரம் எ-து —யானைத்துதிக்கைநுனி, பருந்து, தீர்த்தம். நீர், குணம், தாமரை, வாள், பாத்திரத்தினதுவாய், ஆகாயம், நிறைவு. (௧0)
எஃகு எ-து.—உருக்கு, கூர்மை, வேல். (௩)
கண்டகம் எ-து.—வாளாயுதம், காடு, முள். (௩)

## ௧௪ பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

உ௰௯. இலையு நிலனுந் தலங்கொடு வாளு
முலையுங் குயம்வில் லொளியுஞ் - சிலையுங்
கரியானை சான்றிருந்தை யாஞ்சிலம்பு குன்ற
மரிநூ புரமொலியாம். (௧௬)

உ௬௦. தாதுபஞ்ச லோக மிரதாதி யேழைந்து
பூதநற்செங் கற்ருது மாதளைது - ளோதிமம்
பூமன் சிறையன்னம் பூதர மானமா
தாமங் கொடிப்படை தார் (௧௭)

உ௬௧. சயமே சருக்கரை யூர்கோள் விசய
மயில்வே லிரும்புகூர் நாஞ்சில் - துயர்பகை
போதலுள்ளல் மார்க்கம் படராம் விளிவுகெடல்
சாதல் வேர் வேணி சடை. (௧௮)

உ௬உ. குடையுங் கொடையுங் கவிகையா மென்பர்
படைசேனை யாயுத மாகும் - வடம்விட
மாலமா மொத்தல் பகைத்த லுறழ்தலாம்
தாலமாம் பெண்ணை தலம். (௧௯)

உ௬௩. ஆழிவே லாவலயஞ் சக்கர மோதிரமாம்
பாழிபெருமை யிடம்வலியாந் - தாழையாந்
தெங்குமடற் கைதை சீலதெருத் தோலுந்தி
தொங்க லொலியலெனுஞ் சொல். (உ௦)

உஉகூ. தலம் என்பது.—இலை, பூமி. (உ)
துயம் எ-து.—கொடுவாள், முலை. (உ)
வில் எ-து.—ஒளி, வில்லாயுதம். (உ)
கரி எ-து.—யானை, சாட்சி, கரி. (ங)
சிலம்பு எ-து.—மலை, காற்சிலம்பு, ஓசை. (ங)

உருo. தாது எ-து.—பஞ்சலோகம், இரதாதியேழு, ஐம்பூதம், காவிக்கல், தாது, மாதளை, பூந்தாது. (எ)
ஓதிமம் எ-து.—அன்னப்பட்சி, மலை, சவரிமான். (ங)
தார் எ-து.—மாலை, கொடிப்படை. (உ)

உருக. விசயம் எ-து.—வெற்றி, சருக்கரை, பரிவேடம். (ங)
அயில் எ-து.—கைவேல், இரும்பு, கூர்மை, கலப்பை. ச
படர் எ-து.—துயர், பகை, நடத்தல், நினைத்தல், வழி. (ரு)
விளிவு எ-து.—கெடல், இறத்தல். (உ)
சடை எ-து.—வேர், சடை. (உ)

உருஉ. கவிகை எ-து.—குடை, கொடுத்தல். (உ)
படை எ-து.—சேனை, ஆயுதம். (உ)
ஆலம் எ-து.—ஆலமரம், நஞ்சு. (உ)
உறழ்தல் எ-து.—ஒத்தல், பகைத்தல். (உ)
தாலம் எ-து.—பனைமரம், பூமி. (உ)

உருங. ஆழி எ-து.—சமுத்திரம், சக்கராயுதம், மோதிரம். (ங)
பாழி எ-து.—பெருமை, முனிவர்வாசம், வல்லமை. (ங)
தாழை எ-து.—தென்னமரம், தாழை. (உ)
ஒலியல் எ-து.—சீலை, தெரு, தோல், ஆறு, பூமாலை. (ரு)

## ௬௬ பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

உ௬௪. கந்த மணங்கிழங்கு கார்கழுத்து வெற்பினளை
கந்தர மாகுங் கழைகரும்பு - சந்தி
கறையாகுஞ் செம்பால் கருமைமக ரில்லூர்
சிறையாகுங் காவல் சிறகு. (உ௧)

உ௬௫. சிகிமயிலுந் தீயுஞ் சிலம்பு மரவுஞ்
சிகரிவரை கோபுரமங் காடி - வகிர்நியமங்
காணுகுங் கூடாகுங் கட்சி குணாயொலிமா
வானுமா காய மழை. (உ௨)

உ௬௬. பிரமம்வே தாவேத மந்திரமால் வேள்வி
யிரவிமதி தீமுனிவர் முத்தி - தருமநூல்
தன்மை யுலக வழக்கந் தவமீசன்
மென்மை யியல்பு விதி. (உ௩)

உ௬௭. அரவு தவளை முதலைமீ னைமை
யரணை யுடும்ரோந்தி யிப்பி - விரிபறவை
பல்லிநண் டண்டச மாகும் பதாகைகொடி
வல்லி யரில்பிணக்கு மாசு. (உ௪)

உ௬௮. உததிநதி நீர்சிந்தாந் தூண்கலஞ்சேய் கொன்றை
மதலையாந் தேறுகொடி வாழை - கதலி
பொறியா மதிதிரு புள்ளிசெல்வந் தேமல்
வெறியாடச் சங்கள் விளை. (உ௫)

உகூச. கந்தம் எ-து.—வாசனை, கிழங்கு. (உ)
கந்தரம் எ-து.—மேகம், கழுத்து, மலைக்குகை. (௩)
கழை எ-து.—கரும்பு; மூங்கில். (உ)
கறை எ-து.—இரத்தம், கறுப்பு. (உ)
நகர் எ-து.—வீடு, ஊர். (உ)
சிறை எ-து.—காவல், சிறகு. (உ)

உகூரு. சிகி எ-து.—மயில், நெருப்பு, சிலம்பு, கேதுக்கோள். (ச)
சிகரி எ-து.—மலை, கோபுரம். (உ)
நியமம் எ-து.—அங்காடி, வழி. (உ)
கட்சி எ-து.—காடு, கூடு. (உ)
துரை எ-து.—சத்தம், குதிரை. (உ)
வான் எ-து.—ஆகாயம், மழை. (உ)

உகூசு. பிரமம் எ-து.—பிரமன், வேதம், மந்திரம், திருமால், யாகம், சூரியன், சந்திரன், நெருப்பு, முனிவர், மோட்சம், தருமநூல். குணம், உலகவழக்கம், தவம், ஈசன், மென்மை, ஒழுக்கம், நியமிப்பு,

உகூஎ. அண்டசம் எ-து.—பாம்பு, தவளை, முதலை, மீன், ஆமை, அரணை, உடும்பு, ஓணன், சங்கு, பறவை, பல்லி, ஞெண்டு. (கஉ)
வல்லி எ-து.—விருதுக்கொடி, படர்கொடி. (உ)
அரில் எ-து.—பிணங்கல், குற்றம். (உ)

உகூஅ. சிந்து எ-து.—சமுத்திரம், நதி, நீர். (௩)
மதலை எ-து.—தூண், கப்பல், பிள்ளை, கொன்றைமரம்.
கதலி எ-து.—தேற்றுமரம், விருதுக்கொடி, வாழை. (௩)
பொறி எ-து.—அறிவு, திருமகள், புள்ளி, செல்வம், தேமல்.
வெறி எ-து.—ஆடு, அச்சம், கள், வாசனை, (ச)

## ௧௮ பதினோராவதுஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

௨௩௯. பெருமை மலைபிறங்கல் கன்னல் கடிகை
கரகந் திமிர நரக - மிருளா
மொழிதல் கெடுதல் வறுமையே வீத
லழகன்பு பாடுதகை யாம். (௨௬)

௨௪௦. தட்டைதினைத் தாண்மழித்தல் தத்தைகடி கோன்மூங்கில்
முட்டை யுறுப்புக் கவடுசினை - பட்டமடு
வோடையாம் வல்விரைவு மேடுவன்மை சூதாகு
மாடுகுற்ற மால்கறுப்பு மை. (௨௭)

௨௪௧. குற்றங் கறைகளங்க மாமங்க ணஞ்சேள்
முற்றமாங் கோதுஞ் சிறுமையுங் - குற்றமாம்
மாக்கடல்கா லங்கருமம் வேலைவள்கூர் காதுவாள்
யாக்கைதிரள் சோறுபிண்ட மாம். (௨௮)

௨௪௨. வளநவம் யாணர் மணங்கூட்ட நாற்றம்
நளிபெருமை சீதஞ் செறிவு - தளிமமா
மெத்தை யழகு தழைதேக்குச் சாகமா
மத்தநடை கைநாள்பொன் னும். (௨௯)

௨௪௩. அருத்தந் தனஞ்சொற் பொருள்பயன் பாதி
கருத்துப் பவித்திரஞ் சுத்தந் - தருப்பை
திரண்மாயம் பொய்கூட மாம்வலிய வெற்பும்
மரசுமிவை போதியென்ப தாம். (௩௦)

உகூக. பிறங்கல் எ-து.—பெருமை, மலை, (உ)
கன்னல் எ-து.—நாழிகை. கரகம். (உ)
இருள் எ-து.—இருள், நரகம். (உ)
வீதல் எ-து.—இறத்தல், கெடுதல், வறுமை. (ங)
தகை எ-து.—அழகு, அன்பு, பெருமை. (ங)

உச0. தட்டை எ-து.—தினைத்தாள், மொட்டை, கிளியோட்டுங் கோல், மூங்கில். (ச)
சினை எ-து.—முட்டை, உறுப்பு, மரக்கொம்பு. (ங)
ஓடை எ-து.—நெற்றிப்பட்டம், மடு. (உ)
வல் எ-து.—சீக்கிரம், மேடு, வலிமை, சூதாடுகருவி. (ச)
மை எ-து.—ஆடு, குற்றம், மேகம், கறுப்பு. (ச)

உசக. களங்கம் எ-து.—குற்றம். அழுக்கு. (உ)
அங்கணம் எ-து.—சேறு, முன்றில். (உ)
தூற்றம் எ-து.—குற்றம், சிறுமை. (உ)
வேலை எ-து.—கடல், காலம், தொழில். (ங)
வள் எ-து.—கூர்மை, காது, வாள். (ங)
பிண்டம் எ-து—சரீரம், கூட்டம், சோறு. (ங)

உசஉ. யாணர் எ-து.—வளமை, புதுமை. (உ)
மணம் எ-து.—ஆண் பெண் கூடல், வாசனை. (உ)
நளி எ-து.—பெருமை, குளிர்ச்சி, நெருக்கம். (ங)
தளிமம் எ-து.—மெத்தை, அழகு. (உ)
சாகம் எ-து.—தழை, தேக்குமரம். (உ)
அத்தம் எ-து.—வழி, கைத்தலம். அத்தநாள், பொன். (ச)

உசங. அருத்தம் எ-து.—தனம், சொற்பொருள், பயன், பாதி, கருத்து. (ரு)
பவித்திரம் எ-து.—பரிசுத்தம், தருப்பைப்புல். (உ)
கூடம் எ-து.—திரள், வஞ்சனை, பொய். (ங)
போதி எ-து.—மலை, அரசமரம். (உ)

உசச. முடலை தாளந் திரட்சி கரோணு
பிடிக ளிறென்றிவற்றின் பேராங் - கடகமதி
ருனை தொடி வட்டந் தயிர்கடையுந் தூணணில்
யானைத் தறிவெளி லாம். (ருக)

உசரு. அவகாச மச்ச மெலிவுசோர் வற்றங்
கவலைநோய் காடே ரருப்பங் - இவலை
கரகமிவை சிரக மாகுங் கனைதா
னரவ நிறைவு நெருக் கம். (ருஉ)

உசசு. வாரங் கரைபாக மன்பு மருதநிலத்
தூரகலுள் பச்சிலை தண்ணடையாஞ் - சாரிகை
காயா மடமாது பூவை சுசிவெண்மை
தீயாடி சுத்தங் குடை. (ருச)

உசஎ. தலம்பச்சை வண்ணம் பலாபலா சம்பா
டலஞ்செவப்புப் பாதிரிபாய் மாவாம் - பொலமே
மருதெருக்கு வெண்மை யருச்சுன மாகு
மருணமா னுடு செவப் பாம் (ருச)

உசஅ. குளமாகு நெற்றி சருக்கரை குட்டங்
களமா கவபூமி கண்டங் - களரி
குடங்கரி மத்தகஞ் சாடிகும்ப மென்பர்
தடங்கொங்கை வித்தந் தனம். (ருரு)

உசச. திரட்சி எ-து.—உண்டை, முத்து. (உ)
கரேணு எ-து.—பெண்யானை, ஆண்யானை. (உ)
கடகம் எ-து.—மதில், சேனை, கங்கணம், வட்டம். (ச)
வெளில் எ-து.—தயிர்கடையுந்தூண், அணிற்பிள்ளை, யானைத்தறி. (ங)

உசரு. அற்றம் எ-து.—சமையம், அச்சம், மெலிவு, சோர்வு. (ச)
அருப்பம் எ-து.—துன்பம், நோய், காடு, ஊர். (ச)
சிரகம் எ-து.—திவலை, கரகம். (உ)
கனை எ-து.—ஓசை, நிறைவு, நெருக்கம். (ங)

உசசு. வாரம் எ-து.—நீர்க்கரை, பங்கு, அன்பு. (ங)
தண்ணடை எ-து.—மருதநிலத்தூர், நாடு, பச்சிலை. (ங)
பூவை எ-து.—நாகணவாய்ப்பட்சி, காயாமரம், பெண். ங
சுசி எ-து—வெண்மை, நெருப்பு, ஆடிமாதம், சுத்தம், வெண்குடை. (ரு)

உசஎ. பலாசம் எ-து.—இலை, பச்சைநிறம், பலாமரம். (ங)
பாடலம் எ-து.—செவப்பு, பாதிரிமரம், குதிரை. (ங)
அருச்சுனம் எ-து.—பொன், மருதமரம், எருக்கமரம், வெண்மை. (ச)
அருணம் எ-து.—மான், ஆடு, மிகுசெவப்பு, (ங)

உசஅ. துளம் எ-து.—நெற்றி, சருக்கரை, தடாகம். (ங)
களம் எ-து.—போர்க்களம், கழுத்து, நஞ்சு. (ங)
தும்பம் எ-து.—குடம், யானைமத்தகம், கும்பராசி. (ங)
தனம் எ-து.—முலை, பொன். (உ)

## ௧௦௨. பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

உ௪௯. ஞான மறிவுகல்வி நல்லொழுக்க மாமென்பர்
நூனமாங் குன்றலு நிச்சயமு - மான
மறைமந் திரம்வேத மாவாம் புரவி
சிறைவண்டு சூதந் திரு. (௩௬)

பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

ஆக செய்யுள் - உ௪௯.

உசக. ஞானம் எ-து.—அறிவு, கல்வி, நல்லொழுக்கம். (ங)
தூனம் எ-து.—குறைதல், நிச்சயம். (உ)
மறை எ-து.—மந்திரம், வேதம். (உ)
மா எ-து.—குதிரை, வண்டு, மாமரம், திருமகள். (ச)

பதினோராவது ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

---

பன்னிரண்டாவது

## பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

௨௫0. கூறியதே கூறினுங் குற்றமில்லை நற்பொருள்
வேறு பெறினென்றே விதித்தலாற் - றேறுணைகொள்
ஏகமேவீடு மறுமையோ டிம்மை யென்
ருகு மிருமை யறி. (௧)

௨௫௧. முன்னிலை தன்மை படர்க்கையா மூன்றிடம்
பன்னு சிவன்மாயன் பங்கயனே - மும்மூர்த்தி
காலமொரு மூன்றுங் கருது மிறப்புடனே
சால நிகழ் வெதிர்வுந் தான். (௨)

௨௫௨. ஆசு மதுரமே சித்திரநல் வித்தார
மேசில்கவி நான்கென் றியம்புவார் - பேசும்
அறம்பொருளின்பம்வீ டாங்கேள்வி நான்குந்
திறம்பா தடைவுடனே தேறு (௩)

௨௫௩. அறியான் வினவ றிவொப்புக் காண்டல்
குறியினையந் தீர்த்தல் குறித்தோ - னறிவுகொளன்
மெய்யவற்குக் காட்டல் வினவி லரியவினு
ஐவகையா மென்றே யறி. (௪)

௨௫௪. அரச னுபாத்தி யாயனப்பன் மூத்தோன்
குரவரோ ணவனெனக் கூறு - மொருவன்
ஒருத்திபல ரொன்றுபல வோதுமிவை யைந்தும்
விரித்திடுமைம் பாலாக வேண்டு. (௫)

பன்னிரண்டாவது

# பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

உ௫௦. ஏகம்.—வீடு. (க)
இருமை.—இம்மை, மறுமை. (உ)

உ௫க. மூவிடம்.—முன்னிலை, தன்மை, படர்க்கை, (௩)
மும்மூர்த்தி.—சிவன், திருமால், பிரமன். (௩)
முக்காலம்.—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். (௩)

உ௫உ. நாற்கவி.—ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரகவி. (௪)
நாற்கேள்வி.—அறம், பொருள், இன்பம், வீடு. (௪)

உ௫௩. ஐவகை வினப்பெயர்.—அறியான்வினவல், அறிவொப்புக்காண்டல், ஐயந்தீர்த்தல், அவனறிவுதானகோடல், மெய்யவற்குக்காடல். (௫)

உ௫௪. ஐங்குரவர்.—அரசன், உபாத்தியாயன், தந்தை, மூத்தோன், தேசிகன். (௫)
ஐம்பால்.—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல. (௫)

 ௧௨-வது. பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

உ௫௫. மொய்குறிஞ்சி பாலை மருதஞ் செழுமுல்லை
நெய்தலிவை யைந்து நிலமென்பர் - மெய்சேரும்
பஞ்சாங்கந் தானே திதிவாரம் பார்த்திடுநா
ளெஞ்சில்யோ கங்கரண மேல். (௬)

உ௫௬. பிருதிவியப் புத்தேயு பேசு மருத்து
மருவிடுமா காயமைம் பூதம் - பொருவரிய
வல்லூறே யாந்தை வளர்காகங் கோழியெழில்
வெல்லுமயில் பஞ்சபட்சி மேல். (௭)

உ௫௭. வரிசிலை சங்காழி வாள்கதை யிவ்வைந்து
மரிதன் படைக்கலமென் ருகு - மரன்முகமே
தற்புருட மீசானஞ் சத்தியோசா தம்வாமம்
விற்சீ ரகோரம் விரி. (௮)

உ௫௮. கன்னல் பயறு கதலியொடு செவ்விளநீர்
செந்நெலிவை நாட்டின் றிரவியமா - மன்னனுடன்
கண்ணடி பித்தன் கருங்குரங்கு தந்தியைந்துந்
திண்ண நகர்ப் பொருளாய்ச் செப்பு. (௯)

உ௫௯. நாவி மயிற்பீலி நறுந்தே னரக்கிருல்
கானின் றிரவியமாய்க் கட்டுரைப்பர் - மேவியுறும்
உப்புத் தரள முயர்சங்கோ டொக்கோலை
துப்புங் கடற்பொருளாய்ச் சொல். (௧௦)

உ௬௦. குங்கு மந்தக் கோலமகில் கோட்ட மிளகிவைக
டங்கு மலைப்பொருளாய்ச் சாதிப்பர் - பொங்கு
சுவையொளியூ றோசை நாற்றமிவை யைந்து
நவையில் புலனென்றே நாடு. (௧௧)

உருரு. ஐந்திணை.—குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல். (ரு)
பஞ்சாங்கவகை.—திதி, வாரம், நாள், யோகம், கரணம். ரு

உருசு. பஞ்சபூதம்.—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். (ரு)
பஞ்சபக்ஷி.—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். ரு

உருஎ. திருமால்பஞ்சாயுதம்.—தனுசு, சங்கம், சக்கரம், வாள், தண்டு. (ரு)
ஈசனைம்முகம்.—தற்புருடம், ஈசானம், சத்தியோசாதம், வாமம், அகோரம். (ரு)

உருஅ நாடுபடுதிரவியம்.—கரும்பு, சிறுபயறு, வாழை, செவ்விளநீர், செந்நெல். (ரு)
நகர்படுதிரவியம்.—அரசன், கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, யானை. (ரு)

உருகூ. காடுபடுதிரவியம்.—நாவி, மயிற்பீலி, தேன், அரக்கு, இருல். (ரு)
கடல்படு திரவியம்.—உப்பு, முத்து, சங்கு, ஓக்கோலை, பவளம். (ரு)

உசுO. மலைபடுதிரவியம்.—குங்குமம், தக்கோலம், அகில், கோட்டம், மிளகு. (ரு)
ஐம்புலம்.—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். (ரு).

 ௧உ-வது. பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

உ௬௧. பாலன் குமரன் பகரரசன்மூப் புடன்சாக்
கோலும்பேர் முன்னெழுத்துக் கொண்டாதி - சாலிற்
கவிதனக்கு முன்மூன்று மின்பங் கடைய
நவையாகு மென்றே நவில். (௧உ)

உ௬உ. உட்சமய மாறு முறைக்குங்காற் சைவமுடன்
பட்சமுறும் பாசு பதத்தோடே - நிச்சயஞ்சேர்
வாம மிகுங் காளா முகம்பின்னர் மாவிரதஞ்
சேம வைரவமுஞ் சேர். (௧௩)

உ௬௩. புத்த மருகம் புகல்பாஞ்ச ராத்திரமே
சித்த முறும்பாட்டா சாரியஞ் - சித்திரமாய்க்
கூறியமீ மாஞ்சை குறித்தலோ காயத்தோ
டாறும் புறச்சமய மாம். (௧௪)

உ௬௪. ஆறங்க மந்திரத்தோ டாகும் வியாகரணந்
தேறு நிகண்டுடன்சந் தோபிசிதங் - கூறு
நிருத்தமே சோதிடங்க ணிச்சயித்துக் கொண்டு
திருத்தமுறச் சொன்னார் தெளிந்து. (௧௫)

உ௬௫. தேவர் விலங்குமக்கள் சேண்பறவை யூர்வன
தாவரம்நீர் வாழ்த லெழுபிறப்பாந் - தாவு
மூவர்பா றயிர்கரும் பொண்ணீர் மதுநெய்
சிவணு மெழுகடலுந் தேர். (௧௬)

உ௬௬. போற்றுகும்ப யோனி புலத்தியன் மார்க்கண்டன்
சாற்றுங் கீரன்வசிட்டன் கௌதமனு - மேற்றுபுகழ்க்
காசிபனோ டேழ்வர் கருதுங் கலைமுனிவ
ராசில் பெரியோர்க ளாம். (௧௭)

உசுக. எழுத்துத்தானவகை.—பாலன், குமரன், அரசன், விருத்தம், மரணம். (ரு)

இவற்றுள் முன்னையமூன்றும் நன்மைபயக்கும், பின்னைய இரண்டும் தீமைபயக்கும்.

உசுஉ. உட்சமயம்.—சைவம், பாசுபதம், வாமம், காளாமுகம், மாவிரதம், வைரவம். (சு)

உசுங. புறச்சமயம்.—புத்தம், ஆருகதம், பாஞ்சராத்திரம், பாட்டாசார்ரியம், மீமாஞ்சை, உலோகாயதம். (சு)

உசுச. ஆறங்கம்.—மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம். (சு)

உசுரு. எழுபிறப்பு.—தேவர், விலங்கு, மக்கள், பறவை, ஊர்வன, தாவரம், நீர்வாழ்வன. (எ)

எழுசமுத்திரம்.—உவர், பால், தயிர், கரும்பு, நீர், தேன், நெய்.

உசுசு. எழுமுனிவர்—அகத்தியன், புலத்தியன், மார்க்கண்டன், ஆங்கிரன், வசிட்டன் கௌதமன், காசிபன். (எ)

உசுஎ. பூலோக மேபுவ லோகந் தவலோக
மேல்சந லோகஞ் சுவலோகந் - வாலியசீர்ச்
சத்திய லோகம் மகலோகந் தாமிவை
யுத்தமமார் மேலே ழுலகு. (கஅ)

உசுஅ. அதல விதல மடைவாஞ் சுதல
நிதல ரசாதலம் பாதாள - முதுபோகந்
துன்னுந் தராதலங்க ளென்றே தொடர்பினுடன்
மண்ணின்கீ ழேழுலக மாம். (கசு)

உசுகூ. கங்கை யமுனை சரச்சுவதி காவேரி
பொங்கு குமரி நருமதை - தங்குசீர்க்
கோதா வரியுட னேழுங் குலநதியென்
றோதுந் தமிழினுரை. (உ0)

உஎ0. கந்தருவந் தெய்வங் கவின்பிரமம் பைசாசம்
பந்தமுறும் பிரசா பத்திய - நந்தலிலா
தாமென்னு மாரிட மாசுரமி ராக்கதஞ்
சேமமண மெட்டெனவே செப்பு. (உக)

உஎக. இந்திர னங்கி யியம னிருதியுட
னுந்து வருண னுயர்வாயு - விந்தைமிகும்
பண்டோர் குபேரன் பரிவிலீசானனே
டெண்டிசைவாழ் பாலகரொன் றெண். (உஉ)

உஎஉ. வாசுகி தக்க னநந்தன் பதுமனெடு
பேசு குளிகன் மகாபதும - னேசிலாக்
கார்க்கோ டகனுடனே சங்கனிவை யெண்டிசையு
மார்க்கு மரவெட்டென்ப வாம். (உங)

உசுஎ. மேலேழுலகம்.—பூலோகம், புவலோகம், தவலோகம், சநலோகம், சுவலோகம், சத்தியலோகம், மகலோகம், (எ)

உசுஅ. கீழேழுலகம்.—அதலம், விதலம், சுதலம், நிதலம், இராசாதலம், பாதாளம், தராதலம். (எ)

உசுகூ. சத்தநதிவகை.—கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, குமரி, நருமதை, கோதாவரி. (எ)

உஎ௦. எண்வகைமணம்.—கந்தருவம், தெய்வம், பிரமம், பைசாசம், பிரசாபத்தியம், ஆரிடம், ஆசுரம், இராக்கதம். (அ)

உஎக. அட்டதிக்குப்பாலகர்வகை.—இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். (அ)

உஎஉ. அட்டமாநாகவகை.—வாசுகி, தக்கன், அநந்தன், பதுமன், குளிகன், மகாபதுமன், கார்க்கோடன், சங்கன். (அ)

கக௨ க௨-வது. பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

உ௭௩. அயிரா வதங்குமுதம் புண்டரிகம் பின்னுஞ்
சயவா மனமஞ் சனமும் - வயனேரும்
புட்பதந்தஞ் சுப்பிரதீ பஞ்சா ருவபூவம்
அட்டதிசை யானையென லாம். (௨௪)

உ௭௪. இமய கிரிகைலை மந்தர நீல
மமையேம கூட நிடதஞ் - சிமையமுறுங்
கந்தமலை விந்தம்பார் காத்து நிவந்திலங்கு
மந்த மலையெட்டு மாம். (௨௫)

உ௭௫. தீப முடன்கவரி கண்ணடி சீர்த்தோட்டி
தாபந்நீர் கும்பந் தனிமுரசஞ் - சோப
மலிகொடி மீனிரட்டை மங்கல மெட்டென்
றுலகிற் பெரியோ ருரை. (௨௬)

உ௭௬. குறள் செவிடு மூங்கை முடங்கூன் குருடு
திறபிண்டம் பேடேனே யெச்ச - முறுமெட்டாம்
அம்புலி பானு வனல்கா லியமானன்
கம்புவிநீ ரோரொண் கணம். (௨௭)

உ௭௭. கண்செவி மூக்குக் கவின்வாய் குதங்குய்ய
நண்ணிய வாயி னவமென்ப - வொண்மைதருங்
குற்சை நகைகருணை கோபம் பயம்வீரம்
அற்புதஞ் சாந்த மணி. (௨௮)

உ௭௮. கதிர் திங்கள் செவ்வாய் கணக்க னரசன்
முதிர் வெள்ளி காரி யொளிர்விண் - பதிமேவுங்
காரா கிராகு கவிகேது தானவமாய்ப்
பேரார்கோ ளென்றே பிரி. (௨௯)

௨௭௩. அட்டதிசையானைவகை.—ஐராவதம், குமுதம், புண்டரீகம், வாமனம், அஞ்சனம், புட்பதந்தம், சுப்பிரதீபம், சார்வபூமம். (அ)

௨௭௪. அட்டகுலபருவதவகை.—இமயம், கைலை, மந்தரம், நீலகிரி, ஏமகூடம், நிடதம், கந்தமாதனம், விந்தம். (அ)

௨௭௫. அட்டமங்கலவகை.—விளக்கு, சாமரம், கண்ணடி, தோட்டி, நிறைகுடம், முரசு, கொடி, இணைக்கயல். (அ)

௨௭௬. சிறப்பிலாவெண்பேயரொச்சவகை.—குறள், செவிடு, ஊமை, முடம், கூன், குருடு, உறுப்பில்பிண்டம், உறுப்பில்மயக்கம். அ

எண்கணவகை.—சந்திரன், சூரியன், தீ, வாயு, இயமானன், ஆகாயம், நிலம், நீர். (அ)

௨௭௭. நவவாயிலின்பேயர்.—கண், செவி, மூக்கு, வாய், குதம், குய்யம். (௯)

நவரதப்பேயர்.—குற்சை, நகை, கருணை, இரௌத்திரம், பயம், வீரம், அற்புதம், சாந்தம், சிருங்காரம். (௯)

௨௭௮. நவக்கிரகவகை.—ஆதித்தன், சோமன், செவ்வாய், புதன், வியாழம், சுக்கிரன், சனி, இராகு, கேது. (௯)

௨௭௯. மேட மிடப மிதுனமே கற்கடகம்
காடகஞ்சேர் சீயங் கன்னிதுலா - நீடு
விருச்சிகஞ்சா பம்மகரங் கும்பமுடன் மீனம்
தெருட்டோரா பன்னிரண்டுந் தேர். (௩0)

௨௮0. சுராசுரர் சித்தர்பேய் தூயவிஞ்சர் பூத
ருரகர்யக்கர் மோநர்காந் தர்வர் - குருவர்
நிருதரண் டரந்தரர் கின்னர ரோர்க் கிம்
புருடர் கருடர் தயித்தியர். (௩௧)

௨௮௧. கூர்மமே மச்சம் பிரமமுடன் வாமனங்
காருடம் விண்டு கவின்சைவ - மோரும்
பதுமம் பவுடிகம் நாரதீயம் லிங்கம்
மதிமார்க்கண் டம்வரா கம். (௩௨)

௨௮௨. ஆக்கினே யம்பிரம கைவர்த்த மாசில்சீர்
வாக்காம் பிரமாண்டம் பாகவத - மீக்குயர்த்தும்
பொற்பாருங் காந்தம் புராணமீ ரொன்பானென்
றற்பா யுணர்ந்தே யறை. (௩௩)

௨௮௩. காணுலு வால்கோசங் கையு நிலந்தோயப்
பால்சங்கு போலப் பதத்தின்மேற் - சாலுமுகிர்
ஏழுயர்ந் தொன்பானீண் டைராமேரு டொன்றுமே
சூழுமுழஞ் சுற்ருய்த் தொடர்ந்து. (௩௪)

௨௮௪. முன்னுயர்ந்து பின்டணிந்து மும்மதங்கொண்டே சுளித்துத்
தன்னிழலைச் சாடிமிதி தானிட்டு - மின்னுஞ்
சிறுகண் படைத்தழகு சேர்ந்து ளதுமோவி
பிறைவர் கயவாகனமென் றெண். (௩௫)

உஎக, பன்னிருவகை இராசி.—மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். (கஉ)

உஅ0. தேவர்பதினெண்வகை.—சுரர், அசுரர், சித்தர், பைசாசர், விஞ்சையர், பூதர், உரகர், யக்கர், முனிவர், காந்தர்வர், போகபூமியர், நிருதர், ஆகாயவாசிகள், அந்தரர், கின்னரர், கிம்புருடர், தயித்தியர். (கஅ)

உஅக. பதினெண்புராணம்.—கூர்மம், மச்சம், பிரமம், வாமனம், காருடம், விண்டு, சைவம், பதுமம், பவுடிகம், நாரதீயம், இலிங்கம், மார்க்கண்டம், வராகம். (கரு)

உஅஉ. இதுவும் அது.—ஆக்கினேயம், பிரமகைவர்த்தம், பிரமாண்டம், பாகவதம், காந்தம். (ரு)

உஅங. அரசயானை.—நான்கு காலும் வாலும் கோசமுந் துதிக்கையு நிலத்திற்றோயப் பாலுஞ்சங்கும் போலக் காலிலமைந்த நகத்தோடு ஏழுமுழ உயரமும் ஒன்பதுமுழ நீளமும் பதின்மூன்றுமுழச் சுற்றுமுடைத்தாய்.

உஅச. இதுவும் அது.—முன்னேயுயர்ந்து பின்னேதாழ்ந்து மும்மதமுடையதாய்ப் பகைவரைக் கோபித்துத்தனது சாயலை மற்றோர் யானை யென்று அழித்து மிதித்துச் சிறியகண்களைப்பெற்று அழகுவாய்ந்துள்ளது அரசர்களால் நடத்தப்படும் அரசயானையென்றுகருது.

உ௮ரு. மாதர்மண மொத்த மணத்ததாய் வாழைபெறுங்
கோதின் மடல்போற் கொழுஞ்செவியாய்ப் - பாதமுன்பின்
மெய்ப்பா ரிருத்தி விரலளவெண் பத்திரண்டே
வைப்புயர்வா மன்னவர் பாய்மா. (௯சு)

உ௮சு. சீரொழுத்துப் பொன்பூ திருமணி நீர்திங்கள்
கார்பரிதி யானை கடலுலகந் - தேர்மலைசொல்
கங்கை நிலம்பிறவுங் காண்டகையாய் முன்மொழிக்கு
மங்கல மாஞ்சொல்லின் வகை. (௯எ)

கஉ-வது பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆகசெய்யுள் - உ௮சு.

---

## உரிச்சொல்நிகண்டு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உஅரு. அரசர்குதிரை—கற்புடைமகளிர் தேகமணத்தையொத்த மணத்தையுடையதாய் வாழையினது மடல்போலக் கொழுவிய செவியையுடையதாய்க் காலின் முன்னும் பின்னும் உண்மையாக நிலத்திற் சமமாக விருத்தி, எண்பத்திரண்டு விரலளவுயர்வுடையது அரசர் குதிரை.

உஅசு. நான்முகத்துக்கூறும் மங்கலச்சொல்வகை.—சீர், எழுத்து, பொன், பூ, திரு, மணி, நீர், திங்கள், கார், பரிதி, யானை, கடல் உலகம், தேர், மலை, சொல், கங்கை, நிலமுமாகிய இவையும் இவற்றின் பரியாயநாமமுதலியனவும் நான்முகத்துக்கூறு மங்கலச்சொற்களின் வகைகளாம்.

௧௨-வது பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதிமுற்றிற்று.

உரிச்சொல்நிகண்டு முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

# உரிச்சொல்நிகண்டு அகராதி.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அ | | அம்பலம் | ௫௧ |
| அகலம் | ௬௫ | அம்பு | ௫௭ |
| அகில் | ௩௯ | அயம் | ௯௫ |
| அங்கணம் | ௯௯ | அயில் | ௯௧ |
| அசுத்தம் | ௮௧ | அரசயானை | ௧௧௫ |
| அசுரர் | ௧௩ | அரசர்குதிரை | ௧௪௭ |
| அசைச்சொல் | ௮௫ | அரசன் | ௧௭ |
| அசைவு | ௬௭ | அரசு | ௩௯ |
| அசோகு | ௪௧ | அரவம் | ௯௧ |
| அச்சம் | ௬௯ | அரி | ௮௯ |
| அட்டகுலபர்வதம் | ௧௧௩ | அரில் | ௯௭ |
| அட்டதிக்குப்பாலகர் | ௧௧௧ | அருச்சுநம் | ௪௦௧ |
| அட்டதிசையானை | ௧௧௩ | அருத்தம் | ௯௯ |
| அட்டமங்கலவகை | ௧௧௩ | அருப்பம் | ௬௯ |
| அட்டமாநாகவகை | ௧௧௧ | அரும்பு | ௩௫ |
| அட்டை | ௩௫ | அலரி | ௩௯ |
| அணங்கு | ௮௯ | அலர் | ௮௧ |
| அணில் | ௨௯ | அல்குல் | ௨௧ |
| அண்டங்காக்கை | ௩௩ | அவுரி | ௪௧ |
| அண்டசம் | ௯௭ | அழகு | ௬௫ |
| அதிமதுரம் | ௪௧ | அழிஞ்சில் | ௪௧ |
| அத்தம் | ௯௯ | அழுந்தல் | ௭௫ |
| அத்தி | ௯௧ | அறிவுடையோர் | ௨௨ |
| அத்திமரம் | ௩௯ | அற்றம் | ௧௦௧ |
| அம்பரம் | ௯௧ | அநுகரணவோசை | ௮௩ |

| | பக்கம். |
|---|---|
| அன்பு | ௬௩ |
| அன்னம் | ௩௧ |
| **ஆ** | |
| ஆகாயம் | ௧௩ |
| ஆசிரியப்பா | ௮௫ |
| ஆசை | ௬௯ |
| ஆச்சாமரம் | ௩௯ |
| ஆண்மகன் | ௧௯ |
| ஆத்தி | ௩௯ |
| ஆந்தை | ௩௩ |
| ஆபரணம் | ௫௫ |
| ஆமை | ௩௩ |
| ஆரம் | ௯௧ |
| ஆரியத்திரிசொல் | ௮௧ |
| ஆரியத்திற்குந்தமிழிற்கும் பொதுச்சொல் | ௮௧ |
| ஆலமரம் | ௪௧ |
| ஆலம் | ௯௫ |
| ஆழி | ௯௫ |
| ஆறங்கம் | ௧௦௭ |
| ஆறு | ௧௫ |
| ஆநந்தம் | ௬௫ |
| **இ** | |
| இகழ்ச்சி | ௬௮ |
| இசைப்பாடல் | ௭௯ |
| இஞ்சி | ௪௧ |
| இடபம் | ௧௧ |
| இடம் | ௪௩ |
| இடி | ௧௭ |
| இடை | ௨௧ |
| இடையர் | ௨௧ |
| இந்திரன் | ௯ |
| இந்திரியம் | ௨௫ |
| இப்போது | ௬௫ |
| இமயமலை | ௪௫ |
| இயமன் | ௯ |
| இயல் | ௮௫ |
| இரலை | ௨௭ |
| இரவி | ௯௩ |
| இரவு | ௧௭ |
| இராக்கதர் | ௧௩ |
| இராசநாகம் | ௩௩ |
| இராசி | ௧௩ |
| இருப்பை | ௪௧ |
| இருமை | ௧௦௫ |
| இரும்பு | ௫௩ |
| இருவாட்சி | ௪௧ |
| இருள் | ௯௯ |
| இலவு | ௩௯ |
| இலை | ௩௫ |
| இலைமுதலியவற்றாலெழு மொலி | ௮௩ |
| இல்லம் | ௫௧ |
| இழிசனர்மொழி | ௮௧ |
| இளமை | ௬௧ |
| இறும்பு | ௯௩ |
| இனி | ௬௫ |
| இன்பம் | ௫௩ |
| **ஈ** | |
| ஈசனைம்முகம் | ௧௦௭ |
| ஈயம் | ௫௩ |
| ஈர்வாள் | ௫௭ |

| | பக்கம். |
|---|---|
| **உ** | |
| உடல் | ௨௫ |
| உடம்பு | ௨௯ |
| உட்சமயம் | ௧௦௯ |
| உதடு | ௨௩ |
| உதகம் | ௯௧ |
| உதாரணம் | ௮௫ |
| உபகாரச்சொல் | ௮௧ |
| உபயவோசை | ௮௩ |
| உயரம் | ௬௫ |
| உயர்ந்தோர் | ௮௧ |
| உயிர் | ௨௫ |
| [illegible] | ௫௭ |
| உரிமை | ௭௭ |
| உரையசையிடைச்சொல் | ௮௭ |
| உவமை | ௬௭ |
| உறழ்தல் | ௯௫ |
| உறி | ௬௧ |
| உறுதிச்சொல் | ௮௫ |
| **ஊ** | |
| ஊஞ்சல் | ௫௭ |
| ஊர்க்குருவி | ௩௨ |
| **எ** | |
| எஃகு | ௯௩ |
| எச்சில் | ௮௩ |
| எண்கணவகை | ௧௧௩ |
| எண்வகைமணம் | ௧௧௧ |
| எப்போதும் | ௬௫ |
| எருக்கு | ௩௯ |
| எருது | ௩௧ |
| எருமை | ௩௧ |
| எலி | ௨௯ |
| எல்லாம் | ௯௭ |
| எழுசமுத்திரம் | ௧௦௯ |
| எழுத்துத்தானவகை | ௧௦௯ |
| எழுபிறப்பு | ௧௦௯ |
| எழுமுனிவர் | ௧௦௯ |
| **ஏ** | |
| ஏகம் | ௧௦௫ |
| ஏலம் | ௪௧ |
| **ஐ** | |
| ஐங்குரவர் | ௧௦௫ |
| ஐந்திணை | ௧௦௭ |
| ஐம்பால் | ௧௦௫ |
| ஐம்புலன் | ௧௦௭ |
| ஐவகைநிலம் | ௪௭ |
| ஐவகைவிஞு | ௧௦௫ |
| **ஒ** | |
| ஒடித்தல் | ௭௫ |
| ஒட்டகம் | ௨௯ |
| ஒலியல் | ௯௫ |
| ஒழுக்கம் | ௬௫ |
| ஒளி | ௬௩ |
| ஒளிர்தல் | ௬௩ |
| **ஓ** | |
| ஓசை | ௮௩ |
| ஓடல் | ௭௫ |
| ஓடை | ௯௯ |
| ஓதிமம் | ௯௫ |
| **க** | |
| ககம் | ௯௧ |
| கங்கணம் | ௫௯ |

| | பக்கம். |
|---|---|
| கங்கை | ௧௫ |
| கடகம் | ௧௦௧ |
| கடம்பு | ௩௯ |
| கடல்படுதிரவியம் | ௯௭ |
| கடற்றிரை | ௪௭ |
| கடி | ௯௩ |
| கடுக்காய்மரம் | ௪௧ |
| கடைவீதி | ௪௯ |
| கட்சி | ௯௭ |
| கட்டுதல் | ௭௫ |
| கண் | ௨௩ |
| கண்டம் | ௯௩ |
| கதலி | ௯௭ |
| கதவு | ௪௯ |
| கதிர் | ௩௭ |
| கந்தம் | ௯௭ |
| கந்தரம் | ௯௭ |
| கபிலநிறம் | ௬௩ |
| கமலம் | ௮௯ |
| கமுகு | ௩௯ |
| கம் | ௮௯ |
| கயிலாயம் | ௪௫ |
| க டி | ௨௭ |
| கரம்பு | ௪௭ |
| கரி | ௯௫ |
| கருங்குரங்கு | ௨௯ |
| கருங்குவளை | ௪௩ |
| கருடன் | ௩௧ |
| கருமை | ௬௩-௯௩ |
| கரும்பு | ௩௭ |
| கரேணு | ௧௦௧ |

| | பக்கம். |
|---|---|
| கறை | ௪௭ |
| கற்கடகம் | ௧௧ |
| கலப்பை | ௫௭ |
| கலியாணம் | ௭௩ |
| கவரிமான் | ௨௯ |
| கவர்வழி | ௪௯ |
| கவி | ௯௧ |
| கவிகை | ௯௫ |
| கழுகு | ௯௧ |
| கழுதை | ௨௯ |
| கழுத்து | ௨௩ |
| கழை | ௯௭ |
| களங்கம் | [illegible] |
| களம் | ௧௦௧ |
| களா | ௩௭ |
| களிப்பு | ௬௭ |
| கள் | ௩௯ |
| கறை | ௯௭ |
| கறையான் | ௩௫ |
| கற்கணெருங்குமிடம் | ௪௯ |
| கனம் | ௮௯ |
| கணை | ௧௦௧ |
| கன்னல் | ௧௦௯ |
| கா | |
| காக்கை | ௩௩ |
| காடு | ௩௫ |
| காடுபடுதிரவியம் | ௧௦௭ |
| காடை | ௩௧ |
| காட்டுப்பசு | ௨௯ |
| காண்டம் | ௮௯ |
| காது | ௨௩ |

| | பக்கம். |
|---|---|
| காந்தாரம் | ௯௧ |
| காமன் | ௯ |
| காயா | ௪௧ |
| காரியம் | ௫௩ |
| காளி | ௫ |
| காற்சிலம்பு | ௫௯ |
| காற்று | ௧௩ |
| கானம் | ௬௩ |
| **கி** | |
| கிட்டுதல் | ௭௭ |
| கிணறு | ௪௭ |
| கிரீடம் | ௫௯ |
| [illegible] | ௭௩ |
| கிழங்கு | ௩௭ |
| கிளி | ௩௧ |
| **கீ** | |
| கீரி | ௩௩ |
| கீலாலம் | ௯௧ |
| கீழுதடு | ௨௩ |
| கீழேழுலகம் | ௧௧௧ |
| கீழ்மக்கள் | ௨௧ |
| **கு** | |
| குண்டலம் | ௫௯ |
| குதிரை | ௨௭ |
| குபேரன் | ௯-௮௯ |
| கும்பம் | ௧௦௧ |
| குயம் | ௯௫ |
| குயில் | ௩௧ |
| குரங்கு | ௨௭ |
| குரா | ௪௧ |
| குருக்கத்தி | ௩௯ |

| | பக்கம். |
|---|---|
| குருத்தி | ௩௭ |
| குருந்தம் | ௪௧ |
| குரூரம் | ௭௫ |
| குரை | ௯௭ |
| குலம் | ௮௯ |
| குலை | ௩௭ |
| குளநெல் | ௩௭ |
| குளம் | ௧௦௧ |
| குறள் | ௧௯ |
| குறளை | ௭௯ |
| குறியதறி | ௬௧ |
| குறைதல் | ௬௯ |
| குற்றம் | ௭௧-௯௯ |
| **கூ** | |
| கூடம் | ௯௯ |
| கூட்டம் | ௬௭ |
| கூத்து | ௭௯ |
| கூம்புதல் | ௬௯ |
| கூன் | ௧௯ |
| **கெ** | |
| கெடுதல் | ௭௫ |
| **கை** | |
| கை | ௨௩ |
| கைவேல் | ௫௭ |
| **கொ** | |
| கொக்கு | ௩௩ |
| கொடிப்படை | ௨௯ |
| கொண்டாடல் | ௧௮ |
| கொப்பூழ் | ௨௩ |
| கொவ்வை | ௯௪ |
| கொன்றை | ௩௩ |

| | பக்கம். |
|---|---|
| **கோ** | |
| கோ | ௮௯ |
| கோங்கு | ௩௯ |
| கோட்டை | ௩௭ |
| கோபம் | ௭௧ |
| கோபுரவாயில் | ௪௧ |
| கோளை | ௩௭ |
| கோழி | ௩௩ |
| **ச** | |
| சக்கரம் | ௫௭-௯௩ |
| சடை | ௯௫ |
| சதங்கை | ௫௯ |
| சதுக்கம் | ௪௯ |
| சதுரங்கசேனை | ௨௧ |
| சத்தநதி | ௧௧௧ |
| சத்திசெயல் | ௬௩ |
| சந்தனம் | ௪௧ |
| சந்திரன் | ௧௧ |
| சந்தேகம் | ௬௯ |
| சபதம் | ௮௫ |
| சமஞ்ஞை | ௮௩ |
| சமுத்திரம் | ௪௭ |
| சனி | ௧௦ |
| **சா** | |
| சாகம் | ௯௯ |
| சார[illegible]கம் | ௯௨ |
| **சி** | |
| சிகரி | ௯௭ |
| சிகி | ௯௭ |
| சிங்கம் | ௨௫ |
| சிங்கராசி | ௧௩ |

| | பக்கம். |
|---|---|
| சிந்து | ௯௭ |
| சிகரம் | ௧௦௧ |
| சிலம்பு | ௯௫ |
| சிலை | ௮௫ |
| சிவன் | ௩ |
| சிள்வீடு | ௩௧ |
| சிறப்பிலாவெண்பெயரெச்சம் | ௧௧௩ |
| சிறுசொல் | ௭௯ |
| சிறுமை | ௬௯ |
| சிறை | ௯௭ |
| சினை | ௯௯ |
| **சு** | |
| சுகம் | ௬௭ |
| சுசி | ௧௦௧ |
| சுடல் | ௭௫ |
| சுடுகாடு | ௪௭ |
| சுமத்தல் | ௭௫ |
| சுரபுன்னை | ௩௯ |
| **சூ** | |
| சூத்திரர் | ௧௯ |
| சூரியன் | ௧௧ |
| **செ** | |
| செங்குவளை | ௪௩ |
| செந்நாய் | ௨௯ |
| செந்நெல் | ௩௭ |
| செம்பரத்தை | ௪௩ |
| செம்போத்து | ௩௩ |
| செம்மறியாடு | ௩௧ |
| செயல் | ௭௩ |
| செய்யுள் | ௮௫ |
| செல்வம் | ௫௩ |

| | பக்கம். |
|---|---|
| செவப்பு | ௪௬ |
| செவ்வாய் | ௧௧ |
| **சே** | |
| சேம்பு | ௪௩ |
| சேலை | ௫௯ |
| **சொ** | |
| சொல் | ௭௯ |
| சொல்லுதல் | ௭௯ |
| **சோ** | |
| சோறு | ௫௫ |
| சோலை | ௬௫ |
| **ஞா** | |
| ஞானம் | ௧௦௬ |
| **ஞெ** | |
| ஞெண்டு | ௬௫ |
| **த** | |
| தகை | ௯௯ |
| தக்கணம் | ௯௧ |
| தடாகம் | ௫௧ |
| தட்டை | ௯௯ |
| தண்டு | ௨௧-௫௭ |
| தண்ணடை | ௧௦௬ |
| தயாளம் | ௪௯ |
| தரணி | ௮௯ |
| தரித்திரம் | ௭௫ |
| தகுதல் | ௭௫ |
| தருமம் | ௭௯ |
| தலம் | ௯௫ |
| தலை | ௨௬ |
| தவிர்த்தல் | ௭௫ |
| தழுவல் | ௭௬ |
| தளிமம் | ௬௯ |
| தளிர் | ௬௭ |
| தனம் | ௧௦௧ |
| தனி | ௪௯ |
| தனு | ௧௩ |
| தன்மை | ௧௭ |
| **தா** | |
| தாது | ௯௫ |
| தாமம் | ௯௧ |
| தாமிரம் | ௪௩ |
| தாய் | ௧௯ |
| தார் | ௯௫ |
| தாலம் | ௯௫ |
| தாழை | ௩௯-௯௫ |
| தாழ் | ௫௭ |
| தானம் | ௯௬ |
| தான்றி | ௪௧ |
| **தி** | |
| திகிரி | ௯௬ |
| திக்கு | ௧௬ |
| திசைச்சொல் | ௮௫ |
| திண்ணை | ௫௧ |
| திப்பிலி | ௪௧ |
| திரட்சி | ௧௦௧ |
| திருமகள் | ௭ |
| திருமால் | ௭ |
| திருமால்பஞ்சாயுதம் | ௧௦௭ |
| திருவிழா | ௭௭ |
| **தீ** | |
| தீ | ௧௫ |
| **து** | |
| துர்க்கம் | ௪௯ |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| துர்க்கை | ரு | நகர்படுதிரவியம் | க௦எ |
| துலாம் | கரு | நகைச்சொல் | அக |
| துன்பம் | சுரு | நஞ்சு | ருரு |
| **தூ** | | நடத்தல் | எரு |
| தூண் | சுக | நடு | சக |
| **தெ** | | நடுக்கம் | சுஎ |
| தெங்கு | ருகூ | நந்தியாவர்த்தம் | சஎ |
| தெரு | சகூ | நயச்சொல் | அக |
| தெளிதல் | எக | நரகம் | சகூ |
| **தே** | | நரி | உகூ |
| தேக்கமரம் | ருகூ | நவக்கிரகவகை | ககரு |
| தேசிகம் | அக | நவமணி | சுரு |
| தேடல் | ௬ரு | நவரதம் | ருரு |
| தேமல் | உரு | நவவாயில்வகை | ககரு |
| தேவதாரம் | சக | நளி | கூகூ |
| தேவர் | கரு | **நா** | |
| தேவர்பதினெண்வகை | ககரு | நாகம் | அகூ |
| தேவர்மொழி | அக | நாகலோகம் | சகூ |
| **தொ** | | நாக்கு | உரு |
| தொடை | உக | நாடுபடுதிரவியம் | க௦சு |
| தொழல் | எகூ | நாண் | சுகூ |
| தொழில்செய்தல் | எரு | நாமகள் | கூ |
| **தோ** | | நாய் | உகூ |
| தோல் | ருஎ | நாவல் | ருகூ |
| தோளணி | ருகூ | நாள் | கஎ |
| தோள் | உரு | நாற் கவி | க௦ரு |
| தோற்றல் | எக | நாற் கேள்வி | க௦ரு |
| **ந** | | **நி** | |
| நகம் | உரு-கஎ | நித்திரை | எரு |
| நகர் | சரு-கஎ | நியமம் | கஎ |
| | | நிரம்பாமென்சொல் | எகூ |

| | பக்கம். |
|---|---|
| நிலப்பிளப்பு | ௪௭ |
| நிலாமுகி | ௩௩ |
| நிலாமுற்றம் | ௫௧ |
| நிழல் | ௭௭ |
| நிறைதல் | ௬௯ |
| நினைத்தல் | ௬௭ |
| **நீ** | |
| நீர்க்குமிழி | ௪௭ |
| நீர்நுரை | ௪௭ |
| நீர்ப்புள் | ௩௧ |
| நீளம் | ௬௫ |
| **நூ** | |
| நூல் | ௮௧ |
| நூனம் | ௧௦௩ |
| நான்முகத்துக்கூறுமங்கலச்சொல்வகை | ௧௧௭ |
| **நெ** | |
| நெருங்கல் | ௭௭ |
| நெல்லி | ௪௧ |
| நெற்றி | ௨௩ |
| **நே** | |
| நேமி | ௯௧ |
| **நொ** | |
| நொச்சி | ௩௭ |
| **ப** | |
| பகல் | ௧௭ |
| பகைவர் | ௨௯ |
| பக்கம் | ௪௯ |
| பக்கவாதம் | ௭௫ |
| பசு | ௩௧ |
| பச்சை | ௬௩ |

| | பக்கம்: |
|---|---|
| பச்சோந்தி | ௨௯ |
| பஞ்சபட்சி | ௧௦௭ |
| பஞ்சாங்கம் | ௧௦௭ |
| பஞ்சபூதம் | ௧௦௭ |
| படர் | ௯௫ |
| படர்கொடி | ௩௫ |
| படலை | ௮௫ |
| படி | ௬௩ |
| படித்தல் | ௭௫ |
| படை | ௯௫ |
| படைத்தல் | ௭௩ |
| படைவகுப்பு | ௨௧ |
| படைவீரர் | ௨௧ |
| பதினெண்புராணம் | ௧௧௫ |
| பயனில்சொல் | ௮௧ |
| பயோதரம் | ௬௧ |
| பரண் | ௫௭ |
| பரியகம் | ௫௯ |
| பலா | ௩௯ |
| பலாசம் | ௪௧-௧௦௪ |
| பல் | ௨௩ |
| பவளம் | ௫௩ |
| பவித்திரம் | ௯௯ |
| பழம் | ௩௯ |
| பழமை | ௭௧ |
| பழி | ௮௧ |
| பழிச்சொல் | ௭௯ |
| பள்ளம் | ௪௭ |
| பனை | ௩௯ |
| பன்றி | ௨௭ |
| பன்னிருவகைராசி | ௧௧௫ |

| | பக்கம். |
|---|---|
| **பா** | |
| பாடகம் | ௫௯ |
| பாடலம் | ௧0௧ |
| பாணி | ௯௩ |
| பாதம் | ௨௧ |
| பாதிரி | ௩௧ |
| பாம்பின்படம் | ௩௩ |
| பாம்பு | ௩௩ |
| பாயிரம் | ௮௫ |
| பாய் | ௭௩ |
| பார்ப்பார் | ௧௭ |
| பார்வதி | ௫ |
| பாவம் | ௭௯ |
| பாழி | ௯௫ |
| **பி** | |
| பிண்டமில்லாவுறுப்பு | ௯௯ |
| பிண்டம் | ௯௯ |
| பித்தளை | ௫௩ |
| பித்திகை | ௪௧ |
| பிரமம் | ௯௭ |
| பிரமன் | ௯ |
| பிரிவு | ௭௭ |
| பிறங்கல் | ௯௯ |
| **பு** | |
| புசித்தல் | ௭௩ |
| புட்கரம் | ௯௩ |
| புண்டரீகம் | ௯௧ |
| புதன் | ௧௧ |
| புதுமை | ௬௯ |
| புதையல் | ௫௩ |
| புரவியின்பந்தி | ௫௧ |

| | பக்கம். |
|---|---|
| புழை | ௯௩ |
| புலி | ௨௫ |
| புளகம் | ௬௯ |
| புள்ளொலி | ௮௩ |
| புறச்சமயம் | ௧0௭ |
| புறவு | ௩௧ |
| புனருத்தி | ௮௧ |
| புனல் | ௧௫ |
| புன்கு | ௩௯ |
| புன்னை | ௩௯ |
| பூங்கொத்து | ௩௭ |
| **பூ** | |
| பூழை | [illegible] |
| பூஞெலி | ௮௩ |
| பூதம் | ௧௭ |
| பூமி | ௪௫ |
| பூவை | ௩௩-௧0௧ |
| **பெ** | |
| பெண்கள்விளையாட்டு | ௭௭ |
| பெண்மகள் | ௧௯ |
| பெண்யானை | ௨௭ |
| பெருச்சாளி | ௨௯ |
| பெருஞ்சொல் | ௮௧ |
| பெருமை | ௬௯ |
| பெரும்பாம்பு | ௩௩ |
| **பே** | |
| பேரீந்து | ௰௯ |
| பேய் | ௧௭ |
| பேரொலி | ௮௩ |
| **பொ** | |
| பொதியமலை | ௪௫ |

| | பக்கம். |
|---|---|
| பொய்மை | எகூ |
| பொரவழைத்தல் | அரு |
| பொருந்தல் | சுரு |
| பொருள் | அகூ |
| பொழில் | கூக |
| பொறி | கூஎ |
| பொன்மை[illegible]றம் | சுரூ |
| பொன்னுலகு | கூ |
| பொன் | ருங |
| **போ** | |
| போதா | ரூரூ |
| போதி | கூக |
| போர்[illegible] | ருக |
| போர் | எஎ |
| **ம** | |
| மகரம் | சங |
| மகன் | ககூ |
| மகள் | ஙகூ |
| மடி | சுச |
| மடைப்பள்ளி | ருக |
| மட்கலஞ்சுடுகுலை | சஎ |
| மணம் | கூகூ |
| மணவாளன் | ககூ |
| **மா** | |
| மா | க௦ரூ |
| மாதர்மயிர் | உரூ |
| மாதுளை | ரூகூ |
| மாமரம் | ஙகூ |
| மார்பு | உரூ |
| மாலை | ருகூ-கூங |
| மான் | உகூ |

| | பக்கம். |
|---|---|
| **மி** | |
| மிக்கபொருள் | எரூ |
| மிதுனம் | கக |
| மிளகு | சக |
| மின் | கஎ |
| **மீ** | |
| மீனம் | கரூ |
| **மு** | |
| முக்காலம் | க௦எ |
| முசு | உகூ |
| முடிவு | சுகூ |
| முதல் | சுகூ |
| முதலை | ரூரு |
| முதுகு | உங |
| முத்து | ருரூ |
| மும்மூர்த்தி | க௦ரு |
| முயல் | உகூ |
| முயற்சி | எரு |
| முருகன் | எ |
| முலைக்கச்சு | கூக |
| முலை | உரூ |
| முழந்தாள் | உக |
| முளை | ரூஎ |
| முளைத்தல் | ரூஎ |
| முள்ளம்பன்றி | உகூ |
| முள்முருக்கு | ரூகூ |
| முற்றம் | ருக |
| முற்றுதல் | எரு |
| முனிவர் | கஎ |
| முன்னிலையசைச்சொல் | அஎ |
| **மூ** | |
| மூக்கு | உங |

| | பக்கம். |
|---|---|
| மூங்கில் | சரு |
| மூதுரை | அடு |
| மூவிடம் | கoடு |
| **மெ** | |
| மெய்ம்மை | எகூ |
| **மே** | |
| மேகம் | கங |
| மேகலாபரணம் | டுகூ |
| மேடம் | கக |
| மேடு | சஎ |
| மேம்பாடு | அடு |
| மேருமலை | சடு |
| மேலுதடு | உரு |
| மேலேழுலகம் | ககக |
| மேல்வாய் | உரு |
| **மை** | |
| மை | கூகூ |
| மைந்தர்மயிர் | உரு |
| **மோ** | |
| மோதிரம் | டுகூ |
| **மௌ** | |
| மௌவல் | சக |
| **வ** | |
| வசு | அகூ |
| வச்சிரம் | கூக |
| வஞ்சம் | எக |
| வஞ்சி | சக |
| வணங்கல் | எரு |
| வண்டு | ருக |
| வதை | எக |
| வம்பு | கூக |
| வயல் | சஎ |
| வயிறு | உங |
| வரம்பின்பக்கம் | சஎ |
| வரம்பு | சஎ |
| வருணன் | கூ |
| வலி | சுஎ |
| வல்லிசை | அரு |
| வல்லி | கூஎ |
| வல் | கூகூ |
| வளி | சகூ |
| வளைவு | கூஎ |
| வள்ளை | சங |
| வள் | சுகூ |
| வனம் | அகூ |
| **வா** | |
| வாசகம் | அடு |
| வாசனை | ருஎ |
| வாடாக்குறிஞ்சி | சக |
| வாமம் | கூக |
| வாரணம் | கூக |
| வாரம் | கoக |
| வால் | கூரு |
| வாழை | ருகூ |
| வாள் | டுஎ |
| வான் | கூஎ |
| வான்மீன் | கரு |
| **வி** | |
| விகற்பம் | சுகூ |
| விசயம் | கூடு |
| விடாதுபேசல் | அக |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| விடை | ௮௧ | வெண்குருகு | ௬௩ |
| வித்தம் | ௮௯ | வெண்பா | ௮௫ |
| விநாயகன் | ௫ | வெளியிடம் | ௪௧ |
| வியங்கோள் | ௮௭ | வெளில் | ௧௧௧ |
| வியாழம் | ௧௧ | வெளுப்பு | ௪௬ |
| விரல் | ௨௬ | வெள்ளாடு | ௬௩ |
| விருச்சிகம் | ௧௬ | வெள்ளாம்பல் | ௪௬ |
| விலங்கொல | ௮௬ | வெள்ளி | ௫௬ |
| வில் | ௫௭-௯௫ | வெறி | ௯௭ |
| வில்லுவம் | ௪௧ | வெற்றி | ௭௩ |
| விளா | ௪௧ | **வே** | |
| விளிவு | ௯௫ | வேடர் | ௨௩ |
| விளைவு | ௮௧ | வேண்டல் | ௭௭ |
| விளைவும்விடையுங்கூட்டிச்சொல்லுதல் | ௮௧ | வேம்பு | ௬௯ |
| | | வேர் | ௩௭ |
| **வீ** | | வேலாயுதம் | ௫௭ |
| வீதல் | ௯௯ | வேலை | ௯௯ |
| **வெ** | | வேள்வித்தறி | ௪௩ |
| வெட்டல் | ௭௫ | **வை** | |
| வெட்பாலை | ௪௧ | வைசியா | ௩௯ |
| வெண்கலம் | ௫௬ | வையம் | ௯௬ |


உரிச்சொல்நிகண்டு அகராதி

முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

# சோதனபத்திரம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| எ | கக | ௦ | மால் |
| கக | உஉ | மறவின் | உறவின் |
| உரு | உச | ௦ | சுருள் |
| ருக | கரு | ௦ | வரி |
| ருஎ | கஉ | சுத்தி | சத்தி |